**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# 1999 ஆம் ஆண்டு சரக்குகளின் புவியியல் குறியீடுகள் (பதிவு செய்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம்

**(எண் 48/1999)**

**( 2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு )**

# THE GEOGRAPHICAL INDICATIONS OF GOODS (REGISTRATION AND PROTECTION) ACT, 1999

**(No. 48 of 1999)**

**(As on 31st October , 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# 1999 ஆம் ஆண்டு சரக்குகளின் புவியியல் குறியீடுகள் (பதிவு செய்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம்

**(எண் 48/1999)**

# THE GEOGRAPHICAL INDICATIONS OF GOODS (REGISTRATION AND PROTECTION) ACT, 1999

**(No. 48 of 1999)**

# PREFACE

This edition of The Geographical Indications of Goods (Registration and Protection) Act, 1999 ( No. 48 of 1999) as on 31st October , 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 13th March, 2021 on Pages from 26 to 81.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi , *(Signed)......*
13th March, 2021. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள 1999 ஆம் ஆண்டு சரக்குகளின் புவியியல் குறியீடுகள் (பதிவு செய்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம் (எண்48/1999) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2021, மார்ச் 13 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 26 முதல் 81 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ்மொழிப்பெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி, (ஒப்பம்)……
13, மார்ச் 2021. இந்திய அரசு செயலாளர்.

# THE GEOGRAPHICAL INDICATIONS OF GOODS (REGISTRATION AND PROTECTION) ACT, 1999

(No. 48 of 1999)

## CONTENTS


**Sections** **Pages**

### CHAPTER I

### PRELIMINARY

1. Short title, extent and commencement. 1
2. Definitions and interpretation. 1

### CHAPTER II

### THE REGISTER AND CONDITIONS FOR REGISTRATION

3. Registrar of Geographical Indications. 4
4. Power of Registrar to withdraw or transfer cases, etc. 5
5. Geographical Indications Registry and offices thereof. 5
6. Register of Geographical Indications. 5
7. Part A and Part B of the register. 6
8. Registration to be in respect of particular goods and area. 6
9. Prohibition of registration of certain geographical indications. 7
10. Registration of homonymous geographical indications. 8

### CHAPTER III

### PROCEDURE FOR AND DURATION OF REGISTRATION

11. Application for registration. 8
12. Withdrawal of acceptance. 10

# சரக்குகளின் புவியியல் குறியீடுகள் (பதிவுசெய்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம் 1999

(எண் 48/1999)

## பொருளடக்கம்


**பிரிவுகள்** **பக்கங்கள்**

அத்தியாயம் I

முன்னுரை

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். 1
2. பொருள் வரையறைகளும் பொருள்கோளும். 1

அத்தியாயம் II

பதிவேடும் பதிவுசெய்வதற்கான வரைக்கட்டுகளும்

3. புவியியல் குறியீடுகள் பதிவாளர். 4
4. வழக்குகள் முதலியவற்றை விலக்கிக் கொள்வதற்கு அல்லது மாற்றுவதற்குப் பதிவாளருக்குள்ள அதிகாரம். 5
5. புவியியல் குறியீடுகள் பதிவகமும் அதன் அலுவலகங்களும். 5
6. புவியியல் குறியீடுகள் பதிவேடு. 5
7. பதிவேட்டின் (அ) பகுதியும் (ஆ) பகுதியும். 6
8. பதிவானது குறிப்பான சரக்குகள் மற்றும் பகுதி பொறுத்ததாக இருத்தல்.. 6
9. குறித்த சில புவியியல் குறியீடுகள் பதிவுசெய்யப்படுவதைத் தடை செய்தல். 7
10. ஒரே பெயர் கொண்ட புவியியல் குறியீடுகளைப் பதிவுசெய்தல். 8

அத்தியாயம் III

பதிவுக்கான நெறிமுறையும் அதன் காலவரையும்

11. பதிவு செய்வதற்கான விண்ணப்பம். 8
12. ஏற்பினை விலக்கிக்கொள்ளுதல். 10

13. Advertisement of application. 11

14. Opposition to registration. 11

15. Correction and amendment. 12

16. Registration. 12

17. Application for registration as authorised user. 13

18. Duration, renewal, removal and restoration of registration. 14

19. Effect of removal from register for failure to pay fee for renewal. 16

**CHAPTER IV**

**EFFECT OF REGISTRATION**

20. No action for infringement of unregistered geographical indication. 16

21. Rights conferred by registration. 17

22. Infringement or registered geographical indications. 17

23. Registration to be prima facie evidence of validity. 20

24. Prohibition of assignment or transmission, etc. 20

**CHAPTER V**

**SPECIAL, PROVISIONS RELATING TO TRADE MARK AND PRIOR USERS**

25. Prohibition of registration of geographical indication as trade mark. 20

26. Protection to certain trade marks. 21

13. விண்ணப்பத்தை விளம்பரம் செய்தல். 11

14. பதிவு செய்ய எதிர்ப்பு. 11

15. சரி செய்தலும் திருத்தம் செய்தலும். 12

16. பதிவுசெய்தல். 12

17. அனுமதிபெற்ற பயனாளியாகப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம். 13

18. பதிவின் காலஅளவு, அதனைப் புதுப்பித்தல், நீக்குதல் மற்றும் மீட்டளித்தல். 14

19. புதுப்பிப்பதற்கான கட்டணத்தைச் செலுத்தத் தவறியதற்காக பதிவேட்டிலிருந்து நீக்குவதன் விளைவு. 16

அத்தியாயம் IV

பதிவுசெய்வதன் பலன்

20. பதிவுபெறாத புவியியல் குறியீட்டினை மீறுவதற்கு நடவடிக்கை இல்லை. 16

21. பதிவினால் அளிக்கப்படும் உரிமைகள். 17

22. பதிவுபெற்ற புவியியல் குறியீடுகளை மீறுதல். 17

23. பதிவானது செல்லுந்தன்மைக்கான முதல் நோக்குச் சான்றாக இருத்தல். 20

24. குறித்தளித்தல் அல்லது மாற்றம் செய்தல் முதலானவற்றைத் தடை செய்தல். 20

அத்தியாயம் V

வணிகக் குறிகள் மற்றும் முந்தைய பயனாளிகள் தொடர்பான சிறப்பு வகையங்கள்

25. புவியியல் குறியீட்டினை வணிகக் குறியாகப் பதிவு செய்வதைத் தடை செய்தல். 20

26. குறித்தசில வணிகக் குறிகளுக்குப் பாதுகாப்பு. 21

## CHAPTER VI

## RECTIFICATION AND CORRECTION OF THE REGISTER


27. Power to cancel or vary registration and to rectify the register. 22

28. Correction of register. 123

29. Alteration of registered geographical indications. 24

30. Adaptation of entries in register to amend or substitute classification of goods. 24


## CHAPTER VII

## APPEALS


31. Appeals to the High Court. 25

32. [Omitted.] 25

33. [Omitted.] 26

34. Procedure for application for rectification, etc., before High Court. 26

35. Appearance of Registrar in legal proceedings. 26

36. [Omitted.] 27


## CHAPTER VIII

## OFFENCES, PENALTIES AND PROCEDURE


37. Meaning of applying geographical indications. 27

38. Falsifying and falsely applying geographical indications. 28

39. Penalty for applying false geographical indications. 29

## அத்தியாயம் VI

### பதிவேட்டினைத் திருத்தியமைத்தலும் சரிசெய்தலும்


27. பதிவினை அறவுசெய்வதற்கு அல்லது மாற்றுவதற்கு மற்றும் பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்கு அதிகாரம் 22

28. பதிவேட்டினைத் திருத்தம் செய்தல். 123

29. பதிவுபெற்ற புவியியல் குறியீட்டினை மாற்றியமைத்தல். 24

30. சரக்குகளின் வகைப்பாட்டினைத் திருத்தம் செய்வதற்கு அல்லது மாற்றாக அமைப்பதற்கு பதிவேட்டிலுள்ள பதிவுகளை ஏற்று மேற்கொள்ளுதல். 24


## அத்தியாயம் VII

### மேல்முறையீடுகள்


31. உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடுகள். 25

32. [விட்டுவிடப்பட்டது] 25

33. [விட்டுவிடப்பட்டது] 26

34. திருத்தியமைத்தல் முதலானவற்றிற்காக உயர் நீதிமன்றத்தின் முன்பு விண்ணப்பம் செய்வதற்கான நெறிமுறை. 26

35. சட்ட நடவடிக்கைகளில் பதிவாளர் முன்னிலையாதல். 26

36. [விட்டுவிடப்பட்டது] 27


## அத்தியாயம் VIII

### குற்றச்செயல்கள், தண்டங்கள் மற்றும் நெறிமுறை


37. புவியியல் குறியீடுகளைப் பயன்படுத்துவதன் பொருள். 27

38. புவியியல் குறியீடுகளைப் பொய்யாக்குதலும் பொய்யாகப் பயன்படுத்தலும். 28

39. பொய்யான புவியியல் குறியீடுகளைப் பயன்படுத்துவதற்குத் தண்டனை. 29

| | | |
|---|---|---|
| 40. | Penalty for selling goods to which false geographicalindication is applied. | 30 |
| 41. | Enhanced penalty on second or subsequent conviction. | 31 |
| 42. | Penalty for falsely representing a geographical indication as registered. | 31 |
| 43. | Penalty for improperly describing a place of business as connected with the Geographical Indications Registry. | 33 |
| 44. | Penalty for falsification of entries in the register. | 33 |
| 45. | No offence in certain cases. | 33 |
| 46. | Forfeiture of goods. | 34 |
| 47. | Exemption of certain persons employed in ordinary course of business. | 34 |
| 48. | Procedure where invalidity of registration is pleaded by the accused. | 35 |
| 49. | Offences by companies. | 36 |
| 50. | Cognizance of certain offences and the powers of police officer for search and seizure. | 37 |
| 51. | Costs of defence of prosecution. | 38 |
| 52. | Limitation of prosecution. | 38 |
| 53. | Information as to commission of offence. | 38 |
| 54. | Punishment for abetement in India of acts done out of India. | 39 |

40. பொய்யான புவியியல் குறியீடு பயன்படுத்தப்பட்டிருக்கிற சரக்குகளை விற்பனை செய்வதற்குத் தண்டனை. 30

41. இரண்டாவது அல்லது அதற்குப் பிந்தியக் குற்றத் தீர்ப்பின் பேரில் உயரிய தண்டணை. 31

42. புவியியல் குறியீடு ஒன்றை, பதிவு செய்யப்பட்டதாகப் பொய்யாக எடுத்துரைப் பதற்கான தண்டனை. 31

43. தொழிலிடம் ஒன்றை, புவியியல் குறியீட்டுப் பதிவகத்துடன் தொடர்புடையதென முறைகேடாக விவரிப்பதற்குத் தண்டனை. 33

44. பதிவேட்டிலுள்ள பதிவுகளைப் பொய்யாக்குவதற்குத் தண்டனை. 33

45. குறித்தசில நேர்வுகளில் குற்றச்செயலாகாது. 33

46. சரக்குகளைப் பறிமுதல் செய்தல். 34

47. தொழிலின் வழக்கமான போக்கில் பணியமர்த்தப்பட்ட குறித்தசில பணியாளர்களுக்கு விலக்களிப்பு. 34

48. பதிவின் செல்லாநிலையது குற்றஞ்சாட்டப்பட்டவரால் வாதிடப்படுகிறவிடத்து நெறிமுறை. 35

49. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள். 36

50. குறித்தசில குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதலும், தேடுவதற்கும் கைப்பற்றுவதற்கும் காவல்துறை அலுவலருக்குள்ள அதிகாரங்களும். 37

51. குற்றவழக்கின் எதிர் வாதத்துக்கான செலவுத் தொகைகள். 38

52. குற்றவழக்கு தொடர்வதற்கான காலவரம்பு. 38

53. குற்றச்செயல் செய்யப்பட்டது பற்றிய தகவல். 38

54. இந்தியாவிற்கு வெளியே செய்யப்பட்டச் செயல்களுக்கு இந்தியாவில் உடந்தையாயிருப்பதற்குத் தண்டனை. 39

## CHAPTER IX

## MISCELLANEOUS


55. Protection of action taken in good faith. 39

56. Certain persons to be public servants. 39

57. Stay of proceedings where the validity of registration of the geographical indication is questioned etc. 39

58. Application for rectification of register to be made to High Court in certain cases. 41

59. Implied warranty on sale of indicated goods. 41

60. Powers of Registrar. 41

61. Exercise of discretionary power by Registrar. 42

62. Evidence before Registrar. 42

63. Death of party to a proceeding. 42

64. Extension of time. 42

65. Abandonment. 43

66. Suit for infringement, etc., to be instituted before district court. 43

67. Relief in suit for infringement or for passing off. 44

68. Authorised user to be impleaded in certain proceedings. 45

69. Evidence of entries in register, etc., and things done by the Registrar. 46

70. Registrar and other officers not compellable to produce register, etc. 46

71. Power to require goods to show indication of origin. 46

72. Certificate of validity. 47

## அத்தியாயம் IX

### பல்வகை


55. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. 39

56. குறித்தசில நபர்கள் அரசுப் பணியாளர்களாக இருத்தல். 39

57. புவியியல் குறியீட்டுப் பதிவின் செல்லுந்தன்மை எதிர்க்கப்படுகிறவிடத்து, நடவடிக்கையினை நிறுத்தி வைத்தல், முதலானவை. 39

58. குறித்தசில வழக்குகளில் பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்கான விண்ணப்பம் [உயர்நீதிமன்றத்திற்குச்] செய்யப்படுதல். 41

59. குறியீடு செய்யப்பட்ட சரக்குகளை விற்பனை செய்வதன் பேரில் உட்கிடையான பொறுப்புறுதி. 41

60. பதிவாளரின் அதிகாரங்கள். 41

61. பதிவாளரால் உளத்தேர்வு அதிகாரம் செலுத்தப்படுதல். 42

62. பதிவாளரின்¢ முன்பு சான்றளித்தல். 42

63. நடவடிக்கை ஒன்றுக்கான தரப்பினர் இறந்துபோதல். 42

64. கால நீட்சி. 42

65. கைவிடப்படுதல். 43

66. மீறுகைக்கான உரிமைவழக்கு முதலானவை மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு தொடுக்கப்பட வேண்டும். 43

67. மீறுகைக்கான அல்லது வாணிகப் போலிக்கான உரிமைவழக்கில் தீருதவி. 44

68. குறித்தசில நடவடிக்கைகளில் அனுமதிபெற்ற பயனாளி வழக்கிடப்படுதல். 45

69. பதிவேட்டின் பதிவுகள் முதலானவற்றுக்கும் பதிவாளரால் செய்யப்பட்ட செயல்களுக்குமானச் சான்று. 46

70. பதிவாளரும் பிற அலுவலர்களும் பதிவேடு முதலானவற்றை முன்னிடும்படி கட்டாயப்படுத்தப்படுதலாகாது. 46

71. சரக்குகள், தொடக்கத்தின் குறியீட்டைக் காட்டும்படி வேண்டுறுத்துவதற்கான அதிகாரம். 46

72. செல்லுந்தன்மைக்கான உறுதிச்சான்று. 47

| | | |
|---|---|---|
| 73. | Groundless threats of legal proceedings. | 48 |
| 74. | Address for service. | 48 |
| 75. | Trade usages, etc., to be taken into consideration. | 49 |
| 76. | Agents. | 49 |
| 77. | Indexes. | 49 |
| 78. | Documents open to public inspection. | 49 |
| 79. | Reports of Registrar to be placed before Parliament. | 50 |
| 80. | Fees and surcharge. | 50 |
| 81. | Savings in respect of certain matters in Chapter VIII. | 50 |
| 82. | Declaration as to title of geographical indication not registrable under the Registration Act, 1908. | 51 |
| 83. | Government to be bound. | 51 |
| 84. | Special provisions relating to applications for registration from citizens of convention countries. | 51 |
| 85. | Provision as to reciprocity. | 52 |
| 86. | Powers of Central Government to remove difficulties. | 52 |
| 87. | Power to make rules. | 56 |

| | | |
|---|---|---|
| 73. | சட்டமுறை நடவடிக்கைகள் பற்றி ஆதாரமற்ற அச்சுறுத்தல்கள். | 48 |
| 74. | சார்வு செய்வதற்கான முகவரி. | 48 |
| 75. | வணிக வழக்காறுகள் முதலானவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல். | 49 |
| 76. | முகவர்கள். | 49 |
| 77. | அட்டவணைகள். | 49 |
| 78. | பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்படும் ஆவணங்கள். | 49 |
| 79. | பதிவாளரின் விவரஅறிக்கை, நாடாளுமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல். | 50 |
| 80. | கட்டணங்களும் மேல்கட்டணமும். | 50 |
| 81. | VIII ஆம் அத்தியாயத்திலுள்ள குறித்தசில பொருட்பாடுகள் பொறுத்து காப்புரை. | 50 |
| 82. | 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யத்தக்கதல்லாத புவியியல் குறியீட்டின் உரிமைமூலம் குறித்து விளம்புகை. | 51 |
| 83. | அரசு கட்டுப்படுதல். | 51 |
| 84. | இணங்காறு நாடுகளில் குடிமக்களிடமிருந்து பெறப்படும் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் தொடர்பான சிறப்பு வகையங்கள். | 51 |
| 85. | எதிரீடு பற்றிய வகையம். | 52 |
| 86. | இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். | 52 |
| 87. | விதிகள் செய்வதற்கான அதிகாரம். | 56 |

# THE GEOGRAPHICAL INDICATIONS OF GOODS (REGISTRATION AND PROTECTION) ACT, 1999

(No. 48 of 1999)

[11th *June*, 2002]

An Act to provide for the registration and better protection of geographical indications relating to goods.

BE it enacted by Parliament in the Fiftieth Year of the Republic of India as follows:—

## CHAPTER I

## PRELIMINARY

Short title, extent and commencement.

1. This Act may be called the Geographical Indications of Goods (Registration and Protection) Act, 1999.

(2) It extends to the whole of India.

(3) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint; and different dates may be appointed for different provisions of this Act, and any reference in any such provision to the commencement of this Act shall be construed as a reference to the coming into force of that provision.

Definitions and interpretation.

2. (1) In this Act, unless the context otherwise requires,—

[2][* * * ]

(b) "authorised user" means the authorised user of a geographical indication registered under section 17;

(c) "deceptively similar" A geographical indication shall be deemed to be deceptively similar to another geographical indication if it so nearly resembles that other geographical indication as to be likely to deceive or cause confusion;

1. 15th September, 2003, *vide* notification No. S.O. 1051(E), dated 15th September, 2003, s*ee* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

2. Clause (*a*) omitted by Act 33 of 2021, s. 22 (w.e.f. 4-4-2021).

# சரக்குகளின் புவியியல் குறியீடுகள் (பதிவுசெய்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம் 1999

(எண் 48/1999)

[1999, டிசம்பர் 30]

சரக்குகள் தொடர்பான புவியியல் குறியீடுகளைப் பதிவு செய்வதற்கும் அவற்றை நன்கு பாதுகாப்பதற்கும் வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐம்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம், 1999 ஆம் ஆண்டு சரக்குகளின் புவியியல் குறியீடுகள் (பதிவுசெய்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

**(2)** இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

**(3)** இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்காகவும் வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம் மற்றும் அத்தகைய வகையம் எதிலும் இந்தச் சட்டத்தின் தொடக்கநிலை பற்றிய சுட்டுகை எதுவும் அந்த வகையம் செல்லாற்றல் பெறுவது பற்றிய ஒரு சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகளும் பொருள்கோளும்.

**2. (1)** இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

[2][* * * ]

(ஆ) ''அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளி'' என்பது, 17 ஆம் பிரிவின்படி பதிவுபெற்ற ஒரு புவியியல் குறியீட்டின் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளி என்று பொருள்படும்;

(இ) ''ஏமாற்றும் வகையிலான ஒப்புமை'' என்பது, புவியியல் குறியீடு ஒன்று, அது பெரும்பாலும் ஏமாற்றக்கூடிய வகையிலோ குழப்பம் விளைவிக்கக்கூடிய வகையிலோ வேறொரு புவியியல் குறியீட்டினைக் கிட்டத்தட்ட ஒத்திருக்குமாயின், வேறொரு புவியியல் குறியீட்டிற்கு ஏமாற்றும் வகையிலான ஒப்புமையில் இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

---

1. 2003, செப்டம்பர் 15, 2003 செப்டம்பர் 15 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண். எஸ்.ஓ. 1051 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

2. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் (அ) கூறு, (04—04—2021 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

(d) "district court" has the meaning assigned to it in the Code of Civil Procedure, 1908; 5 /1908.

(e) "geographical indication", in relation to goods, means an indication which identifies such goods as agricultural goods, natural goods or manufactured goods as originating, or manufactured in the territory of a country, or a region or locality in that territory, where a given quality, reputation or other characteristic of such goods is essentially attributable to its geographical origin and in case where such goods are manufactured goods one of the activities of either the production or of processing or preparation of the goods concerned takes place in such territory, region or locality, as the case may be.

*Explanation.*—For the purposes of this clause, any name which is not the name of a country, region or locality of that country shall also be considered as the geographical indication if it relates to a specific geographical area and is used upon or in relation to particular goods originating from that country, region or locality, as the case may be;

(f) "goods" means any agricultural, natural or manufactured goods or any goods of handicraft or of industry and includes food stuff;

(g) "indication" includes any name, geographical or figurative representation or any combination of them conveying or suggesting the geographical origin of goods to which it applies;

(h) "name" includes any abbreviation of a name;

(i) package" includes any case, box, container, covering, folder, receptacle, vessel, casket, bottle, wrapper, label, band, ticket, reel, frame, capsule, cap, lid, stopper and cork;

(j) "prescribed" means prescribed by rules made under this Act;

5/1908. (ஈ) ‘‘மாவட்ட நீதிமன்றம்’’ என்பது, **1908** ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருளை உடையதாகும்;

(உ) ‘‘புவியியல் குறியீடு’’ என்பது, சரக்குகளைப் பொறுத்தவரை, அத்தகைய சரக்குகளின் ஒரு குறிப்பிடப்பட்ட தரம், நற்பெயர் அல்லது பிற தன்மையானது, அதன் புவியியல் தொடக்கத்திற்கு அவசியம் சாட்டத்தக்கதாக இருக்கிறவிடத்தும் அத்தகைய சரக்குகள் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளாக இருக்கிறவிடத்து, தொடர்புடைய சரக்குகளின் உற்பத்தியின்அல்லது பதப்படுத்துதலின் அல்லது தயாரிப்பின் செயற்பாடுகளில் ஒன்று நேர்வுக்கேற்ப, அத்தகைய ஆட்சிநிலவரை, வட்டாரம் அல்லது வட்டாரப்பகுதியில் இடம்பெறுகிறவிடத்தும், வேளாண் சரக்குகளாக இயற்கையாக உண்டான சரக்குகளாக அல்லது உற்பத்தி செய்யப்பட்ட அல்லது தானே உண்டான சரக்குகளாக அல்லது ஒரு நாட்டின் ஆட்சிநிலவரையில் அல்லது அந்த ஆட்சிநிலவரையில் உள்ள ஒரு வட்டாரம் அல்லது வட்டாரப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டவையாக இனங்காட்டுகிற ஒரு குறியீடு என்று பொருள்படும்**.**

**விளக்கம் :—** இந்தக் கூறின் நோக்கங்களுக்காக, ஒரு நாட்டின் வட்டாரம் அல்லது வட்டாரப் பகுதியின் பெயராக இல்லாத பெயர் எதுவும்கூட, அது ஒரு குறித்துரைக்கப்பட்ட புவியியல் பகுதிக்குத் தொடர்புடையதாகுமாயினும், நேர்வுக்கேற்ப, அந்த நாடு, வட்டாரம் அல்லது வட்டாரப் பகுதியிலிருந்து தானே உண்டான குறிப்பான சரக்குகள் மீது அல்லது அது தொடர்பாகப் பயன்படுத்தப்படுமாயினும் புவியியல் குறியீடாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஊ) ‘‘சரக்குகள்’’ என்பது, வேளாண், இயற்கையான அல்லது உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் எவையும் என்றோ அல்லது கைவினை அல்லது தொழிற்சாலை சரக்குகள் எவையும் என்றோ பொருள்படும் மற்றும் உணவுப்பண்டத்தையும் உள்ளடக்கும்;

(எ) ‘‘குறியீடு’’ என்பது, சரக்குகள், எந்தப் புவியியல் தொடக்கத்திற்குப் பொருந்துகிறதோ அந்தப் புவியியல் தொடக்கம் எதனையும் அளிக்கும் அல்லது குறித்துணர்த்தும் பெயர், புவியியல் அல்லது உருவ அமைப்பு சார்ந்த சுட்டுகை அல்லது அவற்றின் சேர்க்கை எதனையும் உள்ளடக்கும்;

(ஏ) ‘‘பெயர்’’என்பது ,ஒரு பெயரின் சுருக்க வடிவம் எதனையும் உள்ளடக்கும்;

(ஐ) ‘‘சிப்பம்’’ என்பது, பை, பெட்டி, கொள்கலம், உறை, மடிப்பு, உறைகள், ஏனம், பாத்திரம், குப்பி, பொதியுரை, முகப்புச்சீட்டு, பட்டை சுட்டுச்சீட்டு, சுருள், சட்டம், மென்பொதியுறை, மேலடைப்பான், மூடி, குமிழ்மூடி மற்றும் தக்கை எதனையும் உள்ளடக்கும்;

(ஒ) ‘‘வகுத்துரைக்கப்பட்ட’’ என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(k) "producer", in relation to goods, means any person who,—

(i) if such goods are agricultural goods, produces the goods and includes the person who processes or packages such goods;

(ii) if such goods are natural goods, exploits the goods;

(iii) if such goods are handicraft or industrial goods, makes or manufactures the goods,

and includes any person who trades or deals in such production, exploitation, making or manufacturing, as the case may be, of the goods;

(l) "register" means the Register of Geographical Indications referred to in section 6;

(m) "registered" (with its grammatical variations) means registered under this Act;

(n) "registered proprietor", in relation to a geographical indication, means any association of persons or of producers or any organisation for the time being entered in the register as proprietor of the geographical indication;

(o) "Registrar" means the Registrar of Geographical Indications referred to in section 3;

[ [1]* * * ]

(2) Words and expressions used and not defined in this Act but defined in the Trade Marks Act, 1999 shall have the meanings respectively assigned to them in that Act. 47 / 1999.

---

1. Clause (*p*) omitted by Act 33 of 2021, s. 22 (w.e.f. 4-4-2021).

(ஓ) ''உற்பத்தியாளர்'' என்பது, சரக்குகளைப் பொறுத்தவரை.—

(i) அத்தகைய சரக்குகள் வேளாண் சரக்குகளாக இருக்குமாயின், சரக்குகளை விளைவிக்கும் நபர் எவரும் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய சரக்குகளைப் பதப்படுத்துகிற அல்லது சிப்பம் கட்டுகிற நபரை உள்ளடக்கும்;

(ii) அத்தகைய சரக்குகள் இயற்கையான சரக்குகளாக இருக்குமாயின், இயற்கை மூலப்பொருளை உழைத்துப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு நபர் எவரும் என்று பொருள்படும்;

(iii) அத்தகைய சரக்குகள் கைவினை அல்லது தொழில் சரக்குகளாக இருக்குமாயின் சரக்குகளை ஆக்குகிற அல்லது உற்பத்தி செய்கிற நபர் எவரும் என்று பொருள்படும்,

மற்றும் அத்தகைய சரக்குகளில் வணிகம் செய்கிற அல்லது, நேர்வுக்கேற்ப, உழைத்துப் பயன்படுத்துகிற ஆக்குவோரை அல்லது உற்பத்தி செய்கிற நபர் எவரையும் உள்ளடக்கும்;

(ஔ) ''பதிவேடு'' என்பது, **6** ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள புவியியல் குறியீட்டுப் பதிவேடு என்று பொருள்படும்**.**

(க) ''பதிவுபெற்ற'' என்பது, (அதன் இலக்கண வேறுபாடுகளுடன்) இந்தச் சட்டத்தின்படி பதிவுபெற்ற என்று பொருள்படும்;

(ங) ''பதிவுபெற்ற உரிமையாளர்'' என்பது, புவியியல் குறியீடு ஒன்றைப் பொறுத்தவரை, புவியியல் குறியீட்டின் உரிமையாளராகப் பதிவேட்டில் அப்போதைக்குப் பதிவுபெற்றுள்ள நபர்களின் அல்லது உற்பத்தியாளர்களின் சங்கம் எதுவும் அல்லது அமைப்பு எதுவும் என்று பொருள்படும்;

(ச) ''பதிவாளர்'' என்பது, **3** ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள புவியியல் குறியீடுகள் பதிவாளர் என்று பொருள்படும்;

[1][ * * * ]

47/1999. **(2)** இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு பொருள்வரையறை செய்யப்படாதவையும் ஆனால் **1999** ஆம் ஆண்டு வணிகக் குறிகள் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளவையுமான சொற்களும் சொற்றொடர்களும் அந்தச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை உடையனவாகும்;

**1.** சட்ட எண் **33/2021** இன் **22** ஆம் பிரிவினால் கூறு (ஞ) **(04–04–2021** முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது**.**

(3) In this Act, unless the context otherwise requires, any reference-

(a) to the use of a geographical indication shall be construed as a reference to the use of a printed or other visual representation of the geographical indication;

(b) to the use of a geographical indication in relation to goods shall be construed as a reference to the use of the geographical indication upon, or in any physical or in any other relation whatsoever, to such goods;

(c) to a registered geographical indication shall be construed as including a reference to a geographical indication registered in the register;

(d) to the Registrar shall be construed as including a reference to any officer when discharging the functions of the Registrar in pursuance of sub-section (*2*) of section 3;

(e) to the Geographical Indications Registry shall be construed as including a reference to any office of the Geographical Indications Registry.

## CHAPTER II

## THE REGISTER AND CONDITIONS FOR REGISTRATION

Registrar of Geographical Indications.

3. (1) The Controller-General of Patents, Designs and Trade Marks appointed under sub-section (1) of section 3 of the Trade Marks Act, 1999, shall be the Registrar of Geographical Indications.

(2) The Central Government may appoint such officers with such designations as it thinks fit for the purpose of discharging, under the superintendence and direction of the Registrar, such functions of the Registrar under this Act, as he may from time to time authorise them to discharge.

(3) இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) புவியியல் குறியீடு ஒன்றைப் பயன்படுத்துவதற்கான சுட்டுகை எதுவும் புவியியல் குறியீட்டின் அச்சிடப்பட்ட அல்லது கண்ணுக்குப் புலனாகும் பிற உருவப்படைப்பைப் பயன்படுத்துவதற்கான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) சரக்குகள் தொடர்பான புவியியல் குறியீடு ஒன்றைப் பயன்படுத்துவதற்கான சுட்டுகை எதுவும், அத்தகைய சரக்குகளின் பேரில், அல்லது இயற்பியல் எதிலும் அல்லது எவையேயாயினும் வேறு தொடர்பு எதிலும் உள்ள புவியியல் குறியீட்டினைப் பயன்படுத்துவதற்கான ஒரு சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(இ) பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்றுக்கான சுட்டுகை எதுவும், பதிவேட்டில் பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்றை உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஈ) பதிவாளருக்கான சுட்டுகை ஒன்றானது, 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க பதிவாளரின் செயற்பணிகளை ஆற்றும்போது அலுவலர் எவருக்குமான ஒரு சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(உ) புவியியல் குறியீடு பதிவகத்திற்கான சுட்டுகையானது, புவியியல் குறியீடு பதிவக அலுவலகம் எதற்குமான ஒரு சுட்டுகையை உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

## பதிவேடும் பதிவுசெய்வதற்கான வரைக்கட்டுகளும்

3. (1). 1999 ஆம் ஆண்டு வணிகக் குறிகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பதவியமர்த்தப்பெற்ற புனையுரிமைகள், வடிவமைப்புகள் மற்றும் வணிகக் குறிகள் தலைமைக் கட்டுப்பாட்டாளர், புவியியல் குறியீடுகள் பதிவாளராக இருப்பார்.

புவியியல் குறியீடுகள் பதிவாளர்.

(2) மைய அரசு, பதிவாளரின் கண்காணிப்பின் மற்றும் பணிப்புரையின் கீழ் இந்தச் சட்டத்தின்படி பதிவாளரின் அத்தகைய செயற்பணிகளை ஆற்றும்நோக்கத்திற்காக அவ்வப்போது அவர்களுக்கு அதிகாரமளிக்கிறவாறு ஆற்றுவதற்கு அத்தகைய அலுவலர்களை, தாம் பொருத்தமென நினைக்கும் பதவிப் பெயர்களுடன் பதவியமர்த்தலாம்.

Power of Registrar to withdraw or transfer cases, etc.

4. Without prejudice to the generality of the provisions of sub-section (*2*) of section 3, the Registrar may, by order in writing and for reasons to be recorded therein, withdraw any matter pending before an officer appointed under the said sub-section (*2*) and deal with such matter himself either *de novo* or from the stage it was so withdrawn or transfer the same to another officer so appointed who may, subject to special directions in the order of transfer, proceed with the matter either *de novo* or from the stage it was so transferred.

Geographical Indications Registry and offices thereof.

5. (1) For the purpose of this Act, there shall be established a Registry which shall be known as the Geographical Indications Registry.

(2) The head office of the Geographical Indications Registry shall be at such place as the Central Government may, by notification in the Official Gazette, specify, and for the purpose of facilitating the registrations of geographical indications, there may be established at such places as the Central Government may think fit branch offices of the Geographical Indications Registry.

(3) The Central Government may, by notification in the Official Gazette, define the territorial limits within which an office of the Geographical Indications Registry may exercise its functions.

(4) There shall be a seal of the Geographical Indications Registry.

Register of Geographical Indications.

6. For the purposes of this Act, a record called the Register of geographical indications shall be kept at the head office of the Geographical Indications Registry, wherein shall be entered all registered geographical indications with the names, addresses and descriptions of the proprietors, the names, addresses and descriptions of authorised users and such other matters relating to registered geographical indications as may be prescribed and such registers may be maintained wholly or partly on computer.

**4.** 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் வகையங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, பதிவாளர், எழுத்துவடிவிலான ஆணை வாயிலாகவும், அதில் பதிவுசெய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகவும், மேற்சொன்ன (2) ஆம் உட்பிரிவின்படி பதவியமர்த்தப்படும் ஓர் அலுவலர் முன்பு முடிவுறாநிலையிலிருக்கும் பொருட்பாடு எதனையும் விலக்கிக்கொண்டு அத்தகைய பொருட்பாட்டினை முதலிலிருந்தோ அல்லது எந்தக் கட்டத்தில் அது அவ்வாறு விலக்கிக்கொள்ளப்பட்டதோ அந்தக் கட்டத்திலிருந்தோ தாமே நடத்தலாம் அல்லது அதனை அவ்வாறு பதவியமர்த்தப்பட்ட, வேறோரு அலுவலருக்கு மாற்றலாம். அவர் மாற்றல் ஆணையில் உள்ள சிறப்புப் பணிப்புரைகளுக்கு உட்பட்டு அந்தப் பொருட்பாட்டினை முதலிலிருந்தோ அல்லது எந்தக் கட்டத்திலிருந்து அது அவ்வாறு மாற்றப்பட்டதோ அந்தக் கட்டத்திலிருந்தோ நடத்த முற்படலாம்.

வழக்குகள் முதலியவற்றை விலக்கிக் கொள்வதற்கு அல்லது மாற்றுவதற்குப் பதிவாளருக்குள்ள அதிகாரம்.

**5.** (1) இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, புவியியல் குறியீடுகள் பதிவகம் என்று வழங்கப்பெறும் பதிவகம் ஒன்று நிறுவப்பட்டு இருந்து வருதல் வேண்டும்.

புவியியல் குறியீடுகள் பதிவகமும் அதன் அலுவலகங்களும்.

(2) புவியியல் குறியீடுகள் பதிவகத்தின் தலைமை அலுவலகம், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் அத்தகைய இடத்தில் இருத்தல் வேண்டும், மற்றும் புவியியல் குறியீடுகளைப் பதிவு செய்ய வழிவகுப்பதற்காக, மைய அரசு,பொருத்தமெனக் கருதும் இடங்களில் புவியியல் குறியீடுகள் பதிவகத்தின் கிளை அலுவலகங்கள் நிறுவப்படலாம்.

(3) மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, புவியியல் குறியீடுகள் பதிவகத்தின் அலுவலகம் ஒன்று அதன்செயற்பணிகள் செலுத்தலாகும் ஆட்சிநிலவரை எல்லைகளை வரையறுக்கலாம்.

(4) புவியியல் குறியீடுகள் பதிவகத்திற்கு இலச்சினை ஒன்று இருத்தல் வேண்டும்.

**6.** (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, புவியியல் குறியீடுகள் பதிவுறு எனப்படும் பதிவுறு ஒன்று புவியியல் குறியீடுகள் பதிவகத்தின் தலைமை அலுவலகத்தில் வைத்துவரப்படுதல் வேண்டும், அதில் அனைத்து பதிவுபெற்ற புவியியல் குறியீடுகளையும், உரிமையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் விவரிப்புக்கள் ஆகியவற்றுடன், அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் விவரிப்புகளுடனும் வகுத்துரைக்கப்படலாகும் பதிவுபெற்ற புவியியல் குறியீடுகள் தொடர்பான பிற பொருட்பாடுகளுடனும் பதிவு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய பதிவேடுகள் முழுவதுமாகவோ அல்லது பகுதியளவிலோ கணினியில் வைத்து வரப்படுதல் வேண்டும்.

புவியியல் குறியீடுகள் பதிவேடு.

(2) Notwithstanding anything contained in sub-section (1), it shall be lawful for the Registrar to keep the records wholly or partly in computer floppies or diskettes or in any other electronic form, subject to such safeguards as may be prescribed.

(3) Where such register is maintained wholly or partly in computer floppies or diskettes or in any other electronic form under sub-section (2), any reference in this Act to any entry in the register shall be construed as the reference to the entry as maintained on computer floppies or diskettes or in any other electronic form, as the case may be.

(4) No notice of any trust, express or implied or constructive, shall be entered in the register and no such notice shall be receivable by the Registrar.

(5) Subject to the superintendence and direction of the Central Government, the register shall be kept under the control and management of the Registrar.

(6) There shall be kept at each branch office of the Geographical Indications Registry a copy of the register and such other documents mentioned in section 78 as the Central Government may, by notification in the Official Gazette, direct.

Part A and Part B of the register.

7. The register referred to in section 6 shall be divided into two Parts called respectively Part A and Part B.

(2) The particulars relating to the registration of the geographical indications shall be incorporated and form Part A of the register in the prescribed manner.

(3) The particulars relating to the registration of the authorised users shall be incorporated and form part of Part B of the register in the prescribed manner.

Registration to be in respect of particular goods and area.

8. (1) A geographical indication may be registered in respect of any or all of the goods, comprised in such class of goods as may be classified by the Registrar and in respect of a definite territory of a country, or a region or locality in that territory, as the case may be.

(2). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பதிவுறுக்களை முழுவதுமாகவோ பகுதியளவிலோ கணினி அச்சுகளில் அல்லது அச்சுத்தகடுகளில் அல்லது பிற மின்னணு வடிவம் எதிலும், வகுத்துரைக்கப்படலாகும் பாதுகாப்புகளுக்கு உட்பட்டு வைத்து வருவது பதிவாளருக்கு சட்டப்படியானதாகும்.

(3) அத்தகைய பதிவேடு எதுவும், (2) ஆம் உட்பிரிவின்படி முழுவதுமாகவோ, பகுதியளவிலோ கணினி அச்சுகளில் அல்லது அச்சுத்தகடுகளில் அல்லது பிற மின்னணு வடிவத்தில் வைத்து வரப்படுகிறவிடத்து, இந்தச் சட்டத்தில், பதிவேட்டிலுள்ள பதிவு எதனையும் குறித்த சுட்டுகையானது, நேர்வுக்கேற்ப கணினி அச்சுகளில் அல்லது அச்சுத் தகடுகளில் அல்லது பிற மின்னணு வடிவத்தில் வைத்து வரப்படும் பதிவுக்கான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) வெளிப்படையான அல்லது உட்கிடையான அல்லது கொள்நிலையான பொறுப்புக்கட்டளை எதனின் அறிவிப்பு எதுவும், பதிவேட்டில் பதிவுசெய்யப்படுதலாகாது, மற்றும் அத்தகைய அறிவிப்பு எதுவும் பதிவாளரால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகாது.

(5) மைய அரசின் கண்காணிப்பிற்கும் பணிப்புரைக்கும் உட்பட்டு, பதிவேடானது, பதிவாளரின் கட்டுப்பாட்டின் மற்றும் மேலாண்மையின் கீழ் வைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(6) புவியியல் குறியீடுகள் பதிவகத்தின் கிளை அலுவலகம் ஒவ்வொன்றிலும் பதிவேட்டின் மற்றும் மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகப் பணிக்கும் 78 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய பிற ஆவணங்களின் படி ஒன்று வைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

பதிவேட்டின் (அ) பகுதியும் (ஆ) பகுதியும்.

7. (1). 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடானது, முறையே (அ) பகுதி எனவும் (ஆ) பகுதி எனவும் வழங்கப்பெறும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.

(2) புவியியல் குறியீடுகளின் பதிவு தொடர்பான விவரங்கள், வகுத்துரைக்கப்பட்ட முறையில் பதிவேட்டில் ஒருங்குசேர்க்கப்பட்டு அதன் (அ) பகுதியாக அமைதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளிகளின் பதிவு தொடர்பான விவரங்கள், வகுத்துரைக்கப்பட்ட முறையில் பதிவேட்டில் ஒருங்குசேர்க்கப்பட்டு அதன் (ஆ) பகுதியாக அமைதல் வேண்டும்.

பதிவானது குறிப்பான சரக்குகள் மற்றும் பகுதி பொறுத்ததாக இருத்தல்.

8. (1) புவியியல் குறியீடு ஒன்று, பதிவாளர் வகைப்படுத்தலாகும் சரக்குகளின் வகையில் அடங்கியுள்ள சரக்குகளில் எவை பொறுத்தும் அல்லது அவை அனைத்தும் பொறுத்தும் மற்றும் ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஆட்சிநிலவரை அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த ஆட்சிநிலவரையில் உள்ள வட்டாரம் அல்லது வட்டாரப்பகுதி ஒன்று பொறுத்தும் பதிவு செய்யலாம்.

(2) The Registrar shall classify the goods under sub- section (1), as far as may be, in accordance with the International classification of goods for the purposes of registration of geographical indications.

(3) The Registrar may publish in the prescribed manner an alphabetical index of classification of goods referred to in sub-section (2).

(4) Any question arising as to the class within which any goods fall or the definite area as referred to in sub-section (1) in respect of which the geographical indication is to be registered or where any goods are not specified in the alphabetical index of goods published under sub-section (3) shall be determined by the Registrar whose decision in the matter shall be final.

Prohibition of registration of certain geographical indications.

9. A geographical indication—

(a) the use of which would be likely to deceive or cause confusion; or

(b) the use of which would be contrary to any law for the time being in force; or

(c) which comprises or contains scandalous or obscene matter; or

(d) which comprises or contains any matter likely to hurt the religious susceptibilities of any class or section of the citizens of India; or

(e) which would otherwise be disentitled to protection in a court; or

(f) which are determined to be generic names or indications of goods and are, therefore, not or ceased to be protected in their country of origin, or which have fallen into disuse in that country; or

(g) which, although literally true as to the territory, region or locality in which the goods originate, but falsely represent to the persons that the goods originate in another territory, region or locality, as the case may be,

shall not be registered as a geographical indication.

(2) பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின்படி புவியியல் குறியீடுகளைப் பதிவுசெய்யும் நோக்கங்களுக்காக, கூடியவரை, சரக்குகளின் பன்னாட்டிடை வகைப்பாட்டின்படி சரக்குகளை வகைப்படுத்துதல் வேண்டும்.

(3) பதிவாளர், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகளின் வகைப்பாட்டின் அகரவரிசைப் பட்டியல் ஒன்றை வகுத்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடலாம்.

(4) சரக்குகள் எவையும் எந்த வகைக்குள் வருகிறது அல்லது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு புவியியல் குறியீடு பதிவு செய்யப்படவுள்ள எந்தக் குறிப்பான பகுதி பொறுத்து புவியியல் குறியீடு பதிவு செய்யப்படவுள்ளது என்பது பற்றி அல்லது சரக்குகள் எவையும் (3) ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட சரக்குகளின் அகரவரிசை பட்டியலில் குறித்துரைக்கப்படாதவிடத்து, எழும் வினா எதுவும், பதிவாளரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும், அந்தப் பொருட்பாட்டில் அவருடைய முடிபே அறுதியானதாகும்.

**குறித்தசில புவியியல் குறியீடுகள் பதிவு செய்யப்—படுவதைத் தடை செய்தல்.**

9. எந்தப் புவியியல் குறியீடு ஒன்று,—

(அ) அதனைப் பயன்படுத்துவது ஏமாற்றம் அல்லது குழப்பம் விளைவிக்கக் கூடியதாக இருக்கக் கூடுமோ; அல்லது

(ஆ) அதனைப் பயன்படுத்துவது, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதற்கும் முரணாக இருக்கக்கூடுமோ; அல்லது

(இ) அவதூறு அல்லது ஆபாசப் பொருள் கூறினைக் கொண்டிருக்கிறதோ அல்லது அடக்கியிருக்கிறதோ; அல்லது

(ஈ) இந்தியக் குடிமக்களின் வகை அல்லது பிரிவு எதனின் சமய உணர்வினை ஊறுபடுத்தக்கூடிய பொருட்பாடு எதனையும் கொண்டிருக்கிறதோ அல்லது அடக்கியிருக்கிறதோ; அல்லது

(உ) நீதிமன்றம் ஒன்றின் பாதுகாப்பிற்குப் பிறவாறாக உரிமையற்றதாக இருக்கக்கூடுமோ; அல்லது

(ஊ) பொதுப்படையான பெயர்களாக அல்லது சரக்குகளின் குறியீடுகளாக தீர்மானிக்கப்பட்டு அதன் காரணமாக அது தோன்றிய நாட்டில் பாதுகாக்கப்படாத, அல்லது அற்றுப்போயுள்ள அல்லது அந்த நாட்டில் பயனற்றுப்போனதாகியுள்ளதோ; அல்லது

(எ) சரக்குகள் தோன்றிய ஆட்சிநிலவரை, வட்டாரம் அல்லது வட்டாரப்பகுதி பற்றி வெளிப்படையான பொருளில் உண்மையானதாக இருப்பினும், ஆனால் அந்தச் சரக்குகள் நேர்வுக்கேற்ப, வேறொரு ஆட்சி நிலவரையில், வட்டாரத்தில் அல்லது வட்டாரப் பகுதியில் தோன்றியது என்று பொய்யாக சுட்டிக்காட்டுமோ

அந்தப் புவியியல் குறியீடானது, ஒரு புவியியல் குறியீடாகப் பதிவு செய்யப்படுதலாகாது.

*Explanation 1*.—For the purposes of this section, "generic names or indications", in relation to goods, means the name of a goods which, although relates to the place or the region where the goods was originally produced or manufactured, has lost its original meaning and has become the common name of such goods and serves as a designation for or indication of the kind, nature, type or other property or characteristic of the goods.

*Explanation 2*.—In determining whether the name has become generic, account shall be taken of all factors including the existing situation in the region or place in which the name originates and the area of consumption of the goods.

Registration of homonymous geographical indications.

10. Subject to the provisions of section 7, a homonymous geographical indication may be registered under this Act, if the Registrar is satisfied, after considering the practical conditions under which the homonymous indication in question shall be differentiated from other homonymous indications and the need to ensure equitable treatment of the producers of the goods concerned, that the consumers of such goods shall not be confused or misled in consequence of such registration.

**CHAPTER III**

**PROCEDURE FOR AND DURATION OF REGISTRATION**

Application for registration.

11. (1) Any association of persons or producers or any organisation or authority established by or under any law for the time being in force representing the interest of the producers of the concerned goods, who are desirous of registering a geographical indication in relation to such goods shall apply in writing to the Registrar in such form and in such manner and accompanied by such fees as may be prescribed for the registration of the geographical indication.

(2) The application under sub-section (*1*) shall contain—

**விளக்கம் 1**.— இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, சரக்குகளைப் பொறுத்தவரை, ''பொதுப்படையான பெயர்கள் அல்லது குறியீடுகள்'' என்பது, சரக்குகள், எந்த இடத்தில் அல்லது வட்டாரத்தில் முதலில் தயாரிக்கப்பட்டதோ அல்லது உற்பத்திசெய்யப்பட்டதோ அந்த இடத்திற்கு அல்லது வட்டாரத்திற்குத் தொடர்புடையதாக இருந்தபோதிலும், தன் உள்ளபடியான, பொருளை இழந்து அத்தகைய சரக்குகளின் பொதுப்பெயராக ஆகியிருப்பதும் அந்தச் சரக்குகளுக்காக சிறப்புப் பெயராக அல்லது அந்தச் சரக்குகளின் வகை, தன்மை, மாதிரி அல்லது பிற பொதுப் பண்பு அல்லது இயல்பு ஆகியவற்றிற்கான குறியீடாகப் பயன்படுவதுமான சரக்குகளின் பெயர் என்று பொருள்படும்.

**விளக்கம் 2**.— பெயரானது, பொதுப்படையான பெயராக இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கையில், அந்தப் பெயர் எந்த வட்டாரத்தில் அல்லது இடத்தில் தோன்றியதோ அந்த வட்டாரத்தில் அல்லது இடத்தில் மற்றும் அந்தச் சரக்குகளை நுகரும் பகுதியிலும் இருந்துவரும் சூழல் உள்ளடங்கலான அனைத்து விவரக்கூறுகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஒரே பெயர் கொண்ட புவியியல் குறியீடுகளைப் பதிவுசெய்தல்.

**10.** 7 ஆம் பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு, எந்த நடைமுறை நிலைமைகளில் வினாவிலுள்ள ஒரே பெயர் கொண்ட புவியியல் குறியீடானது, வேறு ஒரே பெயர்க்கொண்ட புவியியல் குறியீட்டிலிருந்து வேறுபடுத்த வேண்டுமோ அந்த நடைமுறை நிலைமைகளையும், தொடர்புற்ற சரக்குகளின் உற்பத்தியாளர்கள் நேரிய வகையில் நடத்தப்படுவதை உறுதிசெய்வதன் தேவையையும் ஓர்வு செய்தபின்பு, அத்தகைய சரக்குகளை நுகர்வோர், அத்தகைய பதிவின் விளைவாக குழப்பமடைதலோ அல்லது தவறாக வழிநடத்தப்படுதலோ ஆகாது என்று பதிவாளர் தெளிவுறக்காண்பாராயின், இந்தச் சட்டத்தின்படி ஒரே பெயர் கொண்ட புவியியல் குறியீடானது பதிவு செய்யப்படலாம்.

## அத்தியாயம் III

## பதிவுக்கான நெறிமுறையும் அதன் காலவரையும்

பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

**11. (1)** சரக்குகள் தொடர்பான புவியியல் குறியீடு ஒன்றைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் தொடர்புடைய சரக்குகளின் உற்பத்தியாளர்களின் நலன்களைச் சார்பாற்றம் செய்கிற அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலுமோ அதன் வழியாலோ நிறுவப்பட்ட நபர்களின் அல்லது உற்பத்தியாளர்களின் சங்கம் எதுவும், அல்லது அமைப்பு அல்லது அதிகாரஅமைப்பு எதுவும், புவியியல் குறியீட்டினைப் பதிவு செய்வதற்காக, வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் முறையிலும் வகுத்துரைக்கப்படலாகும் கட்டணங்களைச் சேர்த்தும் எழுத்துவடிவில் பதிவாளருக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

**(2). (1)** ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பமானது—

(a) a statement as to how the geographical indication serves to designate the goods as originating from the concerned territory of the country or region or locality in the country, as the case may be, in respect of specific quality, reputation or other characteristics of which are due exclusively or essentially to the geographical environment, with its inherent natural and human factors, and the production, processing or preparation of which takes place in such territory, region or locality, as the case may be;

(b) the class of goods to which the geographical indication shall apply;

(c) the geographical map of the territory of the country or region or locality in the country in which the goods orginate or are being manufactured;

(d) the particulars regarding the appearance of the geographical indication as to whether it is comprised of the words or figurative elements or both;

(e) a statement containing such particulars of the producers of the concerned goods, if any, proposed to be initially registered with the registration of the geographical indication as may be prescribed; and

(f) Such other particulars as may be prescribed.

(3) A single application may be made for registration of a geographical indication for different classes of goods and fee payable therefor shall be in respect of each such class of goods.

(4) Every application under sub-section (1) shall be filed in the office of the Geographical Indications Registry within whose territorial limits, the territory of the country or the region or locality in the country to which the geographical indication relates is situated:

(அ) அதன் உள்ளார்ந்த இயல்பான மற்றும் மனிதக் காரணிகளுடன், புவியியல் சூழலுக்கு மட்டுமேயோ அல்லது அதற்கு இன்றியமையாமையோ உரியதான குறித்தவகைத் தரம், நற்பெயர் அல்லது பிற பண்புகள் பொறுத்து, நேர்வுக்கேற்ப, நாட்டின் தொடர்புற்ற ஆட்சிநிலவரை அல்லது வட்டாரம் அல்லது வட்டாரப்பகுதியிலிருந்து தோன்றியதாகவும் நேர்வுக்கேற்ப, அத்தகைய ஆட்சிநிலவரை, வட்டாரம் அல்லது வட்டாரப் பகுதியில், அதனை உற்பத்தி செய்வது, பதப்படுத்துவது அல்லது தயாரிப்பது நிகழ்வதாகவும் சரக்குகளைக் குறித்துக் கூறுவதற்குப் புவியியல் குறியீடு எவ்வாறு உதவுகிறது என்பது பற்றிய ஒரு விவரவுரை;

(ஆ) எந்தச் சரக்குகளின் வகைக்கு புவியியல் குறியீடு பொருந்துகிறது என்பது;

(இ) சரக்குகள் தோன்றப்பெறும் அல்லது உற்பத்தி செய்யப்படும் நாட்டின் ஆட்சிநிலவரை அல்லது நாட்டிலுள்ள வட்டாரம் அல்லது வட்டாரப் பகுதியின் புவியியல் வரைபடம்;

(ஈ) புவியியல் குறியீட்டுத் தோற்றம் தொடர்பாக, அது, சொற்களை அல்லது உருவப்படுத்திய கூறுகளை அல்லது அவை இரண்டையும் உள்ளடக்கியிருக்கிறதா என்பது பற்றிய விவரங்கள்;

(உ) புவியியல் குறியீட்டுப் பதிவுடன் தொடக்கத்தில் பதிவு செய்யப்படக் கருதப்பட்ட தொடர்புற்ற சரக்குகளின் உற்பத்தியாளர்கள், எவருமிருப்பின், அவர்களின் வகுத்துரைக்கப்படலாகும் விவரங்கள் அடங்கிய விவரவுரை ஒன்று; மற்றும்

(ஊ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற விவரங்கள்; ஆகியவற்றை அடக்கியிருத்தல் வேண்டும்.

27. (1) On application made in the prescribed manner to the [1][High Court] or to the Registrar by any person aggrieved, the [2][Registrar or the High Court, as the case may be,] may make such order as it may think fit for cancelling or varying the registration of a geographical indication or authorised user on the ground of any contravention, or failure to observe the condition entered on the register in relation thereto.

1. Subs. by Act 33 of 2021, s. 22, for "Appellate Board" (w.e.f. 4-4-2021).

2. Subs. by s. 22. ibid., for "tribunal" (w.e.f. 4-4-2021).

(3) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், வணிகத்தின்போது, ஒரு நபரின் பெயரை அல்லது தொழிலில் அந்த நபருக்கு முன்பிருந்தவரின் பெயரை, அத்தகைய பெயர், மக்களைக் குழப்புகிற அல்லது திசைத்திருப்புகிறதொரு முறையில் பயன்படுத்தப்படுகிறவிடத்து தவிர, பயன்படுத்துவதற்கு அந்த நபர் எவருக்குமுள்ள உரிமைக்கு எந்த வழியிலும் குந்தகம் விளைவிக்காது.

47/1999. (4) 1999 ஆம் ஆண்டு வணிகக் குறிகள் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்திலோ அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எந்தத் தேதியிலிருந்து அத்தகைய பயன்பாடு அல்லது பதிவு, இந்தச் சட்டத்தின்படி பதிவுசெய்யப்பட்ட புவியியல் குறியீடு எதனையும் மீறுவதானது, இந்தச் சட்டத்தின்படி அத்தகைய புவியியல் குறியீடு பொறுத்து பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளிக்குத் தெரிய நேர்ந்ததோ அந்தத் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழிவுற்ற பின்பு, அந்தத் தேதியானது அந்த மீறுகை, அத்தகைய உரிமையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளிக்குத் தெரிய நேர்ந்த தேதிக்கு முந்திய தேதியாக இருந்து, அத்தகைய புவியியல் குறியீடு, கெட்ட எண்ணத்தில் பயன்படுத்தப்படவோ பதிவு செய்யப்படவோ இல்லையாயின் அந்த வணிகக் குறி மேற்சொன்ன 1999 ஆம் ஆண்டு வணிகக் குறிகள் சட்டத்தின் வகையங்களின்படி அல்லது அந்தத் தேதியில் அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி வெளியிடப்பட்டிருக்கிறது என்ற வரைக்கட்டிற்கு உட்பட்டு, வணிகக் குறி ஒன்றைப் பயன்படுத்துவது அல்லது பதிவு செய்வது தொடர்பாக, நடவடிக்கை எடுக்கப்படுதலாகாது.

## அத்தியாயம் VI

## பதிவேட்டினைத் திருத்தியமைத்தலும் சரிசெய்தலும்

27. (1) குறையுற்ற நபர் எவராலும், [1][உயர் நீதிமன்றத்திற்கு] அல்லது பதிவாளருக்கு வகுத்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படும் விண்ணப்பத்தின்பேரில், [2][பதிவாளரோ, அல்லது நேர்வுக்கேற்ப உயர் நீதிமன்றமோ] புவியியல் குறியீடு ஒன்றின் அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் பதிவினை, அது தொடர்பான பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட வரைக்கட்டினை மீறுதல் அல்லது கடைபிடிக்கத் தவறுதல் எதனின் காரணமாகவும் அறவு செய்வதற்காக அல்லது மாற்றுவதற்காக தாம் பொருத்தமென நினைக்கும் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

பதிவினை அறவு செய்வதற்கு அல்லது மாற்றுவதற்கு மற்றும் பதிவேட்டினை திருத்தியமைப்பதற்கு அதிகாரம்.

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியத்திற்கு'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

2. மேற்பட்டி சட்டத்தின் 22 ஆம் பிரிவினால் ''தீர்ப்பாயம்'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021) முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(2) Any person aggrieved by the absence or omission from the register of any entry, or by any entry made in the register without sufficient cause, or by any entry wrongly remaining on the register, or by any error or defect in any entry in the register, may apply in the prescribed manner to the [1][High Court] or to the Registrar, and the [2][Registrar or the High Court, as the case may be,] may make such order for making, expunging or varying the entry as it may think fit.

(3) The [2][Registrar or the High Court, as the case may be,] may in any proceeding under this section decide any question that may be necessary or expedient to decide in connection with the rectification of the register.

(4) The [2][Registrar or the High Court, as the case may be,], of its own motion, may, after giving notice in the prescribed manner to the parties concerned and after giving them an opportunity of being heard, make any order referred to in sub-section (1) or sub-section(*2*).

(5) Any order of the [1][High Court] rectifying the register shall direct that notice of the rectification shall be served upon the Registrar in the prescribed manner who shall upon receipt of such notice rectify the register accordingly.

Correction of register.

28. The Registrar may, on application made in the prescribed manner by the registered proprietor or the authorised user,—

(a) correct any error in the name, address or description of the registered proprietor or the authorised user, as the case may be, of a geographical indication, or any other entry relating to the geographical indication on the register;

(b) enter any change in the name, address or description of the association of persons or of producers or any ogranisation or authority, as the case may be, who is registered as proprietor of a geographical indication on the register;

---

1. Subs. by Act 33 of 2021, s. 22, for "Appellate Board" (w.e.f. 4-4-2021).

2. Subs. by s. 22. *ibid*., for "tribunal" (w.e.f. 4-4-2021).

(2) பதிவேட்டில் பதிவு எதுவும் இல்லாமையினால் அல்லது விடுகையினால் அல்லது போதிய காரணமின்றி பதிவேட்டில் செய்யப்பட்ட பதிவு எதனாலும், அல்லது பதிவேட்டில் பதிவு எதுவும் தவறாக இருப்பதால் அல்லது பதிவு எதிலும் உள்ள தவறு அல்லது குறைபாட்டினால் குறையுற்ற நபர் எவரும், வகுத்துரைக்கப்பட்ட முறையில் [1][உயர் நீதிமன்றத்திற்கு] அல்லது பதிவாளருக்கு விண்ணப்பம் செய்யலாம் மற்றும் [2][பதிவாளருக்கோ, அல்லது நேர்வுக்கேற்ப உயர் நீதிமன்றத்திற்கோ] அந்தப் பதிவினைச் செய்வதற்கு, எடுத்துவிடுவதற்கு அல்லது மாற்றுவதற்கு தாம் பொருத்தமென நினைக்கிற ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) [2][பதிவாளருக்கோ, அல்லது நேர்வுக்கேற்ப உயர் நீதிமன்றத்திற்கோ] இந்தப் பிரிவின்படியான நடவடிக்கை எதிலும், பதிவேட்டினைத் திருத்தியமைப்பது தொடர்பாக முடிவு செய்வதற்குத் தேவைப்படலாகும் அல்லது உகந்ததாகும் வினா எதனையும் முடிவு செய்யலாம்.

(4) [2][பதிவாளருக்கோ, அல்லது நேர்வுக்கேற்ப உயர் நீதிமன்றத்திற்கோ] தானே முற்பட்டு, வகுத்துரைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய தரப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுத்த பின்பும், அவர்களுக்கு, விசாரிக்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று நல்கிய பின்பும், (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆணை எதனையும் பிறப்பிக்கலாம்.

(5) பதிவேட்டினைத் திருத்தியமைக்கும் [1][உயர் நீதிமன்றத்தின்] ஆணை எதுவும், திருத்தியமைப்பு அறிவிப்பு, வகுத்துரைக்கப்பட்ட முறையில் பதிவாளருக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும் என்று பணித்தல் வேண்டும், அவர் அத்தகைய அறிவிப்பினைப் பெற்றுக்கொள்வதன் பேரில், அதன்படியே அந்தப் பதிவேட்டினைத் திருத்தியமைத்தல் வேண்டும்.

பதிவேட்டினைத் திருத்தம் செய்தல்.

**28.** பதிவாளர், பதிவுபெற்ற உரிமையாளராலோ அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியாலோ வகுத்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில்,—

(அ) பதிவேட்டில் புவியியல் குறியீடு ஒன்றின் அல்லது புவியியல் குறியீடு தொடர்பான வேறு பதிவு எதனின் பதிவுபெற்ற உரிமையாளர் அல்லதுநேர்வுக்கேற்ப அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் பெயர், முகவரி அல்லது விவரிப்பில் உள்ள பிழை எதனையும் திருத்தியமைக்கலாம்;

(ஆ) பதிவேட்டில் புவியியல் குறியீடு ஒன்றின் உரிமையாளராக, பதிவுபெற்றிருக்கும், நேர்வுக்கேற்ப, நபர்களின் அல்லது உற்பத்தியாளர்களின் குழுமம் அல்லது அமைப்பு அல்லது அதிகாரஅமைப்பு எதனின் பெயர், முகவரி அல்லது விவரிப்பில் உள்ள மாற்றம் எதனையும், பதிவு செய்யலாம்;

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியத்திற்கு'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.
2. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ''தீர்ப்பாயம்'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(c) cancel the entry of a geographical indication on the register;

(d) strike out any goods or class or classes of goods from those in respect of which a geographical indication is registered from the register,

and may make any consequential amendment or alteration in the certificate of registration, and for that purpose, may require the certificate of registration to be produced to him.

Alteration of registered geographical indications.

29. (1) The registered proprietor of a geographical indication may apply in the prescribed manner to the Registrar for leave to add to or alter the geographical indication in any manner not substantially affecting the identity thereof, and the Registrar may refuse leave or may grant it on such terms and subject to such limitations as he may think fit.

(2) The Registrar may cause an application under this section to be advertised in the prescribed manner in any case where it appears to him that it is expedient so to do, and where he does so, if within the prescribed time from the date of the advertisement any person gives notice to the Registrar in the prescribed manner of the opposition to the application, the Registrar shall, after hearing the parties if so required, decide the matter.

(3) Where leave is granted under this section, the geographical indication as altered shall be advertised in the prescribed manner, unless the application has already been advertised under sub-section (2).

Adaptation of entries in register to amend or substitute classification of goods.

30. (1) The Registrar shall not make any amendment of the register which would have the effect of adding any goods or classes of goods to those in respect of which a geographical indication is registered (whether in one or more classes) immediately before the amendment is to be made or antedating the registration of a geographical indication in respect of any goods:

(இ) பதிவேட்டில், புவியியல் குறியீடு ஒன்றின் பதிவினை அறவு செய்யலாம்;

(ஈ) எந்தச் சரக்குகள் அல்லது சரக்குகளின் வகை அல்லது வகைகள் பொறுத்து, புவியியல் குறியீடு ஒன்று பதிவு செய்யப்படுகிறதோ, அந்தச் சரக்குகள் அல்லது சரக்குகளின் வகை அல்லது வகைகள் எவற்றையும் பதிவேட்டிலிருந்து அடித்துவிடலாம்;

மற்றும் பதிவு உறுதிச்சான்றில் அதன் விளைவாக திருத்தம் அல்லது மாற்றம் எதனையும் செய்யலாம், மற்றும் அந்த நோக்கத்திற்காகப் பதிவு உறுதிச்சான்றினை அவரால் முன்னிடப்பட வேண்டுமெனக் கோரலாம்.

பதிவுபெற்ற புவியியல் குறியீட்டினை மாற்றியமைத்தல்.

**29.** (1) புவியியல் குறியீடு ஒன்றின் பதிவுபெற்ற உரிமையாளர், புவியியல் குறியீட்டின் தனித்துவத்தைக் கணிசமாகப் பாதிக்காத எந்த முறையிலும் அதனுடன் கூடுதலாகச் சேர்ப்பதற்கு அல்லது அதனை மாற்றுவதற்கு அனுமதிக்காக, வகுத்துரைக்கப்பட்ட முறையில் பதிவாளருக்கு விண்ணப்பம் செய்யலாம் மற்றும் பதிவாளர், பதிவு செய்ய அனுமதி மறுக்கலாம் அல்லது தாம் பொருத்தமென நினைக்கும் அத்தகைய வரையுரைகளின் பேரிலும் அத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டும் அனுமதி வழங்கலாம்.

(2) பதிவாளர், இந்தப் பிரிவின்படியான விண்ணப்பம் ஒன்றை எந்நேர்விலும் அவ்வாறு செய்வது உகந்ததென தமக்குத் தோன்றுகிறவிடத்து, வகுத்துரைக்கப்பட்ட முறையில் விளம்பரம் செய்யப்படச் செய்விக்கலாம், மற்றும் அவர் அவ்வாறு செய்கிறவிடத்து, விளம்பரத் தேதியிலிருந்து வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நபர் எவரும் வகுத்துரைக்கப்பட்ட முறையில் பதிவாளருக்கு அறிவிப்பு கொடுப்பாராயின், பதிவாளர், தரப்பினர்களை விசாரித்த பின்பு, அவ்வாறு தேவைப்படுமாயின் பொருட்பாட்டினை முடிபுசெய்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி அனுமதி வழங்கப்படுகிறவிடத்து, மாற்றம் செய்யப்பட்டவாறான புவியியல் குறியீடானது, (2) ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பம் ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டிருந்தாலன்றி, வகுத்துரைக்கப்பட்ட முறையில் விளம்பரம் செய்யப்படுதல் வேண்டும்.

சரக்குகளின் வகைப்பாட்டி—னைத் திருத்தம் செய்வதற்கு அல்லது மாற்றாக அமைப்பதற்கு பதிவேட்டிலுள்ள பதிவுகளை ஏற்று மேற்கொள்ளுதல்.

**30.** (1) பதிவாளர், எந்தச் சரக்குகள் பொறுத்து (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகைகளில்) புவியியல் குறியீடு ஒன்று திருத்தம் செய்யப்படவுள்ளதை ஒட்டி அல்லது சரக்குகள் எவை பொறுத்தும் புவியியல் குறியீடு ஒன்றின் பதிவினைத் திருத்தம் செய்வதற்கு முன்பு பதிவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தச் சரக்குகள் எவற்றையும் அல்லது சரக்குகளின் வகைகள் எவற்றையும் சேர்க்கும் விளைவினைக் கொண்டிருக்கக்கூடியதான, பதிவேட்டில் திருத்தம் எதனையும் செய்தலாகாது:

Provided that this sub-section, shall not apply when the Registrar is satisfied that compliance therewith would involve complexity and that the addition or antedating, as the case may be, would not affect any substantial quantity of goods and would not substantially prejudice the rights of any person.

(2) A proposal so to amend the register shall be brought to the notice of the registered proprietor and every authorised user of the geographical indication affected and advertised in the prescribed manner, and may be opposed before the Registrar by any person aggrieved on the ground that the proposed amendment contravenes the provisions of sub-section (1).

## CHAPTER VII

## [1][APPEALS]

Appeals to the [2][High Court].

31. (1) Any person aggrieved by an order or decision of the Registrar under this Act, or the rules made thereunder, may prefer an appeal to the [2][High Court] within three months from the date on which the order or decision sought to be appealed against is communicated to such person preferring the appeal.

(2) No appeal shall be admitted if it is preferred after the expiry of the period specified under sub-section (1):

Provided that an appeal may be admitted after the expiry of the period specified therefore, if the appellant satisfies the [1][High Court] that he had sufficient cause for not preferring the appeal within the specified period.

[3] [* * *]

*32. [Bar of jurisdiction of courts, etc.]-Omitted by The Tribunals Reforms Act*, 2021 (33 *of* 2021), *s*.22 (*w.e.f.* 4-4-2021).

---

1. Subs. by Act 33 of 2021, s. 22, for "APPEALS TO THE APPELLATE BOARD" (w.e.f. 4-4-2021).

2. Subs. by s. 22, *ibid*., for "Appellate Board" (w.e.f. 4-4-2021).

3. Sub-section (3) omitted by Act 33 of 2021, s. 22 (w.e.f. 4-4-2021).

**வரம்புரையாக:** இந்த உட்பிரிவானது, அதற்கு இணங்கி நடப்பது சிக்கல் உள்ளாக்கக்கூடும் என்றும் சேர்க்கை அல்லது நேர்வுக்கேற்ப, முன்தேதியிடப்படுவது கணிசமான சரக்குகளின் வகை எதனையும் பாதிக்கக்கூடாது என்றும் நபர் எவரின் உரிமைகளையும் கணிசமாகக் குந்தகமாக்காது என்றும், பதிவாளர் மனநிறைவடையும்போது, பொருந்தாது.

(2) பதிவேட்டினை அவ்வாறு திருத்தம் செய்வதற்கான கருத்துரு ஒன்று குறையுற்ற புவியியல் குறியீட்டின் பதிவுபெற்ற உரிமையாளரின் மற்றும் ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் கவனத்திற்குக் கொண்டு வந்து வகுத்துரைக்கப்பட்ட முறையில் விளம்பரம் செய்யப்படுதல் வேண்டும், மற்றும் கருதப்பட்ட திருத்தம் (1) ஆம் உட்பிரிவின் வகையங்களை மீறுகிறது என்ற காரணத்தின் பேரில் குறையுற்ற நபர் எவராலும் பதிவாளர் முன்பு எதிர்ப்பு தெரிவிக்கப்படலாம்.

## அத்தியாயம் VII

### [1][மேல்முறையீடுகள்]

**31. (1)** இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியோ பதிவாளரின் ஆணை அல்லது முடிபு ஒன்றினால் குறையுற்ற நபர் எவரும், எந்தத் தேதியன்று எதிராக மேல்முறையீடு செய்யப்பட முற்படும் ஆணை அல்லது முடிபு, அந்த மேல்முறையீட்டினைக் கொணரும் அத்தகைய நபருக்குத் தெரிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் [2][உயர் நீதிமன்றத்திடம்] மேல்முறையீடு ஒன்றைக் கொணரலாம். [2][உயர் நீதிமன்றத்திற்கு] மேல்முறையீடுகள்.

(2) மேல்முறையீடு எதுவும், அது (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்டுள்ள காலஅளவு கழிவுற்ற பின்பு கொணரப்படுமாயின், ஏற்கப்படுதலாகாது:

**வரம்புரையாக:** மேல்முறையீடு ஒன்று அதற்காகக் குறித்துரைக்கப்பட்ட காலஅளவு கழிவுற்ற பின்பு, அந்தக் குறித்துரைக்கப்பட்ட காலஅளவிற்குள் மேல்முறையீட்டினைக் கொணராததற்கு தாம் போதிய காரணம் கொண்டிருந்தார் என்று மேல்முறையீட்டாளர், [2][உயர் நீதிமன்றத்தை] மனநிறைவடையச் செய்வாராயின், ஏற்றுக்கொள்ளப்படலாம்.

[3] [* * *]

***32.** [நீதிமன்றங்களின் அதிகாரவரம்புக்குத் தடை முதலானவை.] — தீர்ப்பாயங்கள் சீர்திருத்தங்கள் சட்டம், 2021 இன் (33/2021) 22 ஆம் பிரிவினால் (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.*

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியத்திற்கு மேல்முறையீடுகள்'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

2. மேற்படிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியம்'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

3. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் உட்பிரிவு (3), (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

*33. [Procedure of the Appellate Board.]- Omitted by s. 22, ibid. (w.e.f. 4-4-2021).*

Procedure for application for rectification, etc., before [1][High Court].

34. (1) An application for rectification of the register made to the [1][High Court] under section 27 shall be in such form as may be prescribed.

(2) A certified copy of every order or judgment of the [1][High Court] relating to a registered geographical indication under this Act shall be communicated to the Registrar by the [1][High Court] and the Registrar shall give effect to the order of the Board and shall, when so directed, amend the entries in, or rectify, the register in accordance with such order.

Appearance of Registrar in legal proceedings.

35. (1) The Registrar shall have the right to appear and be heard—

(a) in any legal proceedings before the [1][High Court] in which the relief sought includes alteration or rectification of the register or in which any question relating to the practice of the Geographical Indications Registry is raised;

(b) in any appeal to the Board from an order of the Registrar on an application for registration of a geographical indication or authorised user—

(i) which is not opposed, and the application is either refused by the Registrar or is accepted by him subject to any amendments, modifications, conditions or limitations, or

(ii) which has been opposed and the Registrar considers that his appearance is necessary in the public interest,

and the Registrar shall appear in any case if so directed by the Board.

---

1. Subs. by s. 22, *ibid*., for "Appellate Board" (w.e.f. 4-4-2021).

*33. [மேல்முறையீட்டு வாரியத்தின் நெறிமுறை] – தீர்ப்பாயங்கள் சீர்திருத்தங்கள் சட்டம், 2021 இன் (33/2021) 22 ஆம் பிரிவினால் (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.*

திருத்தியமைத்தல் முதலானவற்றிற்காக [1][உயர் நீதிமன்றத்தின்] முன்பு விண்ணப்பம் செய்வதற்கான நெறிமுறை.

**34. (1).** 27ஆம் பிரிவின்படி, பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்காக [1][உயர் நீதிமன்றத்திற்கு] செய்யப்படும் விண்ணப்பம் ஒன்று, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

**(2)** இந்தச் சட்டத்தின்படியான பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்று தொடர்பான [1][உயர் நீதிமன்றத்தின்] ஆணை அல்லது தீர்ப்புரை ஒவ்வொன்றின் உறுதிச்சான்றிடப்பட்ட படி ஒன்று, [1][உயர் நீதிமன்றத்தால்] பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும், மற்றும் பதிவாளர், வாரியத்தின் ஆணைக்கு செல்திறம் கொடுத்தல் வேண்டும் மற்றும் அவ்வாறு பணிக்கப்படும்போது, அத்தகைய ஆணைக்கிணங்க, பதிவேட்டிலுள்ள பதிவுகளைத் திருத்தம் செய்தலோ அல்லது திருத்தியமைத்தலோ வேண்டும்.

சட்ட நடவடிக்கைகளில் பதிவாளர் முன்னிலையாதல்.

**35. (1)** பதிவாளர்–

(அ) [1][உயர் நீதிமன்றத்தின்] முன்புள்ள எந்தச் சட்ட நடவடிக்கைகளில், நாடப்பட்ட தீருதவியானது பதிவேட்டினை மாற்றுவதை அல்லது திருத்தியமைப்பதை உள்ளடக்குகிறதோ, அல்லது புவியியல் குறியீட்டுப் பதிவகத்தின் நடைமுறை தொடர்பான பிரச்சினை எதுவும் எழுப்பப்படுகிறதோ அந்தச் சட்ட நடவடிக்கைகள் எவற்றிலும்;

(ஆ) (i) எதிர்க்கப்படாததும், மற்றும் விண்ணப்பமானது பதிவாளரால் ஏற்க மறுக்கப்பட்டோ, அல்லது திருத்தமைவுகள், மாற்றமைவுகள், வரைக்கட்டுகள் அல்லது வரம்புகள் எவற்றிற்கும் உட்பட்டு அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டோ இருக்கிற, அல்லது

(ii) எதிர்க்கப்பட்டிருந்து, மற்றும் பதிவாளர், தாம் முன்னிலையாவது, பொதுநலனில் தேவையானதெனக் கருதுகிற

புவியியல் குறியீடு அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளி ஒன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒன்றின் பேரில் பதிவாளரின் ஆணை ஒன்றிலிருந்து வாரியத்திற்கு செய்யப்படும் மேல்முறையீடு எதிலும், முன்னிலையாகி விசாரணை செய்யப்படுவதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும் பதிவாளர், வாரியத்தால் அவ்வாறு பணிக்கப்படுவாராயின் எந்நேர்விலும் முன்னிலையாதல் வேண்டும்.

---

1. சட்ட எண் 33/ 2021 இன் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியம்'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(2) Unless the [1][High Court] otherwise directs, the Registrar may, in lieu of appearing, submit a statement in writing signed by him, giving such particulars as he thinks proper of the proceedings before him relating to the matter in issue or of the grounds of any decision given by him affecting it, or of the practice of the Geographical Indications Registry in like cases, or of other matters relevant to the issues and within his knowledge as Registrar, and such statement shall be evidence in the proceeding.

*36.[Costs of Registrar in proceedings before Appellate Board.]-Omitted by The Tribunal Reforms Act* 2021 (33 *of* 2021), *s.* 22 (w.e.f. 4-4-2021).

## CHAPTER VIII

## OFFENCES, PENALTIES AND PROCEDURE

Meaning of applying geographical indications.

37. (1) A person shall be deemed to apply a geographical indication to goods who—

(a) applies it to the goods themselves; or

(b) applies it to any package in or with which the goods are sold, or exposed for sale, or had in possession for sale or for any purpose of trade or manufacture; or

(c) places, encloses or annexes any goods which are sold, or exposed for sale, or had in possession for sale or for any purpose of trade or manufacture, in or with any package or other thing to which a geographical indication has been applied; or

(d) uses a geographical indication in any manner reasonably likely to lead to the belief that the goods in connection with which it is used are designated or described by that geographical indication; or

1. Subs. by s. 22, *ibid*., for "Appellate Board" (w.e.f. 4-4-2021).

(2) [1][உயர்நீதிமன்றம்] பிறவாறாகப் பணித்தாலன்றி, பதிவாளர், முன்னிலையாவதற்குப் பதிலாக வழக்கெழுவினாவிலுள்ள பொருட்பாடு தொடர்பாக தம்முன்புள்ள நடவடிக்கைகளின் அல்லது அதனைப் பாதிக்கும் வகையில் தம்மால் கொடுக்கப்பட்ட முடிபு எதனின் ஆதாரங்களின், அல்லது அதுபோன்ற நேர்வுகளில் புவியியல் குறியீடுகள் பதிவகத்தின் நெறிமுறையின், அல்லது வழக்கெழுவினா தொடர்பாகவும் பதிவாளர் அறிந்தவாறுமான பிற பொருட்பாடுகளின், தாம் தக்கதென நினைக்கும் அத்தகைய விவரங்களைக் கொடுத்து, தம்மால் கையொப்பமிடப்பட்ட எழுத்துவடிவிலான, விவரவுரை ஒன்றை அனுப்பிவைக்கலாம்.

***36.*** *[மேல்முறையீட்டு வாரியத்தின் முன்புள்ள நடவடிக்கைகளில் பதிவாளரின் செலவுத்தொகைகள்.] தீர்ப்பாயங்கள் சீர்திருத்தங்கள் சட்டம், **2021** இன் **(33/2021)** **22** ஆம் பிரிவினால் **(04–04–2021** முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.*

## அத்தியாயம் VIII

## குற்றச்செயல்கள், தண்டனைகள் மற்றும் நெறிமுறை

**37.** (1) சரக்குகளின் புவியியல் குறியீட்டினை– புவியியல் குறியீடுகளைப் பயன்படுத்துவதன் பொருள்.

(அ) சரக்குகளுக்காகவே பயன்படுத்துகிற; அல்லது

(ஆ) எந்தச் சிப்பத்தில் அல்லது எந்தச் சிப்பத்துடன் சரக்குகள் விற்கப்படுகின்றனவோ, அல்லது விற்பதற்காக வெளிப்படுத்தப்படுகின்றனவோ, அல்லது விற்பதற்காக உடைமையில் வைத்திருக்கப்பட்டனவோ அல்லது வணிக அல்லது உற்பத்தி நோக்கம் எதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றனவோ அந்தச் சிப்பம் எதற்கும் பயன்படுத்துகிற; அல்லது

(இ) விற்கப்படுகிற, அல்லது, விற்பனைக்காக வெளிப்படுத்தப்பட்ட அல்லது விற்பனைக்காகவோ அல்லது வணிக அல்லது உற்பத்தி நோக்கம் எதற்காகவுமோ புவியியல் குறியீடு ஒன்று பயன்படுத்தப்பட்டிருக்கிற சிப்பம் அல்லது பிற பொருள் எதிலும் அல்லது எதனுடனும் உடைமையில் வைத்திருந்த சரக்குகள் எவற்றையும் வைக்கிற, சேர்க்கிற அல்லது இணைக்கிற; அல்லது

(ஈ) எந்தச் சரக்குகள் தொடர்பாக அது பயன்படுத்தப்படுகிறதோ அந்தச் சரக்குகள் அந்தப் புவியியல் குறியீட்டினால் பெயரிடப்படுகின்றன அல்லது விவரிக்கப்படுகின்றன என்று நம்புவதற்கு எந்த முறையிலும் தகுவாக வழிவகுக்கக்கூடிய புவியியல் குறியீடு ஒன்றினைப் பயன்படுத்துகிற; அல்லது

---

1. சட்ட எண் 33/ 2021 இன் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியம்'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(e) in relation to the goods uses a geographical indication in any sign, advertisement, invoice, catalogue, business letter, business paper, price list or other commercial documents and goods are delivered to a person in pursuance of a request or order made by reference to the geographical indication as so used.

(2) A geographical indication shall be deemed to be applied to goods whether it is woven in, impressed on, or otherwise worked into, or annexed or affixed to, the goods or to any package or other thing.

Falsifying and falsely applying geographical indications.

38. (1) A person shall be deemed to falsify a geographical indication who, either,—

(a) without the assent of the authorised user of the geographical indication makes that geographical indication or deceptively similar geographical indication; or

(b) falsifies any genuine geographical indication, whether by alteration, addition, effacement or otherwise.

(2) A person shall be deemed to falsely apply to goods a geographical indication who, without the assent of the authorised user of the geographical indication,—

(a) applies such geographical indication or a deceptively similar geographical indication to goods or any package containing goods;

(உ) சரக்குகள் தொடர்பாக புவியியல் குறியீடு ஒன்றினைக் குறி, விளம்பரம், விவரப்பட்டி, புத்தகப்பட்டி, வணிகச்சீட்டு, வணிகத்தாள், விலைப் பட்டியல் அல்லது பிற வணிக ஆவணங்கள் எவற்றிலும் பயன்படுத்துகிறதும், சரக்குகள் அவ்வாறு பயன்படும் புவியியல் குறியீட்டுச் சுட்டுகையினால் செய்யப்படும் ஒரு வேண்டுகோள் அல்லது ஆணைக்கு இணங்க ஒப்படைவு செய்யப்படுகிற,

ஒரு நபர் புவியியல் குறியீடு ஒன்றினைப் பயன்படுத்துபவராகக் கொள்ளப்படுவார்.

(2) புவியியல் குறியீடு ஒன்று, அது சரக்குகளில் அல்லது சிப்பம் அல்லது பிற பொருள் எதிலும் செய்யப்பட்டு, அதன் மீது பொறிக்கப்பட்டு, அல்லது அதில் பிறவாறாக வேலைப்பாடு செய்யப்பட்டு அல்லது அதனுடன் இணைக்கப்பட்டு அல்லது ஒட்டப்பட்டு இருப்பினும், அந்தச் சரக்குகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

புவியியல் குறியீடுகளைப் பொய்யாக்குதலும் பொய்யாகப் பயன்படுத்தலும்.

**38.** (1). (அ) புவியியல் குறியீட்டில் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் இசைவின்றி, அந்தப் புவியியல் குறியீட்டினை அல்லது ஏமாற்றும் வகையில் அதே மாதிரியான புவியியல் குறியீட்டினைச் செய்கிற; அல்லது

(ஆ) உண்மையான புவியியல் குறியீடு எதனையும் மாற்றம் செய்தல், சேர்த்தல், உருவழித்தல் மூலமாகவோ பிறவாறாகவோ பொய்யானதாக்குகிற

நபர் ஒருவர், புவியியல் குறியீடு ஒன்றைப் பொய்யானதாக்குபவராகக் கொள்ளப்படுவார்

(2) புவியியல் குறியீட்டில் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் இசைவின்றி,—

(அ) அத்தகைய புவியியல் குறியீட்டினை அல்லது ஏமாற்றும் வகையில் அதே மாதிரியான புவியியல் குறியீடு ஒன்றினைச் சரக்குகளுக்கு அல்லது சரக்குகளை அடக்கியிருக்கும் சிப்பம் எதற்கும் பயன்படுத்துகிற;

(b) uses any package bearing a geographical indication which is identical with or deceptively similar to the geographical indication of such authorised user, for the purpose of packing, filling or wrapping therein any goods other than the genuine goods of the authorised user of the geographical indication.

(3) Any geographical indication falsified as mentioned in sub-section (1) or falsely applied as mentioned in sub-section (2), is in this Act referred to as a false geographical indication.

(4) In any prosecution for falsifying a geographical indication or falsely applying a geographical indication to goods, the burden of proving the assent of proprietor shall lie on the accused.

Penalty for applying false geographical indications.

39. Any person who,—

(a) falsifies any geographical indication; or

(b) falsely applies to goods any geographical indication; or

(c) makes, disposes of, or has in his possession, any die, block, machine, plate or other instrument for the purpose of falsifying or of being used for falsifying, a geographical indication; or

(d) applies to any goods to which an indication of the country or place in which they were made or produced or the name and the address of the manufacturer or person for whom the goods are manufactured is required to be applied under section 71, a false indication of such country, place, name or address; or

(ஆ) அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் புவியியல் குறியீட்டுடன் ஒத்திருக்கும் அல்லது ஏமாற்றும் வகையில் அதே போன்றிருக்கும் புவியியல் குறியீடு ஒன்றைக் கொண்டிருக்கும் சிப்பம் எதனையும் புவியியல் குறியீட்டின் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் உண்மையான சரக்குகளை அல்லது பிற சரக்குகள் எவற்றையும் அதனைச் சிப்பம் கட்டும், நிரப்பும் அல்லது சுற்றி அட்டையிடும் நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிற

நபர் ஒருவர், புவியியல் குறியீடு ஒன்றைச் சரக்குகளுக்குப் பொய்யாகப் பயன்படுத்துபவராகக் கொள்ளப்படுவார்.

(3). (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொய்யாக்கப்பட்ட அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொய்யாகப் பயன்படுத்தப்பட்ட புவியியல் குறியீடு எதுவும், இந்தச் சட்டத்தில் பொய்யான புவியியல் குறியீடு என குறிப்பிடப்படுகிறது.

(4) சரக்குகளின் புவியியல் குறியீடு ஒன்றைப் பொய்யாக்குவதற்கான அல்லது புவியியல் குறியீடு ஒன்றைப் பொய்யாகப் பயன்படுத்துவதற்கான குற்றவழக்கு எதிலும், உரிமையாளரின் இசைவினை மெய்ப்பிக்கும் சுமையானது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உற்றதாகும்.

பொய்யான புவியியல் குறியீடுகளைப் பயன்படுத்துவத–ற்குத் தண்டனை.

39. (அ) புவியியல் குறியீடு எதனையும் பொய்யாக்குகிற; அல்லது

(ஆ) புவியியல் குறியீடு எதனையும் சரக்குகளுக்குப் பொய்யாகப் பயன்படுத்துகிற; அல்லது

(இ) புவியியல் குறியீடு ஒன்றைப் பொய்யானதாக்குகிற அல்லது பொய்யானதாக்குவதற்காக பயன்படுத்தும் நோக்கத்திற்காக பொறிப்புக்கட்டை, அச்சுக்கட்டை, விசைப்பொறி, பொறித்தட்டு அல்லது பிற கருவி எதனையும் செய்கிற, அயலடைவு செய்கிற, அல்லது தம் உடைமையில் வைத்திருக்கிற; அல்லது

(ஈ) சரக்குகள், எவற்றிற்கும், எந்த நாட்டில் அல்லது எந்த இடத்தில் அவை செய்யப்பட்டனவோ அந்த நாட்டின் அல்லது இடத்தின் அல்லது சரக்குகள் எந்த உற்பத்தியாளருக்காக அல்லது நபருக்காக உற்பத்தி செய்யப்படுகின்றனவோ அந்த உற்பத்தியாளர் அல்லது நபரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றின் குறியீடு ஒன்று 71 ஆம் பிரிவின்படி பயன்படுத்தப்பட வேண்டுறுத்தப்பட்டுள்ள அந்த நாட்டின், இடத்தின், பெயரின் அல்லது முகவரியின் பொய்யானக் குறியீடு ஒன்றைப் பயன்படுத்துகிற; அல்லது

(e) tampers with, alters or effaces an indication of origin which has been applied to any goods to which it is required to be applied under section 71; or

(f) causes any of the things above-mentioned in this section to be done,

shall, unless he proves that he acted, without intent to defraud, be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to three years and with fine which shall not be less than fifty thousand rupees but which may extend to two lakh rupees:

Provided that the court may, for adequate and special reasons to be mentioned in the judgment, impose a sentence of imprisonment for a term of less than six months or a fine of less than fifty thousand rupees.

Penalty for selling goods to which false geographical indication is applied.

40. Any person who sells, lets for hire or exposes for sale, or hires or has in his possession for sale, goods or things to which any false geographical indication is applied or which, being required under section 71 to have applied to them an indication of the country or place in which they were made or produced or the name and address of the manufacturer, or person for whom the goods are manufactured or without the indications so required, shall, unless he proves,-

(a) that, having taken all reasonable precautions against committing an offence against this section, he had at the time of commission of the alleged offence no reason to suspect the genuineness of the geographical indication or that any offence had been committed in respect of the goods; or

(b) that, on demand by or on behalf of the prosecutor, he gave all the information in his power with respect to the person from whom he obtained such goods or things; or

(உ) எந்தச் சரக்குகளுக்கு 71 ஆம் பிரிவின்படி தொடக்கத்தின் குறியீடு பயன்படுத்தப்பட வேண்டுறுத்தப்படுகிறதோ, அந்தச் சரக்குகள் எவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிற தொடக்கக் குறியீடு ஒன்றினைத் திருத்தி மாற்றுகிற, மாற்றியமைக்கிற அல்லது உருமாற்றம் செய்கிற; அல்லது

(ஊ) செய்யப்பட வேண்டுமென்று இந்தப் பிரிவில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் எதனையும் செய்விக்கிற

நபர் எவரும், அவர் மோசடி செய்யும் எண்ணம் இல்லாமல் செயலுற்றார் என்று மெய்ப்பித்தாலன்றி, ஆறு மாதங்களுக்குக் குறைவாக இருக்கலாகாத ஆனால் அது மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கலாகும் ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனையும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாக ஆனால் அது இரண்டு இலட்சம் ரூபாய்வரை நீட்டிக்கலாகும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் குறிப்பிடப்பட வேண்டிய போதுமான மற்றும் சிறப்பு காரணங்களுக்காக, ஆறு மாதங்களுக்குக் குறைவான ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனைக்கானத் தீர்ப்புத்தண்டனையோ அல்லது ஐம்பது ஆயிரம் ரூபாய்க்குக் குறைவான ஓர் அபராதமோ விதிக்கலாம்.

பொய்யான புவியியல் குறியீடு பயன்படுத்தப் பட்டிருக்கிற சரக்குகளை விற்பனை செய்வதற்குத் தண்டனை.

**40.** எந்தச் சரக்குகளுக்கு அல்லது பொருள்களுக்குப் பொய்யான புவியியல் குறியீடு எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ அல்லது அது 71 ஆம் பிரிவின்படி அவை எந்த நாட்டில் அல்லது இடத்தில் செய்யப்பட்டனவோ அல்லது தயாரிக்கப்பட்டனவோ அந்த நாட்டின் அல்லது இடத்தின் அல்லது உற்பத்தியாளரின், அல்லது எந்த நபருக்காக சரக்குகள் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ அந்த நபரின் பெயர் மற்றும் முகவரியின் குறியீடு ஒன்றினை அவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டுறுத்தப்படும் அல்லது அவ்வாறு வேண்டுறுத்தப்படும் குறியீடுகள் இல்லாமல் அந்தச் சரக்குகளை அல்லது பொருள்களை விற்பனை செய்கிற, வாடகைக்கு விடுகிற அல்லது விற்பனை செய்வதற்காக வெளிப்படுத்துகிற, அல்லது வாடகையில் எடுக்கிற அல்லது விற்பனை செய்வதற்காக தம் உடைமையில் வைத்திருக்கிற நபர் எவரும்,—

(அ) இந்தப் பிரிவுக்கு எதிரான குற்றச்செயல் ஒன்றைச் செய்வதற்கு எதிராக அனைத்து தகுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுத்திருந்து அவர் சாட்டியுரைக்கப்பட்ட குற்றச்செயல் செய்யப்பட்ட நேரத்தில் புவியியல் குறியீட்டின் உண்மை நிலையையோ அல்லது சரக்குகள் பொறுத்து குற்றச்செயல் எதுவும் செய்யப்பட்டிருக்கிறது என்று ஐயம்கொள்வதற்கு காரணம் எதுவும் கொண்டிருக்கவில்லை என்றோ; அல்லது

(ஆ) குற்றவழக்கு நடத்துபவராலோ அவர் சார்பாகவோ செய்யப்படும் கோரிக்கையின் பேரில், அத்தகைய சரக்குகளை அல்லது பொருள்களை அவர் எவரிடமிருந்து பெற்றாரோ அந்த நபர் பொறுத்து தம் ஆற்றலுக்குள் உள்ள அனைத்து தகவல்களையும் அவர் கொடுத்தார் என்றோ; அல்லது

(c) that otherwise he had acted innocently,

be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to three years and with fine which shall not be less than fifty thousand rupees but which may extend to two lakh rupees:

Provided that the court may, for adequate and special reasons to be mentioned in the judgment, impose a sentence of imprisonment for a term of less than six months or a fine of less than fifty thousand rupees.

Enhanced penalty on second or subsequent conviction.

41. Whoever having already been convicted of an offence under section 39 or section 40 is again convicted of any such offence shall be punishable for the second and for every subsequent offence, with imprisonment for a term which shall not be less than one year but which may extend to three years and with fine which shall not be less than one lakh rupees but which may extend to two lakh rupees:

Provided that the court may, for adequate and special reason to be mentioned in the judgment, impose a sentence of imprisonment for a term of less than one year or a fine of less than one lakh rupees:

Provided further that for the purposes of this section, no cognizance shall be taken of any conviction made before the commencement of this Act.

Penalty for falsely representing a geographical indication as registered.

42. (1) No person shall make any representation—

(a) with respect to a geographical indication, not being a registered geographical indication, to the effect that it is a registered geographical indication; or

(b) to the effect that a registered geographical indication is registered in respect of any goods in respect of which it is not in fact registered; or

(இ) பிறவாறாக அவர் குற்றமற்று செயல்பட்டிருக்கிறார் என்றோ;

மெய்ப்பித்தாலன்றி, ஆறு மாதங்களுக்குக் குறைவாக இருக்கலாகாத ஆனால் அது மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனையும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கலாகாத ஆனால் அது இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் குறிப்பிடப்பட வேண்டிய போதுமான மற்றும் சிறப்புக் காரணங்களுக்காக, ஆறு மாதங்களுக்குக் குறைவான ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனைக்கான தீர்ப்புத் தண்டனையோ அல்லது ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவான ஓர் அபராதமோ விதிக்கலாம்.

இரண்டாவது அல்லது அதற்குப் பிந்தியக் குற்றத் தீர்ப்பின் பேரில் உயரிய தண்டனை.

**41.** 39 ஆம் பிரிவின்படியோ 40 ஆம் பிரிவின்படியோ குற்றச்செயல் ஒன்றுக்காக ஏற்கெனவே தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்து அத்தகைய குற்றச்செயல் எதற்காகவும் மீண்டும் தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிற எவரொருவரும், இரண்டாவதும் அதற்குப் பிந்திய குற்றச்செயல் ஒவ்வொன்றுக்கும், ஓர் ஆண்டுக்குக் குறையாமல் இருக்க வேண்டிய ஆனால் அது, மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனையும் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கலாகாத ஆனால் அது இரண்டு இலட்சம் ரூபாய்வரை நீட்டிக்கலாகும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் குறிப்பிடப்பட வேண்டிய போதுமான மற்றும் சிறப்பு காரணங்களுக்காக, ஓர் ஆண்டுக்குக் குறைவான ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனையோ அல்லது ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறைவான அபராதமோ விதிக்கலாம்:

**மேலும் வரம்புரையாக:** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு செய்யப்பட்ட குற்றத்தீர்ப்பு எதுவும், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுதலாகாது.

புவியியல் குறியீடு ஒன்றை, பதிவு செய்யப்பட்டதாகப் பொய்யாக சுட்டிக்காட்டுவ–தற்கான தண்டனை.

**42. (1)** நபர் எவரும்—

(அ) பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்றாக இல்லாத புவியியல் குறியீடு ஒன்று பொறுத்து, அது, ஒரு பதிவுபெற்ற புவியியல் குறியீடு என்றபடிக்கு; அல்லது

(ஆ) பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்று, அது எந்தச் சரக்குகள் பொறுத்து உள்ளபடியே பதிவு செய்யப்பெறவில்லையோ அந்தச் சரக்குகள் எவற்றையும் பொறுத்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றபடிக்கு; அல்லது

(c) to the effect that registration of a geographical indication gives an exclusive right to the use thereof in any circumstances in which having regard to limitation entered on the register, the registration does not in fact give that right.

(2) If any person contravenes any of the provisions of sub-section (1), he shall be punishable with imprisonment for a term which may extend to three years, or with fine, or with both.

(3) For the purposes of this section the use in India in relation to a geographical indication of the words "registered geographical indication" or any other expression, symbol or sign like "R.G.I." referring whether expressly or impliedly to registration, shall be deemed to import a reference to registration in the register, except—

(a) where that word or other expression, symbol or sign is used in direct association with other words delineated in characters at least as large as those in which that word or other expression, symbol or sign is delineated and indicating that the reference to registration as a geographical indication under the law of a country outside India being a country under the law of which the registration referred to is in fact in force; or

(b) where that other expression, symbol or sign is of itself such as to indicate that the reference is to such registration as is mentioned in clause (a); or

(c) where that word is used in relation to a geographical indication registered under the law of a country outside India and in relation solely to goods to be exported to that country for use in that country.

(இ) புவியியல் குறியீடு ஒன்றைப் பதிவு செய்வதானது, பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட வரம்புகளைக் கருத்தில் கொண்டு, எந்தச் சூழ்நிலைகளில் பதிவானது உள்ளபடியே அந்த உரிமையைக் கொடுக்காதோ அந்தச் சூழ்நிலைகள் எவற்றிலும் அதனைப் பயன்படுத்துவதற்கான தனிப்பட்ட உரிமை ஒன்றைக் கொடுக்கிறது என்றபடிக்கு

முறையீடு எதுவும் செய்தலாகாது.

(2) நபர் எவரும், (1) ஆம் உட்பிரிவின் வகையங்களில் எதனையும் மீறுவாராயின், அவர் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனையோ, அல்லது அபராதமோ, அல்லது அவை இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(3) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்கு, புவியியல் குறியீடு ஒன்று தொடர்பாக, "பதிவுபெற்ற புவியியல் குறியீடு" என்ற சொற்களை வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ பதிவினைச் சுட்டும் பிற சொற்றொடர், சின்னம் அல்லது "RGI" போன்ற குறி எதனையும் இந்தியாவில் பயன்படுத்துவதானது—

(அ) அந்தச் சொல், அல்லது பிற சொற்றொடர், சின்னம் அல்லது குறியானது பெரிதும் குறைந்த தன்மைகளில் விரித்துரைக்கும் பிற சொற்றொடருடன் தனிக்குறியீடுகளில் வரையப்பட்ட அந்தச் சொல் அல்லது பிற சொற்றொடர் சின்னம் அல்லது குறியானது குறிப்பிட்ட பதிவு வரையப்பட்டு உள்ளபடியே செல்லாற்றலில் உள்ள நாடாக இருக்கும் இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு நாட்டின் சட்டத்தின்படி புவியியல் குறியீடு ஒன்றாகப் பதிவின் சுட்டுகைகளைக் குறிக்கும் நேரடியான தொடர்பில் பயன்படுத்தப்படுகிறவிடத்து தவிர; அல்லது

(ஆ) அந்தப் பிற சொற்றொடர், சின்னம் அல்லது குறியானது, அதுவே, சுட்டுகையானது (அ) கூறில் குறிப்பிடப்பட்டவாறு, அத்தகைய பதிவுக்கான சுட்டுகை என்று குறிப்பிடப்படும் அத்தகையதாக இருக்கிறது என்கிறவிடத்து தவிர; அல்லது

(இ) அந்தச் சொல்லானது, இந்தியாவுக்கு வெளியே ஒரு நாட்டின் சட்டத்தின்படி பதிவுசெய்யப்பட்ட ஒரு புவியியல் குறியீடு தொடர்பாகவும் அந்த நாட்டில் பயன்படுத்துவதற்காக அந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ள சரக்குகளுக்கு மட்டும் தொடர்பாகவும் பயன்படுத்தப்படுகிறவிடத்து தவிர

பதிவேட்டிலுள்ள பதிவுக்கான ஒரு குறியீட்டினை உட்பொருள்களைக் கொண்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

Penalty for improperly describing a place of business as connected with the Geographical Indications Registry.

43. If any person uses on his place of business, or on any document issued by him, or otherwise, words which would reasonably lead to the belief that his place of business is, or is officially connected with, the Geographical Indications Registry, he shall be punishable with imprisonment for a term which may extend to two years, or with fine, or with both.

Penalty for falsification of entries in the register

44. If any person makes, a false entry in the register, or a writing falsely purporting to be a copy of an entry in the register, or produces or tenders or causes to be produced or tendered, in evidence any such writing, knowing the entry or writing to be false, he shall be punishable with imprisonment for a term which may extend to two years, or with fine, or with both.

No offence in certain cases.

45. The provisions of sections 39, 40 and 41 shall in relation to a registered geographical indication or authorised user of such geographical indication, be subject to the rights created or recognised by this Act and no act or omission shall be deemed to be an offence under the aforesaid sections if,—

(a) the alleged offence relates to a registered geographical indication and the act or omission is permitted under this Act; and

(b) the alleged offence relates to a registered geographical indication and the act or omission is permitted under any other law for the time being in force.

**43.** நபர் எவரும், தம் தொழிலிடத்தின் பேரிலோ, அல்லது தம்மால் வழங்கப்படும் ஆவணம் எதன்மீதுமோ அல்லது பிறவாறாகவோ, தம் தொழிலிடமானது, புவியியல் குறியீட்டுப் பதிவகம் எனவோ அல்லது அலுவல் முறையில் அதனுடன் தொடர்புடையது எனவோ நம்புவதற்குத் தகுவான வழிவகுக்கக்கூடிய சொற்களைப் பயன்படுத்துவாராயின், அவர் இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனையோ, அல்லது அபராதமோ, அல்லது அவை இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

தொழிலிடம் ஒன்றை, புவியியல் குறியீட்டுப் பதிவகத்துடன் தொடர்பு-டையதென முறைகேடாக விவரிப்பதற்குத் தண்டனை.

**44.** நபர் எவரும், பதிவேட்டில் பொய்யான பதிவு ஒன்றை அல்லது பதிவேட்டிலுள்ள பதிவு ஒன்றின் படியாக இருப்பதாகப் பொய்யாகப் புலப்படும் எழுத்தாவணம் ஒன்றைச் செய்வாராயின், அல்லது செய்யப்படச் செய்விப்பாராயின், அல்லது அத்தகைய எழுத்தாவணம் எதனையும் அந்தப் பதிவு அல்லது எழுத்தானது பொய்யானதென்று அறிந்து சான்றாக முன்னிடுவாராயின் அல்லது அளிக்க முன்வருவாராயின், அல்லது முன்னிடப்பட அல்லது அளிக்க முன்வரச் செய்விப்பாராயின், அவர் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலவரைக்குச் சிறைத்தண்டனையோ, அல்லது அபராதமோ, அல்லது அவை இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

பதிவேட்டிலுள்ள பதிவுகளைப் பொய்யாக்கு-வதற்குத் தண்டனை.

**45. 39**, **40** மற்றும் **41** ஆம் பிரிவுகளின் வகையங்கள், அத்தகைய பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்று அல்லது புவியியல் குறியீட்டின் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளி தொடர்பாக, இந்தச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது ஏற்பளிக்கப்பட்ட உரிமைகளுக்கு உட்பட்டு மற்றும் செயல் அல்லது செய்யாது விடுதல் எதுவும்—

குறித்தசில நேர்வுகளில் குற்றச் செயலாகாது.

(அ) சாட்டியுரைக்கப்பட்ட குற்றச்செயல் ஒரு பதிவுபெற்ற புவியியல் குறியீட்டிற்குத் தொடர்புடையதாகவும் மற்றும் அந்தச் செயல் அல்லது செய்யாது விடுதலானது இந்தச் சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்டும் இருக்குமாயின்; மற்றும்

(ஆ) சாட்டியுரைக்கப்பட்ட குற்றச்செயல் ஒரு பதிவுபெற்ற புவியியல் குறியீடு தொடர்புடையதாகவும் மற்றும் அந்தச் செயல் அல்லது செய்யாது விடுதலானது, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் அனுமதிக்கப்பட்டும் இருக்குமாயின்

அந்தச் செயல் அல்லது செய்யாது விடுதல், மேற்சொன்ன பிரிவின்படி ஒரு குற்றச்செயலாகக் கொள்ளப்படுதலாகாது.

Forfeiture of goods.

46. (1) Where a person is convicted of an offence under section 39 or section 40 or section 41 or is acquitted of an offence under section 39 or section 40 on proof that he acted without intend or defraud, or under section 40 on proof of the matters specified in clause (a) or clause (b) or clause (c) of that section, the court convicting or acquitting him may direct the forfeiture to Government of all goods and things by means of, or in relation to, which the offence has been committed, or but for such proof as aforesaid would have been committed.

(2) When a forfeiture is directed on a conviction and an appeal lies against the conviction, an appeal shall lie against the forfeiture also.

(3) When, a forfeiture is directed on acquittal and the goods or things to which the direction relates are of value exceeding fifty rupees, an appeal against the forfeiture may be preferred, within thirty days from the date of the direction, to the court to which in appealable cases appeal lie from sentences of the court which directed the forfeiture.

(4) When a forfeiture is directed on a conviction, the court, before whom the person is convicted, may order any forfeited articles to be destroyed or otherwise disposed of as the court thinks fit.

Exemption of certain persons employed in ordinary course of business.

47. Where a person accused of an offence under section 39 proves,—

(a) that in the ordinary course of his business he is employed on behalf of other persons to apply geographical indications, or as the case may be, to make dies, blocks, machines, plates, or other instruments for making, or being used in making, geographical indications;

**46.** (1) நபர் ஒருவர், 39 ஆம் பிரிவின்படியோ 40 ஆம் பிரிவின்படியோ அல்லது 41 ஆம் பிரிவின்படியோ குற்றச்செயல் ஒன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு அல்லது தாம் உள்நோக்கத்துடனோ மோசடியாகவோ செயல்படவில்லை என்று மெய்ப்பிப்பதன் பேரில், 39 ஆம் பிரிவின்படியோ 40 ஆம் பிரிவின்படியோ அல்லது அந்தப் பிரிவின் (அ) கூறில் அல்லது (ஆ) கூறில் அல்லது (இ) கூறில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளை மெய்ப்பிப்பதன் பேரில் 40 ஆம் பிரிவின்படியோ குற்றச்செயலிலிருந்து விடுவிக்கப்பட்டு இருக்குமிடத்து, அவரை குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கும் அல்லது விடுவிக்கும் நீதிமன்றம், எந்தச் சரக்குகள் அல்லது பொருள்கள் மூலம், அல்லது அது தொடர்பாக குற்றச்செயல் செய்யப்பட்டிருந்திருக்கிறதோ, அல்லது மேற்சொன்னவாறான அத்தகைய மெய்ப்பிப்பு இல்லாதிருக்குமாயின் செய்யப்பட்டிருந்திருக்கக் கூடுமோ அந்தச் சரக்குகள் மற்றும் பொருள்கள் அனைத்தையும் பறிமுதல் செய்ய அரசை பணிக்கலாம்.

சரக்குகளைப் பறிமுதல் செய்தல்.

(2) தண்டனைத்தீர்ப்பு ஒன்றின் பேரில் பறிமுதல் ஒன்று பணிக்கப்பட்டும் அந்தத் தண்டனைத்தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு ஒன்று செய்துகொள்வதற்கு உற்றதாகும்போது, பறிமுதலுக்கு எதிராகவும் கூட மேல்முறையீடு ஒன்று செய்துகொள்வதற்கு உற்றதாதல் வேண்டும்.

(3) குற்றவிடுதலையின் பேரில் பறிமுதல் ஒன்று பணிக்கப்பட்டு அந்தப் பணிப்பு தொடர்பான சரக்குகள் அல்லது பொருள்கள் ஐம்பது ரூபாய் மதிப்புக்கு மேற்படும்போது, அந்தப் பணிப்பின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அந்தப் பறிமுதலைப் பணித்த நீதிமன்றத்தின் குற்றத்தீர்ப்பிலிருந்து மேல்முறையீடு செய்யத்தக்க வழக்குகள் எந்த நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்துகொள்வதற்கு உற்றதாகுமோ அந்த நீதிமன்றத்திற்குப் பறிமுதலுக்கு எதிராக மேல்முறையீடு ஒன்று கொணரப்படலாம்.

(4) தண்டனைத்தீர்ப்பு ஒன்றின் பேரில் பறிமுதல் ஒன்று பணிக்கப்பட்டிருக்கும்போது, எந்த நீதிமன்றத்தின் முன்பு அந்த நபர் தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்பட்டாரோ, அந்த நீதிமன்றம் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் எவற்றையும் நீதிமன்றம் பொருத்தமென நினைக்கிறவாறு அழிக்கப்படவோ அல்லது பிறவாறாக தீர்வு செய்யப்படவோ ஆணையிடலாம்.

**47.** 39 ஆம் பிரிவின்படியான ஒரு குற்றச்செயலைச் செய்ததாகக் குற்றஞ்சார்த்தப்பட்டிருக்கும் ஒரு நபர்—

தொழிலின் வழக்கமான போக்கில் பணியமர்த்தப்பட்ட குறித்தசில பணியாளர்—களுக்கு விலக்களிப்பு.

(அ) தம்முடைய வழக்கமான ஆகுதொழில் நடப்பின்போது புவியியல் குறியீடுகளைப் பயன்படுத்துவதற்காக அல்லது, நேர்வுக்கேற்ப, புவியியல் குறியீடுகளைச் செய்வதற்காக, அல்லது செய்வதில் பயன்படுத்துவதற்காக, பொறிப்புக்கட்டைகள், அச்சுக்கட்டைகள் விசைப்பொறிகள், விசைத்தட்டுகள் அல்லது பிற கருவிகளைச் செய்வதற்காக பிற நபர்கள் சார்பாக தாம் பணியமர்த்தப்பட்டிருந்தார் என்று;

(b) that in the case which is the subject of the charge he was so employed, and was not interested in the goods or other thing by way of profit or commission depend on the sale of such goods;

(c) that, having taken all reasonable precautions against committing the offence charged, he had, at the time of the commission of the alleged offence, no reason to suspect the genuineness of the geographical indication; and

(d) that, on demand made by or on behalf of the prosecutor, he gave all the information in his power with respect to the persons on whose behalf the geographical indication was applied,

he shall be acquitted.

Procedure where invalidity of registration is pleaded by the accused.

48. (1) Where the offence charged under section 39 or section 40 or section 41 is in relation to a registered geographical indication and the accused pleads that the registration of the geographical indication is invalid, the following procedure shall be followed:—

(a) if the court is satisfied that such defence is *prima facie* tenable, it shall not proceed with the charge but shall adjourn the proceeding for three months from the date on which the plea of the accused is recorded to enable the accused to file an application before the [1][High Court] under this Act, for the rectification of the register on the ground that the registration is invalid;

(b) if the accused proves to the court that he has made such application within the time so limited or within such further time as the court may for sufficient cause allow, the further proceedings in the prosecution shall stand stayed till the disposal of such application for rectification;

---

1.Subs. by Act 33 of 2021, s. 22, for “Appellate Board” (w.e.f. 4-4-2021).

(ஆ) குற்றச்சாட்டின் பொருளாக இருக்கும் நேர்வில், அத்தகைய சரக்குகளை விற்பனை செய்வது சார்பான ஆதாயம் அல்லது தரகு வாயிலாக சரக்குகளிலோ பிற பொருள்களிலோ அக்கறை கொண்டிராத வகையில் அவ்வாறு பணியமர்த்தப் பெற்றிருந்தார் என்று;

(இ) குற்றஞ்சாட்டப்பட்ட குற்றச்செயலினைச் செய்வதற்கு எதிரான அனைத்து தகுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்து, சொல்லப்பட்ட குற்றச்செயல் செய்யப்பட்ட நேரத்தில், புவியியல் குறியீட்டின் உண்மை நிலையை ஐயப்படுவதற்கு அவர் காரணம் எதுவும் கொண்டிருக்கவில்லை என்று;

(ஈ) குற்றவழக்கு நடத்துநராலோ அவர் சார்பாகவோ செய்யப்பட்ட கோரிக்கையின் பேரில், எந்த நபர்கள் சார்பாக புவியியல் குறியீடு பயன்படுத்தப்பட்டதோ அந்த நபர்கள் பொறுத்து தம் ஆற்றலில் உள்ள அனைத்து தகவல்களையும் அவர் கொடுத்தார் என்று

மெய்ப்பிக்கிறவிடத்து, அவர் குற்றவிடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

பதிவின் செல்லாநிலையது குற்றஞ்–சாட்டப்பட்டவரால் வாதிடப்படுகிற–விடத்து நெறிமுறை.

**48. (1) 39** ஆம் பிரிவின்படியோ அல்லது **40** ஆம் பிரிவின்படியோ அல்லது **41** ஆம் பிரிவின்படியோ குற்றஞ்சாட்டப்பட்ட குற்றச்செயலானது பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்றுக்குத் தொடர்பானதாக இருந்து புவியியல் குறியீட்டினைப் பதிவு செய்வது செல்லாநிலையது என்று குற்றஞ்சார்த்தப்பட்டவர் வாதிடுகிறவிடத்து, பின்வரும் நெறிமுறை பின்பற்றப்படுதல் வேண்டும்:—

(அ) அத்தகைய எதிர்வாதமானது, முதல் நோக்கிலேயே ஏற்றுக் கொள்ளக்கூடியது என்று நீதிமன்றம் தெளிவுறக்காணுமாயின், அது அந்தக் குற்றச்சாட்டில் நடவடிக்கை தொடருதலாகாது ஆனால் அந்தப் பதிவு செல்லாநிலையது என்ற காரணத்தின் பேரில் பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்காக இந்தச் சட்டத்தின்படி [1][உயர் நீதிமன்றத்தின்] முன்பு விண்ணப்பம் ஒன்றை முன்னிடுவதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை இயல்விக்கும் பொருட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாதுரை பதிவான தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு நடவடிக்கையினை ஒத்தி வைத்தல் வேண்டும்;

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவர், தாம் அவ்வாறு வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் அல்லது நீதிமன்றம் போதிய காரணத்திற்காக அனுமதிக்கும் அத்தகைய மேலுமான காலத்திற்குள் அத்தகைய விண்ணப்பத்தினைச் செய்திருக்கிறார் என்று நீதிமன்றத்திற்கு மெய்ப்பிப்பாராயின், குற்றவழக்கு தொடர்பான மேல் நடவடிக்கையானது, திருத்தியமைப்பதற்கான அத்தகைய விண்ணப்பம் முடிவு செய்யப்படும் வரையில் நிறுத்திவைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்;

---

**1.** சட்ட எண் **33/2021** இன் **22** ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியம்'' என்பதற்கு, மாற்றாக **(04–04–2021** முதல் செல்திறம் பெறுமாறு), அமைக்கப்பட்டது.

(c) if within a period of three months or within such extended time as may be allowed by the court the accused fails to apply to the [1][High Court] for rectification of the register, the court shall proceed with the case as if the registration were valid.

(2) Where before the institution of a complaint of an offence referred to in sub-section (*1*), any application for the rectification of the register concerning the geographical indication in question on the ground of invalidity of the registration thereof has already been properly made to and is pending before the [2][Registrar or the High Court, as the case may be,] the court shall stay the further proceedings in the prosecution pending the disposal of the application aforesaid and shall determine the charge against the accused in conformity with the result of the application for rectification in so far as the complainant relies upon the registration of his geographical indication.

Offences by companies.

49. (1) If the person committing an offence under this Act is a company, the company as well as every person in charge of, and responsible to, the company for the conduct of its business at the time of the commission of the offence shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment if he proves that the offence was committed without his knowledge or that he exercised all due diligence to prevent the commission of such offence.

1. Subs. by Act 33 of 2021, s. 22, for “Appellate Board” (w.e.f. 4-4-2021).

2. Subs. by s. 22, *ibid*., for “tribunal” (w.e.f. 4-4-2021).

(இ) மூன்று மாத காலஅளவு ஒன்றுக்குள்ளோ அல்லது நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படலாகும் அத்தகைய நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள்ளோ குற்றஞ்சுமத்தப்பட்டவர், பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்காக [1][உயர் நீதிமன்றத்திற்கு] விண்ணப்பம் செய்யத் தவறுவாராயின், நீதிமன்றம், அந்த வழக்கினை, அந்தப் பதிவு செல்லுந்தன்மையதாக இருந்தது போன்று நடத்துதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட குற்றச்செயல் ஒன்றிலிருந்து முறையீடு ஒன்றைத் தொடுப்பதற்கு வினாவிலுள்ள புவியியல் குறியீடு தொடர்பாக முன்பு, பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்கான விண்ணப்பம் எதுவும், அதனின் பதிவின் செல்லாநிலையதன் காரணமாக [2][பதிவாளருக்கோ அல்லது நேர்வுக்கேற்ப உயர்நீதிமன்றத்திற்கோ] ஏற்கெனவே உரியவாறு செய்யப்பட்டு அதன் முன்பு முடிவுறாநிலையிலிருக்கிறவிடத்து, நீதிமன்றம், மேற்சொன்ன விண்ணப்பம் தீர்வு செய்யப்படும் வரையில் குற்றநடவடிக்கைகளின் மேல்நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல் வேண்டும், மற்றும் குற்றஞ்சுமத்தப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டினை, முறையீட்டாளர் தம் புவியியல் குறியீட்டின் பதிவினை நம்பியிருக்கும் அளவுக்கு திருத்தியமைப்பதற்கான விண்ணப்பத்தின் முடிவுக்கு இணங்க, குற்றஞ்சார்த்தப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டினைத் தீர்மானித்தல் வேண்டும்.

**நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்.**

**49. (1)** இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்றைச் செய்கிற நபரானவர் ஒரு நிறுமமாக இருக்குமாயின், நிறுமமும், அந்தக் குற்றச்செயல் செய்யப்படும் சமயத்தில் அதன் அலுவல்தொழிலை நடத்துவதற்கு நிறுமத்தைப் பொறுப்பில் கொண்டுள்ளவரும், அதற்குப் பொறுப்பில் உள்ளவருமான ஒவ்வொரு நபரும் கூட அந்தக் குற்றச்செயலைச் செய்தவராகக் கொள்ளப்படுவார் மற்றும் அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்படவும் தண்டிக்கப்படவும் உள்ளாவார்:

**வரம்புரையாக:** இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், நபர் எவரையும், அந்தக் குற்றச்செயல் அவருக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டது அல்லது அத்தகைய குற்றச்செயல் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு உரிய சிரத்தை அனைத்தையும் செலுத்தினார் என்று அவர் மெய்ப்பிப்பாராயின் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடன் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்டது அவருடைய மறைமுகமான உடந்தை அல்லது அவர்பாலுள்ள கவனமின்மை எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலரும்கூட, அந்தக் குற்றச்செயலைச் செய்தவராகக் கொள்ளப்படுவார் மற்றும் அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்.

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ‘‘மேல்முறையீட்டு வாரியம்’’ என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

2. மேற்படிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவினால்‘‘தீர்ப்பாயம்’ என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம்பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where an offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or that the commission of the offence is attributable to any neglect on the part of, any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall also be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.

*Explanation.*—For the purposes of this section,—

(a) "company" means any body corporate and includes a firm or other association of individuals; and

(b) "director", in relation to a firm, means a partner in the firm.

Cognizance of certain offences and the powers of police officer for search and seizure.

50. (1) No court shall take cognizance of an offence under section 42 or section 43 or section 44 except on complaint in writing made by the Registrar or any officer authorised by him in writing:

Provided that in relation to clause (b) of sub-section (1) of section 42, a court shall take a cognizance of an offence on the basis of a certificate issued by the Registrar to the effect that a registered geographical indication has been represented as registered in respect of any goods in respect of which it is not in fact registered.

(2) No court inferior to that of a Metropolitan Magistrate or Judicial Magistrate of the first class shall try an offence under this Act.

(3) The offences under section 39 or section 40 or section 41 shall be cognizable.

(4) Any police officer not below the rank of deputy superintendent of police or equivalent, may, if he satisfied that any of the offences referred to in sub-section (*3*) has been, is being, or is likely to be, committed, search and seize without warrant the goods,

(2). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடன் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்டது அவருடைய மறைமுகமான உடந்தை அல்லது அவர்பாலுள்ள கவனமின்மை எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலரும்கூட, அந்தக் குற்றச்செயலைச் செய்தவராகக் கொள்ளப்படுவார் மற்றும் அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்.

**விளக்கம்:—** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்கு,—

(அ) ''நிறுமம்'' என்பது, கூட்டுருமக் குழுமம் எதுவும் என்று பொருள்படும் மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற நபர்களின் சங்கத்தை உள்ளடக்கும்; மற்றும்

(ஆ) ''இயக்குநர்'' என்பது, ஒரு நிறுவகத்தைப் பொறுத்த வரை, நிறுவகத்திலுள்ள ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.

50. (1) நீதிமன்றம் எதுவும், 42 ஆம் பிரிவின்படியோ அல்லது 43ஆம் பிரிவின்படியோ அல்லது 44ஆம் பிரிவின்படியோ பதிவாளரால் அல்லது அவரால் எழுத்துவடிவில் அதிகாரமளிக்கப் பெற்ற அலுவலர் எவராலும் எழுத்துவடிவில் செய்யப்படும் முறையீட்டின் பேரில் அல்லாமல், குற்றச்செயல் ஒன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது:

குறித்தசில குற்றச்செயல்—களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதலும் தேடுவதற்கும் கைப்பற்றுவத—ற்கும் காவல்துறை அலுவலருக்—குள்ள அதிகாரங்களும்.

**வரம்புரையாக:** 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறு தொடர்பாக, நீதிமன்றம் ஒன்று, ஒரு பதிவுபெற்ற புவியியல் குறியீடு, எந்தச் சரக்குகள் பொறுத்து அது உள்ளபடியே பதிவு செய்யப்படவில்லையோ அந்தச் சரக்குகள் பொறுத்து பதிவுசெய்யப்பட்டதாக எடுத்துரைக்கிறது என்றபடிக்கு பதிவாளரால் வழங்கப்படும் ஓர் உறுதிச்சான்றின் அடிப்படையில் குற்றச்செயல் ஒன்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(2) ஒரு பெருநகர் குற்றவியல் நடுவரின் அல்லது முதலாம் வகுப்பு நீதித்துறை குற்றவியல் நடுவரின் நீதிமன்றத்திற்குக் குறைவான நீதிமன்றம் எதுவும் இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்றை விசாரணை செய்தலாகாது.

(3) 39 ஆம் பிரிவின்படியான அல்லது 40 ஆம் பிரிவின்படியான அல்லது 41 ஆம் பிரிவின்படியான குற்றச்செயலானது கைது செய்தற்குரியதாகும்.

(4) காவல்துறை துணைக் கண்காணிப்பாளரின் அல்லது அதற்குச் சமமான படிநிலைக்குக் குறையாத காவல்துறை அலுவலர் எவரும், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட குற்றச்செயல்களில் எதுவும் செய்யப்பட்டிருக்கிறது, செய்யப்பட்டு வருகிறது அல்லது செய்யப்படக்கூடும் என்று தெளிவுறக்காண்பாராயின், அவர், குற்றச்செயலை இழைத்ததில் தொடர்புடையதாக இருந்த சரக்குகள்,

die, block, machine, plate, other instruments or things involved in committing the offence, wherever found, and all the articles so seized shall, as soon as practicable, be produced before the Judicial Magistrate of the first class or Metropolitan Magistrate, as the case may be:

Provided that the police officer, before making any search and seizure, shall obtain the opinion of the Registrar on the facts involved in the offence relating to geographical indication and shall abide by the opinion so obtained.

(5) Any person having an interest in any article seized under sub-section (*4*), may, within fifteen days of such seizure, make an application to the Judicial Magistrate of the first class or Metropolitan Magistrate, as the case may be, for such article being restored to him and the Magistrate, after hearing the application and the prosecution, shall make such order on the application as he may deem fit.

Costs of defence of prosecution.

51. In any prosecution under this Act, the court may order such costs to be paid by the accused to the complainant, or by the complainant to the accused, as the court deemed reasonable having regard to all the circumstances of the case and the conduct of the parties and the costs so awarded shall be recoverable as if they were a fine.

Limitation of prosecution.

52. No prosecution for an offence under this Act shall be commenced after the expiration of three years next after the commission of the offence charged or two years after the discovery thereof by the prosecutor, whichever expiration first happens.

Information as to commission of offence.

53. An officer of the Government whose duty it is to take part in the enforcement of the provisions of this Chapter shall not be compelled in any court to say whence he got any information as to the commission of any offence against this Act.

பொறிப்புக்கட்டை, அச்சுக்கட்டை, விசைப்பொறிப், விசைத்தட்டு பிற கருவிகள் அல்லது பொருள்களை அவை எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் பற்றுகையாணை இல்லாமலேயே சோதனையிடலாம் மற்றும் கைப்பற்றலாம், மற்றும் அவ்வாறு கைப்பற்றப்படும் பொருள்கள் அனைத்தும் இயன்றவரை விரைவில் முதலாம் வகுப்பு நீதித்துறை குற்றவியல் நடுவரின் அல்லது, நேர்வுக்கேற்ப, பெருநகர் குற்றவியல் நடுவரின் முன்பு, முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** காவல்துறை அலுவலர், சோதனை மற்றும் கைப்பற்றுகை எதுவும் செய்வதற்கு முன்பு, புவியியல் குறியீடு தொடர்பான குற்றச்செயலில் தொடர்புடைய பொருண்மைகள் மீது பதிவாளரின் கருத்தினைப் பெறுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு பெறப்படும் கருத்தினால் கட்டுப்படுதல் வேண்டும்.

(5). (4) ஆம் உட்பிரிவின்படி கைப்பற்றப்பட்ட பொருள் எதிலும் உரித்தம் கொண்டிருக்கும் நபர் எவரும், அத்தகைய கைப்பற்றுகையிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அத்தகைய பொருள் தம்மிடம் ஒப்படைக்கப்படுவதற்காக முதலாம் வகுப்பு நீதித்துறைகுற்றவியல் நடுவரிடமோ அல்லது நேர்வுக்கேற்ப, பெருநகர் குற்றவியல் நடுவரிடமோ விண்ணப்பம் ஒன்று செய்யலாம் மற்றும் குற்றவியல் நடுவர், விண்ணப்பத்தையும் குற்றவழக்கையும் விசாரித்தறிந்த பின்பு, விண்ணப்பத்தின் மீது தாம் பொருத்தமெனக் கொள்ளும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

குற்றவழக்கின் எதிர் வாதத்துக்கான செலவுத் தொகைகள்.

**51.** இந்தச் சட்டத்தின்படியான குற்றவழக்கு எதிலும், வழக்கின் அனைத்து சூழ்நிலைகளையும் தரப்பினர்களின் நடத்தையையும் கவனத்தில்கொண்டு, நீதிமன்றம், தகுவானதாகக் கொள்கிறவாறு குற்றஞ்சாட்டப்பட்டவரால் முறையீட்டாளருக்கோ, அல்லது முறையீட்டாளரால் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கோ, அத்தகைய செலவுத்தொகைகள் வழங்கப்படவேண்டுமென்று நீதிமன்றம் ஆணையிடலாம் மற்றும் அவ்வாறு தீர்வு செய்யப்பட்ட செலவுத் தொகைகள், அவை ஓர் அபராதமாக இருந்தாற்போன்று தண்டல் செய்யப்படுதல் வேண்டும்.

குற்றவழக்கு தொடர்வதற்கான காலவரம்பு.

**52.** இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் ஒன்றிற்கான குற்றவழக்கு எதுவும் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றச்செயல் செய்யப்பட்டதற்கு அடுத்து பின்பு மூன்று ஆண்டுகளோ அல்லது குற்றவழக்கு நடத்துபவர் அதனைக் கண்டுபிடித்த பின்பு இரண்டு ஆண்டுகளோ முடிவுறுதல்களில் எது முதலில் நடக்கிறதோ அது முடிவுற்ற பின்பு தொடங்கப்படுதலாகாது.

குற்றச்செயல் செய்யப்பட்டது பற்றிய தகவல்.

**53.** இந்த அத்தியாயத்தின் வகையங்களுக்குச் செயலாக்கம் தருவதில் பங்கெடுப்பதைத் தம் கடமையாகக் கொண்டுள்ள அரசு அலுவலர் ஒருவர், இந்தச் சட்டத்திற்கு எதிரான குற்றச்செயல் எதனையும் செய்தது பற்றிய தகவல் எதனையும் தாம் எங்கிருந்து பெற்றார் என்பது பற்றி கூறும்படி நீதிமன்றம் எதிலும் கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

Punishment for abetement in India of acts done out of India.

54. If any person, being within India, abets the commission, without India, of any act which, if committed in India, would, under this Act, be an offence, he may be tried for such abetement in any place in India in which he may be found, and be punished therefor with the punishment to which he would be liable if he had himself committed in that place the act which he abetted.

## CHAPTER IX
## MISCELLANEOUS

Protection of action taken in good faith.

55. No suit or other legal proceedings shall lie against any person in respect of anything which is in good faith done or intended to be done in pursuance of this Act.

Certain persons to be public servants.

56. Every person appointed under this Act shall be deemed to be a public servant within the meaning of section 21 of the Indian Penal Code. 45/1860.

Stay of proceedings where the validity of registration of the geographical indication is questioned, etc.

57. Where in any suit for infringement of a geographical indication the defendant pleads that registration of the geographical indication relating to plaintiff is invalid, the court trying the suit (hereinafter referred to as the court), shall,—

(a) if any proceedings for rectification of the register to the geographical indication relating to plaintiff or defendant are pending before the Registrar or the [1][High Court], stay the suit pending the final disposal of such proceedings;

(b) if no such proceedings are pending and the court is satisfied that the plea regarding the invalidity of the registration of the geographical indication relating to plaintiff or defendant is prima facie tenable, raise an issue regarding the same and adjourn the case for a period of three months from the date of the framing of the issue in order to enable the party concerned to apply to the [1][High Court] for rectification of the register.

---

1. Subs. by Act 33 of 2021, s. 22, for "Appellate Board" (w.e.f. 4-4-2021).

**54.** நபர் எவரும், இந்தியாவிற்குள் இருந்து கொண்டு, எந்தச் செயல் இந்தியாவில் செய்யப்படுமாயின், இந்தச் சட்டத்தின்படி, ஒரு குற்றச்செயலாக இருக்கக்கூடுமோ அந்தச் செயல் எதனையும், இந்தியாவுக்கு வெளியே செய்ய உடந்தையாயிருப்பாராயின், அவர், அத்தகைய குற்ற உடந்தைக்காக அவர் இந்தியாவில் எந்த இடத்தில் காணப்படக்கூடுமோ, அந்த இடம் எதிலும் விசாரணை செய்யப்பட்டு அதற்காக அவர் உடந்தையாகயிருந்த செயல் அந்த இடத்தில் அவரே செய்திருந்திருப்பாராயின் அவர் உள்ளாகியிருக்கக்கூடிய தண்டனை விதித்துத் தண்டிக்கப்படலாம்.

இந்தியாவிற்கு வெளியே செய்யப்பட்டச் செயல்களுக்கு இந்தியாவில் உடந்தையா–யிருப்பதற்குத் தண்டனை.

## அத்தியாயம் IX

### பல்வகை

**55.** இந்தச் சட்டத்தைப் பின்பற்றி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கருதப்பட்ட எதனையும் பொறுத்து நபர் எவருக்கும் எதிராக, உரிமைவழக்கோ பிற சட்ட நடவடிக்கையோ எடுப்பதற்கு உற்றதாகாது.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**56.** இந்தச் சட்டத்தின்படி பதவியமர்த்தப்பட்ட ஒவ்வொரு நபரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளின்படி ஓர் அரசுப் பணியாளராகக் கொள்ளப்படுவார்.

45/1860.

குறித்தசில நபர்கள் அரசுப் பணியாளர்களாக இருத்தல்.

**57.** (1) புவியியல் குறியீடு ஒன்றை மீறியதற்கான உரிமை வழக்கு எதிலும், வாதி தொடர்பான புவியியல் குறியீட்டின் பதிவானது செல்லாநிலையது என்று எதிர்வாதி வாதிடுகிறவிடத்து, உரிமை வழக்கினை விசாரணை செய்கிற (இதனின் இதன்பின்பு நீதிமன்றமென குறிப்பிடப்படும்) நீதிமன்றம்,—

புவியியல் குறியீட்டுப் பதிவின் செல்லுந்தன்மை எதிர்க்கப் படுகிறவிடத்து, நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல், முதலானவை.

(அ) வாதிக்கோ எதிர்வாதிக்கோ தொடர்புள்ள புவியியல் குறியீட்டிற்கான பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் பதிவாளரின் அல்லது [1][உயர் நீதிமன்றத்தின்] முன்பு முடிவுறாநிலையில் இருக்குமாயின், அத்தகைய நடவடிக்கைகளை அறுதியாகத் தீர்வு செய்யும் வரையில் அந்த உரிமைவழக்கினை நிறுத்திவைத்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய நடவடிக்கைகள் எவையும் முடிவுறா நிலையில் இல்லாதிருந்து, வாதி அல்லது எதிர்வாதி தொடர்பான புவியியல் குறியீட்டுப் பதிவு செல்லுந்தன்மையற்றது தொடர்பான வாதமானது முதல்நோக்கிலேயே ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று நீதிமன்றம் தெளிவுறக்காணுமாயின், அது தொடர்பாக ஒரு பிரச்சினையை எழுப்பி, பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்காக [1][உயர் நீதிமன்றத்திற்கு] விண்ணப்பம் செய்வதற்கு தொடர்புடைய தரப்பினரை இயல்விப்பதற்காக அந்தப் பிரச்சினையை வனைந்த தேதியிலிருந்து மூன்று மாத காலஅளவு ஒன்றிற்கு அந்த வழக்கினைத் தள்ளி வைத்தல் வேண்டும்.

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியம்'' என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(2) If the party concerned proves to the court that he has made any such application as is referred to in clause (b) of sub-section (1) within the time specified therein or within such extended time as the court may for sufficient cause allow, the trial of the suit shall stand stayed until the final disposal of the rectification proceedings.

(3) If no such application as aforesaid has been made within the time so specified or within such extended time as the court may allow, the issue as to the validity of the registration of the geographical indication concerned shall be deemed to have been abandoned and the court shall proceed with the suit in regard to the other issues in the case.

(4) The final order made in any rectification proceedings referred to in sub-section (1) or sub-section (2) shall be binding upon the parties and the court shall dispose of the suit conformably to such order in so far as it relates to the issue as to the validity of the registration of the geographical indication.

(5) The stay of a suit for the infringement of a geographical indication under this section shall not preclude the court from making any interlocutory order (including any order granting an injunction, directing account to be kept, appointing a receiver or attaching any property), during the period of the stay of the suit.

(2) தொடர்புடைய தரப்பினர், (1) ஆம் உட்பிரிவில் (ஆ) கூறில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அத்தகைய விண்ணப்பம் எதனையும் அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்துக்குள்ளோ அல்லது நீதிமன்றம் போதிய காரணத்திற்காக அனுமதிக்கும் அத்தகைய நீட்டிக்கப்பட்ட காலத்துக்குள்ளோ செய்திருக்கிறார் என்று நீதிமன்றத்திடம் மெய்ப்பிப்பாராயின், அந்த உரிமைவழக்கின் விசாரணையானது, திருத்தியமைக்கும் நடவடிக்கை அறுதியாக முடிவு செய்யப்படும் வரை நிறுத்தி வைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(3) மேற்சொன்னவாறு, அத்தகைய விண்ணப்பம் எதுவும், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளோ அல்லது நீதிமன்றம் அனுமதிக்கும் அத்தகைய நீட்டிக்கப்பட்ட காலத்துக்குள்ளோ செய்யப்பட்டிருக்கவில்லையெனில், தொடர்புடைய புவியியல் குறியீட்டுப் பதிவின் செல்லுந்தன்மை பற்றிய பிரச்சினையானது கைவிடப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் நீதிமன்றம் அந்த வழக்கிலுள்ள பிற பிரச்சினைகள் தொடர்பான உரிமை வழக்கினை நடத்துதல் வேண்டும்.

(4). (1) ஆம் உட்பிரிவிலோ (2) ஆம் உட்பிரிவிலோ குறிப்பிடப்பட்டுள்ள திருத்தியமைக்கும் நடவடிக்கை எதிலும் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணையானது தரப்பினர்களைக் கட்டுப்படுத்துதல் வேண்டும் மற்றும் நீதிமன்றம், புவியியல் குறியீட்டுப் பதிவின் செல்லுந்தன்மை பற்றிய பிரச்சினைக்கு அது தொடர்புடையதாக இருக்கிறவரை அத்தகைய ஆணைக்கு ஒத்திருக்கும் வகையில் அந்த உரிமை வழக்கினைத் தீர்வு செய்தல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவின்படி புவியியல் குறியீடு ஒன்றினை மீறியதற்கான உரிமைவழக்கு ஒன்றினை நிறுத்திவைப்பதானது, உரிமைவழக்கின் நிறுத்திவைப்பு காலஅளவின் போது (உறுத்துக்கட்டளை ஒன்று வழங்குதல், கணக்கு வைக்கப்பட பணிக்கும் வழக்குச்சொத்து பேணுநர் ஒருவரை அமர்த்தும் அல்லது சொத்து எதனையும் பற்றுகை செய்யும் ஆணை எதுவும் உள்ளடங்கலான) வழக்கிடை ஆணை எதனையும் பிறப்பிப்பதிலிருந்து நீதிமன்றத்தைத் தடை செய்யாது.

Application for rectification of register to be made to 1[High Court] in certain cases.

*58.* (1) Where in a suit for infringement of a registered geographical indication the validity of the registration of the geographical indication relating to plaintiff is questioned by the defendant or where in any such suit the plaintiff questions the validity of the registration of the geographical indication relating to defendant, the issue as to the validity of the registration of the geographical indication concerned shall be determined only on an application for the rectification of the register and, notwithstanding anything contained in section 27, such application shall be made to the [1][High Court] and not to the Registrar.

(2) Subject to the provisions of sub-section (1), where an application for rectification of the register is made to the Registrar under section 27, the Registrar may, if he thinks fit, refer the application at any stage of the proceedings to the [1][High Court].

Implied warranty on sale of indicated goods.

59. Where a geographical indication has been applied to the goods on sale or in the contract for sale of any goods, the seller shall be deemed to warrant that the geographical indication is a genuine geographical indication and not falsely applied, unless the contrary is expressed in writing signed by or on behalf of the seller and delivered at the time of the sale of goods on contract to and accepted by the buyer.

Powers of Registrar.

60. In all proceedings under this Act before the Registrar,—

(a) the Registrar shall have all the powers of a civil court for the purposes of receiving evidence, administering oaths, enforcing the attendance of witnesses, compelling the discovery and production of documents and issuing commissions for the examination of witnesses;

(b) the Registrar may, subject to any rules made in this behalf under section 87, make such orders as to costs as he considers reasonable, and any such order shall be executable as a decree of a civil court;

1. Subs. by Act 33 of 2021, s. 22, for "Appellate Board" (w.e.f. 4-4-2021).

**58. (1)** பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்றினை மீறியதற்கான உரிமைவழக்கு ஒன்றில் வாதி தொடர்பான புவியியல் குறியீட்டுப் பதிவின் செல்லுந்தன்மையானது எதிர்வாதியால் எதிர்க்கப்படுகிறவிடத்து, அல்லது அத்தகைய உரிமைவழக்கு எதிலும் வாதி, எதிர்வாதி தொடர்பான புவியியல் குறியீட்டுப் பதிவின் செல்லுந்தன்மையை எதிர்க்கிறவிடத்து, தொடர்புடைய புவியியல் குறியீட்டின் செல்லுந்தன்மை பற்றிய பிரச்சினையானது, பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்கான விண்ணப்பம் ஒன்றின் பேரில் மட்டுமே தீர்மானிக்கப்படுதல் வேண்டும் மற்றும் 27 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய விண்ணப்பம் [1][உயர் நீதிமன்றத்திற்கு] செய்யப்படுதல் வேண்டுமேயன்றி பதிவாளருக்கு அல்ல.

குறித்தசில வழக்குகளில் பதிவேட்டினைத் திருத்தி–யமைப்பதற்கு [1][உயர்நீதிமன்றத்திற்கு] செய்யப்பம் விண்ணப்பம்.

**(2) (1)** ஆம் உட்பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு, 27 ஆம் பிரிவின்படி பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்கான விண்ணப்பம் ஒன்று பதிவாளரிடம் செய்யப்படுகிறவிடத்து, பதிவாளர், தாம் பொருத்தமென நினைப்பாராயின், நடவடிக்கைகளின் எந்நிலையிலும் விண்ணப்பத்தை [1][உயர் நீதிமன்றத்திற்கு] குறித்தனுப்பலாம்.

**59.** புவியியல் குறியீடு ஒன்று விற்பனைக்கான சரக்குகளுக்கோ, அல்லது சரக்குகள் எவற்றையும் விற்பனை செய்வதற்கான ஒப்பந்தத்திலோ பயன்படுத்தியுள்ளவிடத்து, அதற்கு முரணானது எழுத்துவடிவில் விற்பனை செய்பவரால் அல்லது அவர் சார்பாகக் கையொப்பமிடப்பட்டு ஒப்பந்தத்தின்பேரில் சரக்குகளின் விற்பனை நேரத்தில் விலைக்கு வாங்குபவரிடம் ஒப்படைக்கப்பட்டும் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் தெரியப்படுத்தப்பட்டாலன்றி அப்புவியியல் குறியீடு, ஓர் உண்மையான புவியியல் குறியீடு என்றும், பொய்யாகப் பயன்படுத்தப்படவில்லை என்றும், விற்பனை செய்பவர் உத்திரவாதமளிப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

குறியீடு செய்யப்பட்ட சரக்குகளை விற்பனை செய்வதன்பேரில் உட்கிடையான பொறுப்புறுதி.

**60.** இந்தச் சட்டத்தின்படி பதிவாளர் முன்புள்ள அனைத்து நடவடிக்கைகளிலும், –

பதிவாளரின் அதிகாரங்கள்.

(அ) பதிவாளர், சான்று பெறுதல், ஆணைமொழி செய்துவைத்தல், சான்றுரைஞர்கள் முன்னிலையாவதைச் செயலுறுத்துதல், ஆவணங்களைக் கண்டுபிடித்து முன்னிலைப்படுத்துவதைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் சான்றுரைஞர்களை விசாரணை செய்வதற்காக ஆணை பிறப்பித்தல் ஆகியவற்றிற்கு ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டிருப்பார்;

(ஆ) பதிவாளர், 87ஆம் பிரிவின்படி இதற்கென செய்யப்பட்ட விதிகள் எவற்றிற்கும் உட்பட்டு, செலவுத்தொகை குறித்து தாம் தகுமனதென கருதுகிறவாறு அத்தகைய ஆணைகளைப் பிறப்பிக்கலாம், மற்றும் அத்தகைய ஆணை எதுவும், ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணை போன்று நிறைவேற்றப்படத்தக்கதாகும்;

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ‘‘மேல்முறையீட்டு வாரியம்’’ என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(c) the Registrar may, on an application made in the prescribed manner, review his own decision.

Exercise of discretionary power by Registrar.

61. Subject to the provisions of section 64, the Registrar shall not exercise any discretionary or other power vested in him by this Act or the rules made thereunder adversely to a person applying for the exercise of that power without (if so required by that person within the prescribed time) giving to the person an opportunity of being heard.

Evidence before Registrar.

62. In any proceeding under this Act before the Registrar, evidence shall be given by affidavit:

Provided that the Registrar may, if he thinks fit, take oral evidence in lieu of, or in addition to, such evidence by affidavit.

Death of party to a proceeding.

63. If a person who is a party to a proceeding under this Act (not being a proceeding before [1]*** a court) dies pending the proceeding, the Registrar may, on request, and on proof to his satisfaction of the transmission of the interest of the deceased person, substitute in the proceeding his successor in interest in his place, or, if the Registrar is of opinion that the interest of the deceased person is sufficiently represented by the surviving parties, permit the proceeding to continue without the substitution of his successor in interest.

Extension of time.

64. (1) If the Registrar is satisfied, on application made to him in the prescribed manner and accompanied by the prescribed fee, that there is sufficient cause for extending the time for doing any act (not being a time expressly provided in the Act), whether the time so specified has expired or not, he may, subject to such conditions as he may think fit to impose, extend the time and inform the parties accordingly.

(2) Nothing in sub-section (1) shall be deemed to require the Registrar to hear the parties before disposing of an application for extension of time, and no appeal shall lie from any order of the Registrar under this section.

1. The words "the Appellate Board or" omitted by Act 33 of 2021, s. 22 (w.e.f. 4-4-2021).

(இ) பதிவாளர், வகுத்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின் பேரில், தம் சொந்த முடிபினை மறுஆய்வு செய்யலாம்.

பதிவாளரால் உளத்தேர்வு அதிகாரம் செலுத்தப்படுதல்.

**61.** **64** ஆம் பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு பதிவாளர், இந்தச் சட்டத்தாலோ அதன்படி வகுக்கப்பட்ட விதிகளாலோ தம்மிடம் உற்றமைந்த உளத்தேர்வு அல்லது பிற அதிகாரம் எதனையும், அந்த அதிகாரங்களைச் செலுத்தும்படி விண்ணப்பிக்கும் நபர் ஒருவருக்கு எதிராக (வகுத்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அந்த நபரால் அவ்வாறு வேண்டுறுத்தப்படுமாயின்) அந்த நபருக்கு விசாரணை செய்யப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று நல்காமல், செலுத்துதலாகாது.

பதிவாளரின் முன்பு சான்றளித்தல்.

**62.** இந்தச் சட்டத்தின்படி பதிவாளர் முன்புள்ள நடவடிக்கை எதிலும், சான்றானது ஆணையுறுதி ஆவணம் மூலமாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** பதிவாளர், தாம் பொருத்தமென நினைப்பாராயின் ஆணையுறுதி ஆவணம் வாயிலான அத்தகைய சான்றுக்குப் பதிலாக அல்லது அதற்குக் கூடுதலாக, வாய்மொழிச் சான்றினைப் பெறுவார்.

நடவடிக்கை ஒன்றுக்கான தரப்பினர் இறந்துபோதல்.

**63.** இந்தச் சட்டத்தின்படியான ( [1] * * * நீதிமன்றம் ஒன்றின் முன்பு உள்ள ஒரு நடவடிக்கையாக அல்லாத) ஒரு நடவடிக்கைக்கான ஒரு தரப்பினராக இருக்கும் நபர் ஒருவர், நடவடிக்கை முடிவுறாநிலையில் இறந்துபோவாராயின், பதிவாளர், வேண்டுகோளின் பேரிலும், இறந்துபோன நபரின் உரித்தம் மாற்றப்பட்டதைத் தன் மனநிறைவாக மெய்ப்பிக்கப்படுவதன் பேரிலும், நடவடிக்கையில் அவருக்குப் பதிலாக அவருக்கு அடுத்து வருபவரை மாற்றாக அமைக்கலாம், அல்லது, இறந்துபோன நபரின் உரித்தம் எஞ்சியிருக்கும் தரப்பினர்களால் போதிய அளவில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பதிவாளர் கருதுவாராயின், அந்த நடவடிக்கையினை அவருக்கு வழிமுறையுரிமையில் அடுத்தவர் மாற்றாக அமைக்கப்படாமல் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதிக்கலாம்.

கால நீட்சி.

**64.** (1) பதிவாளர், வகுத்துரைக்கப்பட்ட முறையிலும் வகுத்துரைக்கப்பட்ட கட்டணம் சேர்க்கப்பட்டும் அவருக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரிலும், செயல் எதனையும் செய்வதற்கான (சட்டத்தில் தெரிநிலையாக வகை செய்யப்பட்ட ஒரு காலமாக அல்லாத) காலத்தை நீட்டிப்பதற்காக, அவ்வாறு வகுத்துரைக்கப்பட்ட காலம் முடிவுற்றிருந்தாலும் இல்லாவிடினும், போதிய காரணம் இருக்கிறது என்று மனநிறைவடைவாராயின், அவர், விதிப்பதற்கு தாம் பொருத்தமென நினைக்கும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, காலத்தை நீட்டித்து, அதன்படியே, தரப்பினர்களுக்குத் தெரிவிக்கலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவிலுள்ள எதுவும், காலநீட்சிக்கான விண்ணப்பம் ஒன்றை தீர்வு செய்வதற்கு முன்பு தரப்பினர்களை விசாரணை செய்வதற்குப் பதிவாளரை வேண்டுறுத்தவதாகக் கொள்ளப்படுதலாகாது மற்றும் இந்தச் சட்டத்தின்படி பதிவாளரின் ஆணை எதிலுமிருந்தும் மேல்முறையீடு எதுவும் செய்து கொள்வதற்கு உற்றதாகாது.

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியம் அல்லது'' என்னும் சொற்கள், (04-04-2021 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.

Abandonment.

65. Where, in the opinion of the Registrar, an applicant is in default in the prosecution of an application filed under this Act, the Registrar may, by notice require the applicant to remedy the default within a time specified and after giving him, if so, desired, an opportunity of being heard, treat the application as abandoned, unless the default is remedied within the time specified in the notice.

Suit for infringement, etc., to be instituted before district court.

66. (1) No suit,—

(a) for the infringement of a registered geographical indication; or

(b) relating to any right in a registered geographical indication; or

(c) for passing of arising out of the use by the defendant of any geographical indication which is indentical on with or deceptively similar to the geographical indication relating to the plaintiff, whether registered or unregistered,

shall be instituted in any court inferior to a district court having jurisdiction to try the suit.

(2) For the purpose of clauses (*a*) and (*b*) of sub-section (*1*), a "district court having jurisdiction" shall, notwithstanding anything contained in the Code of Civil Procedure, 1908, or any other law for the time being in force, include a district court within the local limits of whose jurisdiction, at the time of the institution of the suit or other proceeding, the person instituting the suit or proceeding, or, where there are more than one such persons any of them, actually and voluntarily resides or carries on business or personally works for gain. 5 /1908.

*Explanation.*—For the purposes of sub-section (*2*), "person" includes the registered proprietor and the authorised user.

**65.** இந்தச் சட்டத்தின்படி முன்னிடப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் நடவடிக்கை தொடர்கையில் விண்ணப்பதாரர் ஒருவர் தவறு செய்திருக்கிறார் என்று பதிவாளர் கருதுகிறவிடத்து, பதிவாளர், அறிவிப்பு வாயிலாக, குறித்துரைக்கப்பட்ட காலம் ஒன்றுக்குள் தவறைச் சீர்படுத்தும்படி விண்ணப்பதாரதை வேண்டுறுத்தலாம் மற்றும், அவ்வாறு விரும்புவாராயின், விசாரணை செய்யப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று நல்கிய பின்பு, அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் தவறானது சீர்படுத்தப்பட்டாலன்றி, விண்ணப்பம் கைவிடப்பட்டதாகக் கருதலாம். கைவிடப்படுதல்.

**66. (1).** மீறுகைக்கான உரிமைவழக்கு முதலானவை மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு தொடுக்கப்பட வேண்டும்.

(அ) பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்றினை மீறுவதற்கான; அல்லது

(ஆ) பதிவுபெற்ற புவியியல் குறியீடு ஒன்றில் உள்ள உரிமை எதன் தொடர்பானதுமான; அல்லது,

(இ) பதிவு செய்யப்பட்டதாயினும் அல்லது பதிவுசெய்யப்படாததாயினும், வாதி தொடர்பான புவியியல் குறியீடு மாதிரியான அல்லது ஏமாற்றும் வகையில் அதற்கு ஒத்திருக்கும் புவியியல் குறியீடு எதுவும் எதிர்வாதியால் பயன்படுத்தப்படுவதிலிருந்து எழும் வாணிகப் போலிக்கான,

உரிமைவழக்கு எதுவும், அந்த உரிமைவழக்கினை விசாரணை செய்வதற்கு ஒரு அதிகாரவரம்புடைய மாவட்ட நீதிமன்றத்துக்குக் கீழமை நீதிமன்றம் எதிலும் தொடுக்கப்படுதலாகாது.

**(2).** (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) கூறுகளின் நோக்கங்களுக்கு, ஒரு ''அதிகாரவரம்புடைய மாவட்ட நீதிமன்றம்'' என்பது, **1908** ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்திலோ, அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலுமோ அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எந்த ஒரு மாவட்ட நீதிமன்றத்தின் வட்டார எல்லைகளுக்குள், அந்த உரிமைவழக்கினை அல்லது பிற நடவடிக்கையினைத் தொடரும் சமயத்தில் அந்த உரிமைவழக்கினை அல்லது நடவடிக்கையினைத் தொடரும் நபர், அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய நபர் இருக்கிறவிடத்து, அவர்களில் எவரும் உள்ளபடியேயும் தம்விருப்பாகவும் குடியிருக்கின்றனரோ அல்லது ஆகுதொழில் நடத்திவருகின்றனரோ அல்லது தேட்டத்திற்காக தாமே வேலை செய்கின்றனரோ அந்த வட்டார எல்லைகளுக்குள் உள்ள ஒரு மாவட்ட நீதிமன்றத்தை உள்ளடக்கும். 5/1908.

**விளக்கம்.— (2)** ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு, ''நபர்''என்பது, பதிவுபெற்ற உரிமையாளரையும் அதிகாரமளிக்கப்பெற்ற பெற்ற பயனாளியையும் உள்ளடக்கும்.

Relief in suit for infringement or for passing off.

67. (1) The relief which a court may grant in any suit for infringement or for passing off referred to in section 66 includes injunction (subject to such terms, if any, as the court thinks fit) and at the option of the plaintiff, either damages or account of profits, together with or without any order for the delivery-up of the infringing labels and indications for destruction or erasure.

(2) The order of injunction under sub-section (*1*) may include an *ex parte* injunction or any interlocutory order for any of the following matters, namely:—

(a) for discovery of documents;

(b) preserving of infringing goods, documents or other evidence which are related to the subject-matter of the suit;

(c) restraining the defendant from disposing of or dealing with his assets in a manner which may adversely affect plaintiff's ability to recover damages, costs or other pecuniary remedies which may be finally awarded to the plaintiff.

(3) Notwithstanding anything contained in sub-section (1), the court shall not grant relief by way of damages (other than nominal damages) on account of profits in any case—

(a) where in a suit for infringement the defendant satisfies the court—

(i) that at the time he commenced to use the geographical indication complained of in the suit he was unaware and had no reasonable ground for believing that the geographical indication of the plaintiff was on the register; and

**67. (1) 66** ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள மீறுகைக்கான அல்லது வாணிகப்போலிக்கான உரிமைவழக்கு எதிலும், நீதிமன்றம் ஒன்று வழங்கலாகும் தீருதவி, (நீதிமன்றம் பொருத்தமெனக் கருதுகிற வரையுரைகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்கு உட்பட்டு) உறுத்துக்கட்டளை மற்றும் வாதியின் விருப்பத்தேர்வின்படி மீறுகைக்கான முகப்புச்சீட்டுகளின் மீறுதல் மற்றும் பொருட்சிதைவு அல்லது அழித்தலுக்கான குறியீடுகளுக்கும் மேலாக ஒப்படைப்பிற்கான அழைப்பாணையுடன் சேர்த்தோ அல்லது இல்லாமலோ இழப்பீடு அல்லது ஆதாயங்களின் மதிப்பினை வழங்குதலை உள்ளடக்கும்.

மீறுகைக்கான அல்லது வாணிகப் போலிக்கான உரிமைவழக்கில் தீருதவி.

(2). (1) ஆம் உட்பிரிவின்படியான உறுத்துக்கட்டளை ஆணையானது, பின்வரும் பொருட்பாடுகளில் எதற்காகவுமான ஓர் எதிரவரில்லாத உறுத்துக்கட்டளையை அல்லது நீதிமன்ற விசாரணையிடை ஆணை எதனையும் உள்ளடக்கலாம், அவையாவன :–

(அ) ஆவணங்களை வெளிக்கொணர்வதற்காக;

(ஆ) உரிமைவழக்கின் உறுபொருள் தொடர்புடைய மீறுகை சரக்குகள், ஆவணங்கள் அல்லது பிற சான்று ஆகியவற்றைப் பாதுகாத்தல்;

(இ) இறுதியாக வழங்கப்படலாகும் இழப்பீடுகள், செலவுத்தொகைகள் அல்லது பிற பண தீருதவிகளை தண்டல் செய்வதற்கான வாதியின் ஆற்றலை எதிராகப் பாதிக்கும் ஒரு முறையில் தம் சொத்திருப்புகளை அயலடைவு செய்வதிலிருந்து அல்லது கையாள்வதிலிருந்து எதிர்வாதியைத் தடுத்தல்.

(3) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,–

(அ) மீறுகைக்கான உரிமைவழக்கு ஒன்றில்–

(i) உரிமைவழக்கில் முறையீடு செய்யப்பட்டுள்ள புவியியல் குறியீட்டினைத் தாம் பயன்படுத்தத் தொடங்கிய சமயத்தில் வாதியின் புவியியல் குறியீடானது பதிவில் இருந்தது என்று தாம் அறிந்திருக்கவில்லை என்றும் அதனை நம்புவதற்குத் தகுமன காரணம் எதுவும் கொண்டிருக்கவில்லை என்றும்; மற்றும்

(ii) that when he became aware of the existence and nature of the plaintiff's right in the geographical indication, he forthwith ceased to use the geographical indication in relation to good in respect of which it was registered; or

(b) where in a suit for passing off, the defendant satisfies the court—

(i) that at the time he commenced to use the geographical indication complained of in the suit he was unaware and had no reasonable ground for believing that the geographical indication relating to the plaintiff was in use; and

(ii) that when he became aware of the existence and nature of the geographical indication relating to the plaintiff he forthwith ceased to use the geographical indication complained of.

Authorised user to be impleaded in certain proceedings.

68. (*1*) In every proceeding under Chapter VI or under section 31, every authorised user of a geographical indication to which such proceeding relate, who is not himself an applicant in respect of any proceeding under that Chapter or section, shall be made a party to the proceeding.

(2) Notwithstanding anything contained in any other law, an authorised user so made a party to the proceeding shall not be liable for any costs unless he enters an appearance and takes part in the proceeding.

(ii) புவியியல் குறியீட்டில், வாதிக்கு உரிமை இருப்பதையும் அதன் தன்மையையும் தாம் அறிந்தவராக ஆன போது, தாம் எந்தச் சரக்குகள் பொறுத்து அது பதிவுசெய்யப்பட்டதோ அந்தச் சரக்குகள் தொடர்பான புவியியல் குறியீட்டினைப் பயன்படுத்த உடனடியாக அற்றுப்போனார் என்றும்

(ஆ) வாணிகப் போலிக்கான உரிமைவழக்கு ஒன்றில்—

(i) உரிமைவழக்கில் முறையீடு செய்யப்பட்டுள்ள புவியியல் குறியீட்டினைத் தாம் பயன்படுத்தத் தொடங்கிய சமயத்தில் வாதி தொடர்பான புவியியல் குறியீடானது பயன்பாட்டில் இருந்தது என்று தாம் அறிந்திருக்கவில்லை என்றும் அதனை நம்புவதற்குத் தகுமன காரணம் எதுவும் கொண்டிருக்கவில்லை என்றும்; மற்றும்

(ii) வாதிக்குத் தொடர்பான புவியியல் குறியீடு இருப்பதையும் அதன் தன்மையையும் தாம் அறிந்தவராக ஆனபோது தாம், முறையீடு செய்யப்பட்ட புவியியல் குறியீட்டினைப் பயன்படுத்த உடனடியாக அற்றுப்போனார் என்றும்

எதிர்வாதி நீதிமன்றத்தை மனநிறைவடையச் செய்கிறவிடத்து,

இந்நேர்வு எதிலும் ஆதாயங்களின் பொருட்டு (பெயரளவிலான இழப்பீடு அல்லாத பிற) இழப்பீடுகள் வாயிலாக நீதிமன்றம் தீருதவி வழங்குதலாகாது.

குறித்தசில நடவடிக்கைகளில் அதிகாரமளிக்கப் பெற்ற பயனாளி சேர்க்கப்படுதல்.

**68.** **(1)** VI ஆம் அத்தியாயத்தின்படியோ அல்லது **31** ஆம் பிரிவின்படியோவான நடவடிக்கை ஒவ்வொன்றிலும், அத்தகைய நடவடிக்கை எந்தப் புவியியல் குறியீடு தொடர்பானதோ அந்தப் புவியியல் குறியீடு ஒன்றின், அந்த அத்தியாயத்தின்படியோ அல்லது பிரிவின்படியோவான நடவடிக்கை எதனையும் பொறுத்து தாமே ஒரு விண்ணப்பதாரராக இல்லாத அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளி ஒவ்வொருவரும், நடவடிக்கைக்கு ஒரு தரப்பினராக ஆக்கப்படுதல் வேண்டும்.

**(2)** பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அவ்வாறு நடவடிக்கைக்கு ஒரு தரப்பினராக ஆக்கப்பட்ட ஓர் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளி, அவர் நடவடிக்கையில் தோற்றமளித்து அதில் பங்குபெற்றாலன்றி செலவுத்தொகை எதற்கும் உள்ளாக்கப்படுதலாகாது.

Evidence of entries in register, etc., and things done by the Registrar.

69. (1) A copy of any entry in the register or of any document referred to in sub-section (*1*) of section 78 purporting to be certified by the Registrar and sealed with the seal of the Geographical Indications Registry shall be admitted in evidence in all courts and in all proceedings without further proof or production of the original.

(2) A certificate purporting to be under the hand of the Registrar as to any entry, matter or thing that he is authorised by this Act or the rules to make or do shall be prima facie evidence of the entry having been made, and of the contents thereof, or of the matter or things having been done or not done.

Registrar and other officers not compellable to produce register, etc.

70. The Registrar or any officer of the Geographical Indications Registry shall not, in any legal proceedings to which he is not a party, be compellable to produce the register or any other document in his custody, the contents of which can be proved by the production of a certified copy issued under this Act or to appear as a witness to prove the matters therein recorded unless by order of [illegible]

Power to require goods to show indication of origin.

71. (1) The Central Government may, by notification in the Official Gazette, require that goods of any class specified in the notification which are made or produced beyond the limits of India and imported into India, or, which are made or produced within the limits of India, shall, from such date as may be appointed by the notification not being less than three months from its issue, have applied to them an indication of the country or place in which they were made or produced, or of the name and address of the manufacturer or the person for whom the goods were manufactured.

(2) The notification may specify the manner in which such indication shall be applied, that is to say, whether to goods themselves or in any other manner, and the times or occasions on which the presence of the indication shall be necessary, that is to say, whether on importation only, or also at the time of sale, whether by wholesale or retail or both.

**69. (1)** பதிவேட்டிலுள்ள பதிவு எதனின் அல்லது பதிவாளரால் உறுதிச்சான்றிடப்பட வேண்டியதாகவும் புவியியல் குறியீடுகள் பதிவகத்தின் இலச்சினையுடன் இலச்சினையிடப்பட்டதாகவும் புலப்படும் 78 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆவணம் எதனின் படி ஒன்று, அனைத்து நீதிமன்றங்களிலும் அனைத்து நடவடிக்கைகளிலும் மேற்கொண்டு மெய்ப்பிப்பு அல்லது முதன்மையை முன்னிடுவது அல்லாமல் சான்றில் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பதிவேட்டின் பதிவுகள் முதலான-வற்றுக்கும் பதிவாளரால் செய்யப்பட்ட செயல்களுக் -குமானச் சான்று.

(2) இந்தச் சட்டத்தாலோ விதிகளாலோ செய்வதற்கு அல்லது மேற்கொள்வதற்கு அவர் அதிகாரமளிக்கப்பெற்ற பதிவு, பொருட்பாடு அல்லது செய்கை எதனையும் பற்றி பதிவாளரின் கையொப்பமிட்டு இருப்பதாகப் புலப்படும் உறுதிச்சான்று ஒன்று, செய்யப்பட்டிருக்கும் பதிவுக்கும், அதனின் உள்ளடக்கங்களுக்கும், அல்லது செய்யப்பட்டிருக்கும் அல்லது செய்யப்படாதிருக்கும் பொருட்பாடு அல்லது செயல்களுக்கு முதல் நோக்கிலேயே சான்றாக இருத்தல் வேண்டும்.

**70.** புவியியல் குறியீடுகள் பதிவகத்தின் பதிவாளரோ அல்லது பிற அலுவலரோ, அவர் ஒரு தரப்பினராக இல்லாத சட்ட நடவடிக்கை எதிலும், சிறப்புக் காரணத்திற்காகச் செய்யப்படும் நீதிமன்ற ஆணையினாலன்றி, இந்தச் சட்டத்தின்படியான உறுதிச்சான்றளிக்கப்பட்ட படி ஒன்றை முன்னிடுவதன் மூலம் உள்ளடக்கங்களை மெய்ப்பிக்க முடிகிறதான தம் பொறுப்பிலுள்ள பதிவேடு அல்லது பிற ஆவணம் எதனையும் முன்னிடும்படியோ அல்லது அதிலுள்ள பொருட்பாடுகளை மெய்ப்பிப்பதற்கு ஒரு சான்றளிப்பவராகத் தோன்றும்படியோ கட்டாயப்படுத்துதல் ஆகாது.

பதிவாளரும் பிற அலுவலர்களும் பதிவேடு முதலானவற்றை முன்னிடும்படி கட்டாயப்படுத்தப் படுதலாகாது.

**71. (1)** மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்திய எல்லைகளுக்கு அப்பால் செய்யப்பட்டு அல்லது உற்பத்தி செய்யப்பட்டு இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்டவையான, அல்லது, இந்திய எல்லைகளுக்குள் செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்டவையான அந்த அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வகை எதிலுமான சரக்குகள், அறிவிக்கை வெளியான தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குக் குறைவாக இல்லாத அவ்வறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியிலிருந்து, எந்த நாட்டில் அல்லது இடத்தில் அவை செய்யப்பட்டனவோ அல்லது உற்பத்தி செய்யப்பட்டனவோ அந்த நாட்டின் அல்லது இடத்தின் அல்லது அந்தச் சரக்குகள் எந்த உற்பத்தியாளருக்காக அல்லது நபருக்காக உற்பத்தி செய்யப்பட்டனவோ அந்த உற்பத்தியாளரின் அல்லது நபரின் பெயர் அல்லது முகவரியில் குறியீடு ஒன்று அவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று வேண்டுறுத்தலாம்.

சரக்குகள், தொடக்கத்தின் குறியீட்டைக் காட்டும்படி வேண்டுறுத்து-வதற்கான அதிகாரம்.

(2) அறிவிக்கையானது, எந்த முறையில், அத்தகைய குறியீடு பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதை, அதாவது, சரக்குகளுக்காகவோ அல்லது வேறு எந்த முறையிலுமோ என்பதையும், குறியீடு இருக்கத் தேவையான காலங்கள் அல்லது சந்தர்ப்பங்கள், அதாவது இறக்குமதி செய்கையில் மட்டுமா அல்லது விற்பனையின் போது மொத்த விற்பனை வாயிலாகவா அல்லது சில்லரை விற்பனை வாயிலாகவா அல்லது அவை இரண்டிலுமா என்பதையும் கூட குறித்துரைக்கலாம்.

(3) No notification under this section shall be issued, unless application is made for its issue by persons or associations substantially representing the interests of dealers in, or manufacturers, producers, or users of, the goods concerned, or unless the Central Government is otherwise convinced that it is necessary in the public interest to issue the notification, with or without such inquiry, as the Central Government may consider necessary.

(4) The provisions of section 23 of the General Clauses Act, 1897 shall apply to the issue of a notification under this section as they apply to the making of a rule or bye-law the making of which is subject to the condition of previous publication. 10 /1897.

(5) A notification under this section shall not apply to goods made or produced beyond the limits of India and imported into India, if in respect of those goods, the Commissioner of Customs is satisfied at the time of importation that they are intended for exportation whether after transhipment in or transit through India or otherwise.

Certificate of validity.

72. If in any legal proceedings for rectification of the register before the [1][High Court] a decision is on contest given in favour of the registered proprietor or, as the case may be, authorised user of the geographical indication on the issue as to the validity of the registration of the geographical indication or the authorised user, the [1][High Court] may grant a certificate to that effect, and if such a certificate is granted, then, in any subsequent legal proceeding in which the said validity comes into question the said proprietor or the authorised user, as the case may be, on obtaining a final order or judgment in his favour affirming validity of the registration of the geographical indication or the authorised user, as the case may be, shall unless the said final order or judgment for sufficient reason directs otherwise, be entitled to his full cost charges and expenses as between legal practitioner and client.

1. Subs. by Act 33 of 2021, s. 22, for "Appellate Board" (w.e.f. 4-4-2021).

(3) இந்தப் பிரிவின்படியான அறிவிக்கை எதுவும், அதனை வெளியிடுவதற்காக, தொடர்புடைய சரக்குகளில் உள்ள வணிகர்களின், அல்லது அதனை உற்பத்தி செய்பவர்கள், விளைவிப்பவர்கள் அல்லது பயன்படுத்துபவர்கள் ஆகியோரின் உரித்தங்களைக் கணிசமாகச் சார்பாற்றம் செய்கிற நபர்களால் அல்லது சங்கங்களால் விண்ணப்பம் செய்யப்பட்டாலன்றி, அல்லது மைய அரசு, தேவையெனக் கருதும் அத்தகைய விசாரணையுடனோ அல்லது இல்லாமலோ, அறிவிப்பு வெளியிடுவது பொது நலனில் தேவையானது என்று அரசைப் பிறவாறாக நம்ப வைத்தாலன்றி, வெளியிடப்படுதலாகாது.

10/1897. (4) 1897 ஆம் ஆண்டு பொது வகையங்கள் விளக்கச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் வகையங்கள், இந்தப் பிரிவின்படி அறிவிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு, அதனைச் செய்வது முந்தைய வெளியீட்டின் வரைக்கட்டுக்கு உட்பட்டிருக்கும் ஒரு விதியை அல்லது துணைவிதியைச் செய்வதற்கும் பொருந்துவது போன்று பொருந்தும்.

(5) இந்தப் பிரிவின்படியான அறிவிக்கை ஒன்று, இந்திய எல்லைகளுக்கு அப்பால் செய்யப்பட்டு, அல்லது உற்பத்தி செய்யப்பட்டு, இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளுக்கு, அந்தச் சரக்குகள் பொறுத்து, இறக்குமதி சமயத்தில் இந்தியாவில் அனுப்பப்பட்டு அல்லது அதன் வழியாக அனுப்பப்படும்போது அல்லது பிறவாறாக அவை ஏற்றுமதி செய்வதற்கு என எண்ணப்பட்டவை என்று சுங்க ஆணையர் தெளிவுறக்காண்பாராயின் பொருந்தாது.

72. பதிவேட்டினைத் திருத்தியமைப்பதற்காக [1][உயர்நீதிமன்றத்தின்] முன்புள்ள சட்ட நடவடிக்கைகள் எவற்றிலும் முடிவு ஒன்று வாதத்தில் புவியியல் குறியீட்டின் அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் பதிவு பற்றிய பிரச்சினையிலுள்ள புவியியல் குறியீட்டின் பதிவுபெற்ற உரிமையாளர் அல்லது, நேர்வுக்கேற்ப, அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளி சார்பாக கொடுக்கப்பட்டிருக்குமாயின், [1][உயர்நீதிமன்றம்], அந்தப் படிக்கு ஓர் உறுதிச்சான்றினை வழங்கலாம், மற்றும் அத்தகையதொரு உறுதிச்சான்று வழங்கப்படுமாயின், பின்னர், மேற்சொன்ன செல்லுந்தன்மை வாதத்துக்கு வரும் பிந்திய சட்ட நடவடிக்கை எதிலும் மேற்சொன்ன உரிமையாளர், அல்லது, நேர்வுக்கேற்ப, அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியின் பதிவின் செல்லுந்தன்மையை உறுதிசெய்து அவருக்கு அனுகூலமான இறுதி ஆணை அல்லது தீர்ப்பாணை ஒன்றைப் பெறுவதன் பேரில், மேற்சொன்ன இறுதி ஆணையோ தீர்ப்பாணையோ போதிய காரணத்திற்காக பிறவாறாக பணித்தாலன்றி, சட்டத் தொழிலாற்றுநருக்கும் கட்சிக்காரருக்கும் இடையே தம் முழு செலவுத்தொகைகளுக்கும் செலவுக்கும் உரிமை கொண்டவராவார். செல்லுந்தன்மைக்-கான உறுதிச்சான்று.

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ''மேல்முறையீட்டு வாரியம்''என்பதற்கு, மாற்றாக (04–04–2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

Groundless threats of legal proceedings.

73. (*1*) Where a person, by means of circulars, advertisements or otherwise, threatens a person with an action or proceeding for infringement of a geographical indication which is registered, or alleged by the first-mentioned person to be registered, or with some other like proceeding, a person aggrieved may, whether the person making the threats is or is not the registered proprietor or the authorised user of the geographical indication, bring a suit against the first-mentioned person and may obtain a declaration to the effect that the threats are unjustifiable, and an injunction against the continuance of the threats and may recover such damages (if any) as he has sustained, unless the first-mentioned person satisfies the court that the geographical indication is registered and that the acts in respect of which the proceedings were threatened, constitute, or, if done, would constitute, an infringement of the geographical indication.

(2) The last preceding sub-section does not apply if the registered proprietor of the geographical indication or an authorised user thereof with due diligence commences and prosecutes an action against the person threatened for infringement of the geographical indication.

(3) Nothing in this section shall render a legal practitioner or a registered geographical indications agent liable to an action under this section in respect of an act done by him in his professional capacity on behalf of a client.

(4) A suit under sub-section (*1*) shall not be instituted in any court inferior to a district court.

Address for service.

74. An address for service stated in an application or notice of opposition shall, for the purposes of the application or notice of opposition be deemed to be the address of the applicant or opponent, as the case may be, and all documents in relation to the application or notice of opposition may be served by leaving them at or sending them by post to the address for service of the applicant or opponent, as the case may be.

**73.** (1) நபர் ஒருவர், சுற்றறிக்கைகள், விளம்பரங்கள் வாயிலாகவோ பிறவாறாகவோ, பதிவுசெய்யப்பட்ட அல்லது முதலில் சொல்லப்பட்ட நபரால் பதிவு செய்யப்படவுள்ளதாக சாட்டுரைக்கப்பட்ட ஒரு புவியியல் குறியீட்டினை மீறுவதற்காக செயல் அல்லது நடவடிக்கை ஒன்றினால் அல்லது அது போன்ற வேறொரு நடவடிக்கையால் ஒரு நபரை அச்சுறுத்துகிறவிடத்து, குறையுற்ற ஒரு நபர், அச்சுறுத்தலைச் செய்கிற நபர் புவியியல் குறியீட்டின் பதிவுபெற்ற உரிமையாளராகவோ அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியாகவோ இருப்பினும் இல்லாவிடினும், முதலில் சொல்லப்பட்ட நபர் புவியியல் குறியீடானது பதிவு செய்யப்பட்டது என்றும் எந்தச் செயல்கள் பொறுத்து நடவடிக்கைகள் அச்சுறுத்தப்பட்டனவோ அந்தச் செயல்கள், புவியியல் குறியீட்டின் ஒரு மீறுகையாக அமைகிறது அல்லது அது செய்யப்படுமாயின் அவ்வாறு அமையக்கூடும் என்றும் நீதிமன்றம் மனநிறைவடையச் செய்தாலன்றி, முதலில் சொல்லப்பட்ட நபருக்கு எதிராக உரிமைவழக்கு ஒன்றைக் கொண்டுவரலாம் மற்றும் அச்சுறுத்தல்கள் நியாயமற்றது என்றபடிக்கு விளம்புகை ஒன்றையும் அச்சுறுத்தல்கள் தொடர்வதற்கு எதிராக உறுத்துக்கட்டளை ஒன்றையும் பெறலாம் மற்றும் தாம் அடைந்திருந்த அத்தகைய இழப்பீடுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைத் தண்டல் செய்யலாம்.

சட்டமுறை நடவடிக்கைகள் பற்றி ஆதாரமற்ற அச்சுறுத்தல்கள்.

(2) புவியியல் குறியீட்டின் பதிவுபெற்ற உரிமையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளி, உரிய சிரத்தையுடன் புவியியல் குறியீட்டு மீறுகைக்காக அச்சுறுத்திய நபருக்கு எதிராக நடவடிக்கை ஒன்று தொடங்கி நடத்துவாராயின் கடைசியாக முந்தின உட்பிரிவு பொருந்தாது.

(3) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், ஒரு சட்டத் தொழிலாற்றுநரை அல்லது ஒரு பதிவுபெற்ற புவியியல் குறியீடுகள் முகவரை, ஒரு கட்சிக்காரர் சார்பாக தம் தொழில்முறைத் திறனில் தம்மால் செய்யப்பட்ட செயல் ஒன்று பொறுத்து இந்தப் பிரிவின்படி நடவடிக்கை ஒன்றுக்கு உள்ளாக்குதலாகாது.

(4). (1) ஆம் உட்பிரிவின்படியான உரிமைவழக்கு ஒன்று, ஒரு மாவட்ட நீதிமன்றத்துக்குக் கீழமைந்த நீதிமன்றம் எதிலும் தொடரப்படுதலாகாது.

**74.** விண்ணப்பம் ஒன்றிலோ அல்லது எதிர்த்தரப்பு அறிவிப்பிலோ கூறப்படும் சார்வுக்கான முகவரி ஒன்று, விண்ணப்பத்தின் அல்லது எதிர்த்தரப்பு அறிவிப்பின் நோக்கங்களுக்கு, விண்ணப்பதாரரின் அல்லது, நேர்வுக்கேற்ப, எதிர்த்தரப்பினரின் முகவரியாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் விண்ணப்பம் அல்லது எதிர்த்தரப்பு அறிவிப்பு தொடர்பான அனைத்து ஆவணங்களும் விண்ணப்பதாரரின் அல்லது, நேர்வுக்கேற்ப எதிர்த்தரப்பினரின் சார்வுக்கான முகவரியில் அவற்றை விட்டுவிடுவதன் மூலம் அல்லது அஞ்சல் வழி அனுப்பிவைப்பதன் மூலம் அவை சார்வு செய்யப்படலாம்.

சார்வு செய்வதற்கான முகவரி.

Trade usages, etc., to be taken into consideration.

75. In any proceeding relating to a geographical indication, the [1][Registrar or the High Court, as the case may be,] shall admit evidence of the usages of the trade concerned and of any relevant geographical indication legitimately used by other persons.

Agents.

76. Where, by or under this Act, any act, other than the making of an affidavit, is required to be done before the Registrar by any person, the act may, subject to the rules made in this behalf, be done instead of by that person himself, by a person duly authorised in the prescribed manner, who is,—

(a) a legal practitioner, or

(b) a person registered in the prescribed manner as a geographical indications agent, or

(c) a person in the sole and regular employment of the principal.

Indexes.

77. There shall be kept under the directions and supervision of the Registrar,—

(a) an index of registered geographical indications.

(b) an index of geographical indications in respect of which applications for registration are pending.

(c) an index of the names of the proprietors of registered geographical indications, and

(d) an index of the names of authorised users.

Documents open to public inspection.

78. (1) The following documents, subject to such conditions as may be prescribed, be open to public inspection at the Geographical Indications Registry, namely:—

---

1. Subs. by Act 33 of 2021, s. 22, for "tribunal" (w.e.f. 4-4-2021).

**75.** புவியியல் குறியீடு ஒன்று தொடர்பான நடவடிக்கை எதிலும், [1][பதிவாளரோ அல்லது நேர்வுக்கேற்ப உயர்நீதிமன்றமோ] தொடர்புடைய வணிக வழக்காறுகளின் மற்றும் பிற நபர்களால் சட்டமுறையாகப் பயன்படுத்தப்படும் தொடர்புற்ற புவியியல் குறியீடு எதனின் சான்றினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். வணிக வழக்காறுகள் முதலானவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல்.

**76.** இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ ஆணை மொழியாவணம் ஒன்றை ஆக்குவதல்லாத பிற செயல் எதுவும், நபர் எவராலும் பதிவாளரின் முன்பு செய்யப்பட வேண்டுறுத்தப்பட்டிருக்குமிடத்து, அந்தச் செயல், இதற்கென வகுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, அந்த நபராலேயே செய்யப்படுவதற்குப் பதிலாக— முகவர்கள்.

(அ) ஒரு சட்டத் தொழிலாற்றுநராக, அல்லது

(ஆ) புவியியில் குறியீடுகள் முகவராக வகுத்துரைக்கப்பட்ட முறையில் பதிவுசெய்யப்பெற்ற ஒரு நபராக, அல்லது

(இ) தொழில் முதல்வரின் தனிப்பட்ட மற்றும் முறையான பணியில் உள்ள ஒரு நபராக,

இருக்கிற வகுத்துரைக்கப்பட்ட முறையில் உரியவாறு அதிகாரமளிக்கப்பெற்ற ஒரு நபரால் செய்யப்படலாம்.

**77.** பதிவாளரின் பணிப்புரைகளுக்கும் கண்காணிப்பிற்கும் கீழ்,— பட்டியல்கள்.

(அ) பதிவுபெற்ற புவியியல் குறியீடுகளின் பட்டியல்கள் ஒன்று,

(ஆ) எந்தக் புவியியல் குறியீடுகள் பொறுத்து பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றனவோ அந்தப் புவியியல் குறியீடுகளின் பட்டியல் ஒன்று,

(இ) பதிவுபெற்ற புவியியல் குறியீடுகளின் உரிமையாளர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று, மற்றும்

(ஈ) அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் ஒன்று

வைத்து வரப்பட்டு இருத்தல் வேண்டும்.

**78. (1)** பின்வரும் ஆவணங்கள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, புவியியல் குறியீடுகள் பதிவகத்தில், பொது மக்கள் பார்வையிடுவதற்காக வைக்கப்படலாம், அவையாவன:— பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்படும் ஆவணங்கள்.

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் ''தீர்ப்பாயம்'' என்பதற்கு, மாற்றாக (04-04-2021 முதல் செல்திறம் பெறுமாறு) அமைப்பட்டது.

(a) the register and any document upon which any entry in the register is based;

(b) every notice of opposition to the registration of a geographical indication, application for rectification before the Registrar, counter-statement thereto, and any affidavit or document filed by the parties in any proceedings before the Registrar;

(c) the indexes mentioned in section 77; and

(d) such other documents as the Central Government may, by notification in the Official Gazette, specify:

Provided that where such register is maintained wholly or partly on computer, the inspection of such register under this section shall be made by inspecting the computer print out of the relevant entry in the register so maintained on computer.

(2) Any person may, on an application to the Registrar and on payment of such fee as may be prescribed, obtain a certified copy of any entry in the register or any document referred to in sub-section (1).

Reports of Registrar to be placed before Parliament.

79. The Central Government shall cause to be placed before both Houses of Parliament once a year a report respecting the execution by or under this Act.

Fees and surcharge.

80. (1) There shall be paid in respect of applications and registrations and other matters under this Act such fees and surcharge as may be prescribed by the Central Government.

(2) Where a fee is payable in respect of the doing of an act by the Registrar, the Registrar shall not do that act until the fee has been paid.

(3) Where a fee is payable in respect of the filing of a document at the Geographical Indications Registry, the document shall be deemed not to have been filed at the registry until the fee has been paid.

Savings in respect of certain matters in Chapter VIII.

81. Nothing in Chapter VIII shall—

(அ) பதிவேட்டிலுள்ள பதிவு எதுவும், எந்தப் பதிவேடு மற்றும் ஆவணம் எதனின் அடிப்படையாகக் கொண்டிருக்கிறதோ அந்தப் பதிவேடு மற்றும் ஆவணம் எதுவும்;

(ஆ) புவியியில் குறியீட்டிற்கான எதிர்ப்பு அறிவிப்பு ஒவ்வொன்றும், திருத்தியமைப்பதற்காக பதிவாளரின் முன்புள்ள விண்ணப்பம் மற்றும் பதிவாளரின் முன்புள்ள நடவடிக்கைகள் எவற்றிலும் தரப்பினர்களால் முன்னிடப்படும் ஆணையுறுதி ஆவணம் அல்லது ஆவணம் எதுவும்;

(இ) 77 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட பட்டியல்கள்; மற்றும்

(ஈ) மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கும் அத்தகைய பிற ஆவணங்கள்:

**வரம்புரையாக:** அத்தகைய பதிவேடானது, முழுவதுமாகவோ பகுதியளவிலோ கணினியில் வைத்து வரப்படுகிறவிடத்து, அவ்வாறு கணினியில் வைத்து வரப்படும் பதிவேட்டில் உள்ள தொடர்புள்ள பதிவின் கணினி அச்சினைப் பார்வையிடுவதன் மூலம் இந்தப் பிரிவின்படி அத்தகைய பதிவேட்டினைப் பார்வையிடுதல் வேண்டும்.

(2) எந்த நபரும், பதிவாளருக்குச் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின் பேரிலும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதன் பேரிலும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பதிவேடு அல்லது ஆவணம் எதிலுமுள்ள பதிவின் உறுதிச்சான்றிடப்பட்ட படி ஒன்றைப் பெறலாம்.

பதிவாளரின் விவரஅறிக்கை, நாடாளுமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல்.

**79.** மைய அரசு, இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ செய்யப்பட்ட நிறைவேற்றுகை பொறுத்த விவரஅறிக்கை ஒன்றை ஆண்டுக்கு ஒருமுறை நாடாளுமன்றத்தின் ஈரவைகள் முன்பும் வைக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.

கட்டணங்களும் மேல்கட்டணமும்.

**80.** (1) இந்தச் சட்டத்தின்படியான விண்ணப்பங்கள் மற்றும் பதிவுகள் மற்றும் பிற பொருட்பாடுகள் பொறுத்து, மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணங்களும் மேல்கட்டணங்களும் செலுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) பதிவாளரால் செய்யப்படும் செயல் ஒன்றைச் செய்வது பொறுத்து கட்டணம் ஒன்று செலுத்தத்தக்கதாகிறவிடத்து, அந்தக் கட்டணம் செலுத்தப்படும் வரை, பதிவாளர் அந்தச் செயலைச் செய்தலாகாது.

(3) புவியியல் குறியீடுகள் பதிவகத்தில் ஆவணம் ஒன்றை முன்னிடுவது பொறுத்து கட்டணம் ஒன்று செலுத்தத்தக்கதாகிறவிடத்து, கட்டணம் செலுத்தப்படும் வரை அந்த ஆவணம், பதிவகத்தில் முன்னிடப்பட்டிருக்கவில்லை என கொள்ளப்படுதல் வேண்டும்.

VIII ஆம் அத்தியாயத்தி–லுள்ள குறித்தசில பொருட்பாடுகள் பொறுத்து காப்புரை.

**81.** VIII ஆம் அத்தியாயத்திலுள்ள எதுவும்,–

(a) exempt any person from any suit or other proceeding which might, but for anything in that Chapter, be brought against him, or

(b) be construed so as to render liable to any prosecution or punishment any servant of a master resident in India who in good faith acts in obedience to the instructions of such master, and, on demand made by or on behalf of the prosecutor, has given full information as to his master and as to the instructions which he has received from his master.

Declarations as to title of geographical indication not registerable under the Registration Act, 1908.

82. Notwithstanding anything contained in the Registration Act, 1908, no document declaring or purporting to declare any title of a person to a geographical indication other than a registered geographical indication shall be registered under that Act. 16 /1908.

Government to be bound.

83. The provisions of this Act shall be binding on the Government.

Special provisions relating to applications for registration from citizens of convention countries.

84. (1) With a view to the fulfilment of a treaty, convention or arrangement with any country or a country which is a member of a group of countries or union of countries or Inter-Governmental Organisations outside India which affords to citizens of India similar privileges as granted to its own citizens, the Central Government may, by notification in the Official Gazette, declare such country or group of countries or union of countries or Inter-Governmental Organisations to be a convention country or convention countries for the purposes of this Act.

(அ) அந்த அத்தியாயத்தில் உள்ள எதுவும் இல்லாதிருந்தால் அவருக்கு எதிராகக் கொண்டுவந்திருக்கக்கூடிய உரிமைவழக்கு அல்லது பிற நடவடிக்கை எதிலுமிருந்தும் நபர் எவருக்கும் விலக்களித்தலாகாது, அல்லது

(ஆ) இந்தியாவில் குடியிருக்கும் ஒரு பணித்தலைவரை, அத்தகைய பணித்தலைவரின் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிந்து நல்லெண்ணத்தில் செயலுறுகிற பணியாள், குற்றவழக்கு அல்லது தண்டனை எதற்கும் உள்ளாக்கும் வகையிலும் மற்றும் குற்றவழக்கு நடத்துபவரால் அல்லது அவர் சார்பாக செய்யப்பட்ட கோரிக்கையின் பேரிலும் தம் பணித்தலைவர் பற்றியும் தம் பணித்தலைவரிடமிருந்து தாம் பெற்றிருக்கிற அறிவுரைகள் பற்றியும் முழு தகவல்களையும் கொடுத்திருக்கிற பணியாள் எவரையும் குற்றவழக்கு அல்லது தண்டனை எதற்கும் உள்ளாக்கும் வகையில் பொருள் கொள்ளப்படுதலாகாது.

16/1908. **82. 1908** ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒரு பதிவுபெற்ற புவியியல் குறியீடாக இல்லாத வேறொரு புவியியல் குறியீட்டின் உரிமைமூலம் எதனையும் விளம்புகை செய்கிற அல்லது விளம்புகை செய்வதாகப் புலப்படுகிற ஆவணம் எதுவும் இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதலாகாது. **1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யத்– தக்கதல்லாத புவியியல் குறியீட்டின் உரிமைமூலம் குறித்து விளம்புகை.**

**83.** இந்தச் சட்டத்தின் வகையங்கள் அரசைக் கட்டுப்படுத்தும். அரசு கட்டுப்படுதல்.

**84. (1)** இந்தியாவிற்கு வெளியேயுள்ள எந்த ஒரு நாடு அல்லது நாடுகளின் கூட்டமைப்பின் அல்லது நாடுகளின் ஒன்றியத்தின் அல்லது அரசிடை அமைப்புகளின் ஓர் உறுப்பினராக இருக்கும் ஒரு நாடு, தம் சொந்தக் குடிமக்களுக்கு வழங்கப்படுவது போன்று அதே மாதிரியான மதிப்புரிமைகளை இந்தியக் குடிமக்களுக்கு அளிக்கிறதோ அந்த நாடு அல்லது நாடுகளின் கூட்டமைப்பின் அல்லது நாடுகளின் ஒன்றியத்தின் அல்லது அரசிடை அமைப்புகளின் ஓர் உறுப்பினராக இருக்கும் நாடு எதனுடனுமான உடன்படிக்கை, இணங்காறு அல்லது ஏற்பாடு ஒன்றை செயற்படுத்தும் பொருட்டு, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அத்தகைய நாட்டினை அல்லது நாடுகளின் கூட்டமைப்பினை அல்லது நாடுகளின் ஒன்றியத்தை அல்லது அரசிடை அமைப்புகளை இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஓர் இணங்காறு நாடாகவோ அல்லது இணங்காறு நாடுகளாகவோ இருப்பதாக விளம்புகை செய்யலாம். இணங்காறு நாடுகளில் குடி மக்களிடமிருந்து பெறப்படும் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தொடர்பான சிறப்பு வகையங்கள்.

(2) Nothing contained in this Act or the Trade Marks Act, 1999 shall prevent a continued and similar use of geographical indication relating to a country or a country which is a member of a group of countries or union of countries or any Inter-Governmental Organisations, as the case may be, notified under sub-section (*1*) identifying wines or spirits in connection with goods by any citizen or domiciliary of such country who has used that geographical indication in continuous manner with regard to such goods or any goods relating to such goods, as the case may be, in any part of the territory of that country either— 47/1999. .

(a) for at least ten years preceding the 15th day of April, 1994;

or

(b) in good faith preceding the date referred to in clause (*a*).

Provision as to reciprocity.

85. Where any country or a country which is a member of a group of countries or union of countries or any Inter-Governmental Organisation specified by the Central Government in this behalf by notification in the Official Gazette does not accord to citizens of India the same rights in respect of the registration and protection of geographical indications as it accords to its own nationals, no nationals of such country or a country which is a member of a group of countries or union or countries or Inter-Governmental Organisations, as the case may be, shall be entitled—

(a) to apply for the registration of, or be registered as the proprietor of geographical indication;

(b) to apply for registration or be registered as an authorised user of a geographical indication.

Powers of Central Government to remove difficulties.

86. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order published in the Official Gazette, make such provisions not inconsistent with the provisions of this Act as may appear to be necessary for removing the difficulty:

47/1999. (2) இந்தச் சட்டத்திலோ அல்லது 1999 ஆம் ஆண்டு வணிகக் குறிகள் சட்டத்திலோ அடங்கியுள்ள எதுவும் ஒரு நாடு அல்லது (1) ஆம் உட்பிரிவின்படி, அறிவிக்கை செய்யப்பட்ட நேர்வுக்கேற்ப, நாடுகளின் கூட்டமைப்பின் அல்லது நாடுகளின் ஒன்றியத்தின் அல்லது அரசிடை அமைப்புகளின் ஓர் உறுப்பினராக இருக்கும் ஒரு நாடு தொடர்பான புவியியல் குறீயீட்டினை—

(அ) 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் நாளுக்கு முந்தைய குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு; அல்லது

(ஆ) நல்லெண்ணத்தில் (அ) கூறில் குறிப்பிடப்பட்ட தேதிக்கு முந்தைய

அந்த நாட்டின் ஆட்சிநிலவரைப் பகுதி எதிலும், அத்தகைய சரக்குகள் அல்லது, அத்தகைய சரக்குகள் தொடர்பான சரக்குகள் எதனையும் பொறுத்து நேர்வுக்கேற்ப, பயன்படுத்தியிருக்கிற அத்தகைய நாட்டின் குடிமகன் அல்லது குடியிருப்பவர் எவராலும் சரக்குகளுடன் மதுவினை அல்லது சாராயத்தை அறிந்து தொடர்ச்சியான மற்றும் அதேபோன்று பயன்படுத்துவதைத் தடை செய்தலாகாது.

85. எந்த நாடும் அல்லது மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக இதற்கென குறித்துரைக்கும் நாடுகளின் கூட்டமைப்பு அல்லது நாடுகளின் ஒன்றியம் ஒன்றின் அல்லது அரசிடை அமைப்பு எதினின் ஓர் உறுப்பினராக இருக்கும் ஒரு நாடும், தம் சொந்த நாட்டவருக்கு அது அளிப்பது போன்று புவியியல் குறியீடு பதிவு செய்வது மற்றும் பாதுகாப்பது பொறுத்து அதே உரிமைகளை இந்தியக் குடிமக்களுக்கு அளிக்காதவிடத்து, அத்தகைய நாட்டின் அல்லது, நேர்வுக்கேற்ப, நாடுகளின் கூட்டமைப்பு அல்லது நாடுகளின் ஒன்றியம் அல்லது அரசிடை அமைப்புகளின் ஓர் உறுப்பினராக இருக்கும் ஒரு நாட்டின் நாட்டவர் எவரும்— எதிரீடு பற்றிய வகையம்.

(அ) புவியியல் குறியீட்டினைப் பதிவு செய்வதற்கு அல்லது அதன் உரிமையாளராகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பம் செய்துகொள்வதற்கு;

(ஆ) புவியியல் குறியீடு ஒன்றினைப் பதிவு செய்வதற்கு, அல்லது அதன் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியாக பதிவு செய்வதற்கு, விண்ணப்பம் செய்துகொள்வதற்கு

உரிமையுடையவராகார்.

86. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு செல்திறம் கொடுப்பதில் இடர்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடும் ஆணை வாயிலாக, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்காகத் தேவைப்படுவதாகத் தோன்றுகிறவாறு, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இராத அத்தகைய வகையங்களைச் செய்யலாம்: இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

Provided that no order shall be made under this section after the expiry of five years from the commencement of this Act.

(2) Every order made under this section shall, as soon as may be after it is made, be laid before each House of Parliament.

Power to make rules.

87. (1) The Central Government may, by notification in the Official Gazette and subject to the condition of previous publication, make rules to carry out the provisions of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) the matters to be included in the Register of Geographical Indications under sub-section (1), and the safeguards to be observed in the maintenance of such register in computer floppies or diskettes under sub-section (2) of section 6;

(b) the manner of incorporation of particulars relating to registration of geographical indications in Part A under sub-section (2) and the manner of incorporation of particulars relating to the registration of the authorised users under sub-section (3) of section7;

(c) the classification of goods and the manner of publication of the alphabetical index of classification of goods and the definite territory or locality or region for the purpose of registration of geographical indications under sub-section (1) of section 8;

(d) the form in which and the manner in which an application for registration of a geographical indication may be made and the fees which may accompany the application under sub-section (1) and the particulars to be made in the statement of producers of goods who proposes to be initially registered with the registration under clause (f) of sub-section (2) of section 11;

**வரம்புரையாக:** இந்தப் பிரிவின்படியான ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கநிலையிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழிவுற்ற பின்பு பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு கூடிய விரைவில், நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

87. (1) மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகவும் முந்தைய வெளியீட்டு வரைக்கட்டிற்கு உட்பட்டும், இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளைச் செய்யலாம். விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுபாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடு அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:—

(அ) 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, புவியியல் குறியீடுகள் பதிவேட்டில் உள்ளாக்கப்பட வேண்டிய பொருட்பாடுகளும் மற்றும் (2) ஆம் உட்பிரிவின்படி கணினி அச்சுகளில் அல்லது தகடுகளில் அத்தகைய பதிவேட்டினை வைத்து வருகையில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு அமைப்புகள்;

(ஆ) 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி, (அ) பகுதியில் புவியியல் குறியீடுகளைப் பதிவு செய்வது தொடர்பான விவரங்களை ஒன்று சேர்க்கும் முறையும் (3) ஆம் உட்பிரிவின்படி அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளிகளைப் பதிவுசெய்வது தொடர்பான விவரங்களை ஒன்று சேர்க்கும் முறையும்;

(இ) 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, புவியியல் குறியீடுகளைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காகச் சரக்குகளை வகைப்படுத்துதலும் சரக்குகளை வகைப்படுத்தும் அகர வரிசைப் பட்டியலையும் மற்றும் வரையறுக்கப்பட்ட ஆட்சிநிலவரை அல்லது வட்டாரப்பகுதி அல்லது வட்டாரம் ஆகியவற்றையும் வெளியிடும் முறையும்;

(ஈ) 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, எந்தப் படிவத்திலும் எந்த முறையிலும் புவியியல் குறியீடு ஒன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒன்று செய்யப்படலாமோ அந்தப் படிவமும் முறையும் மற்றும் விண்ணப்பத்துடன் சேர்ந்திருக்கலாகும் கட்டணங்கள் மற்றும் (2) ஆம் உட்பிரிவின்படி (ஊ) கூறின்படியான பதிவுடன் முதலில் பதிவு செய்யப்படக் கருதும் சரக்குகளை உற்பத்தி செய்வோர் விவரவுரையில் செய்யப்பட வேண்டிய விவரங்கள்;

(e) the manner of publication of advertisement of accepted application, for registration of geographical indications, etc., under sub-section (1), and the manner of notifying the corrections or amendments made in the application under sub-section (2) of section 13;

(f) the manner in which and the fee which may accompany an application and the manner of giving notice under sub-section (1) and the manner of sending counter statement under sub-section (2) and the manner of submission of evidence and the time therefor under sub-section (4) of section 14;

(g) the manner of making application, the time within which such application is to be made and the fee payable with each application, under sub-section (3) and the time within which the Registrar shall send notice and the manner of such notice under sub-section (4) and the form in which and the fee which may accompany an application for renewal to be made under sub-section (3) of section 16;

(h) the manner of making applications under sub-sections (1) and (2), the manner of giving notice under sub-section (4) and the manner of service of notice of rectification under sub-section (2) of section 17;

(i) the manner of making application, the time within which such application is to be made and the fee payable with each application, under sub-section (*3*) and the time within which the Registrar shall send notice and the manner of such notice under sub-section (*4*) and the form in which and the fee which may accompany an application for renewal to be made under sub-section (*5*) of section 18;

(j) the manner of making applications under sub-sections (*1*) and (*2*), the manner of giving notice under sub-section (*4*) and the manner of service of notice of rectification under sub-section (*5*) of section 27;

(உ) 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, புவியியல் குறியீடுகளைப் பதிவு செய்தல் முதலானவற்றுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் விளம்பரத்தை வெளியிடும் முறையும் (2) ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பத்தில் செய்யப்படும் சீர்மைகளையும் திருத்தங்களையும் அறிவிக்கை செய்யும் முறையும்;

(ஊ) 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, எந்தமுறையில் விண்ணப்பம் செய்யப்படலாம் மற்றும் அதனுடன் சேர்ந்திருக்கலாகும் கட்டணம் மற்றும் அறிவிப்பு கொடுக்கும் முறையும் (2) ஆம் உட்பிரிவின்படி எதிர்வாதம் அனுப்பும் முறையும் (4) ஆம் உட்பிரிவின்படி சான்றினைப் பணிந்தனுப்பும் முறையும் அதற்கான காலமும்;

(எ) 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி, பதிவு உறுதிச்சான்றின் படிவமும் (3) ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பதாரருக்கு அறிவிப்பு கொடுக்கும் முறையும்;

(ஏ) 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, ஓர் அதிகாரமளிக்கப்பெற்ற பயனாளியாகப் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் செய்யும் முறையும் (2) ஆம் உட்பிரிவின்படி அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்து விவரங்களையும் ஆவணங்களையும் பணிந்தனுப்பும் முறையும் மற்றும் அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்ந்திருக்கலாகும் கட்டணமும்;

(ஐ) 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி, விண்ணப்பம் செய்யும் முறை, அத்தகைய விண்ணப்பம் எந்தக் காலத்துக்குள் செய்யப்பட வேண்டுமோ அந்தக் காலம் மற்றும் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் செலுத்தத்தக்க கட்டணம் மற்றும் (4) ஆம் உட்பிரிவின்படி எந்தக் காலத்திற்குள் பதிவாளர் அறிவிப்பு அனுப்புதல் வேண்டும் மற்றும் அத்தகைய அறிவிப்பின் முறையும் மற்றும் (5) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட வேண்டிய புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் ஒன்றுடன் சேர்ந்திருக்கும் கட்டணம்;

(ஒ) 27 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்படி, விண்ணப்பங்கள் செய்யும் முறை, (4) ஆம் உட்பிரிவின்படி அறிவிப்பு கொடுக்கும் முறை, மற்றும் (5) ஆம் உட்பிரிவின்படி திருத்தியமைப்பதற்கான அறிவிப்பு சார்வு செய்யும் முறை;

(k) the manner of making an application for correction, etc., under section 28;

(l) the manner of making an application under sub-section (1), the manner of advertising an application under sub-section (1), the time and manner of notice by which an application may be opposed under sub-sections (2) and (3) of section 29;

(m) the manner of advertisement under sub-section (2) of section 30;

[1]* * *

(o) the form in which an application for rectification shall be made, under sub-section (1) of section 34;

(p) the manner of making an application for review under clause (c) of section 60;

(q) the time within which an application is to be made to the Registrar for exercising his discretionary power under section 61;

(r) the manner of making an application and the fee payable therefore under sub-section (1) of section 64;

(s) the manner of authorising any person to act and the manner of registration of a geographical indications agent under section 76;

(t) the fee and surcharge payable for applications and registrations and other matters under sub-section (*1*) of section 80;

(u) any other matter which is required to be, or may be, prescribed.

1. Clause (*n*) omitted by Act 33 of 2021, s. 22 (w.e.f. 4-4-2021).

(ஓ) 28 ஆம் பிரிவின்படி, சீர்செய்வது முதலானவற்றிற்கான விண்ணப்பம் ஒன்று செய்யும் முறை;

(ஔ) 29 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, விண்ணப்பம் ஒன்று செய்யும் முறை (1) ஆம் உட்பிரிவின்படி, விண்ணப்பம் ஒன்று விளம்பரம் செய்யும் முறை மற்றும் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின்படி விண்ணப்பம் ஒன்று எந்த நேரத்திலும் முறையிலும் எதிர்க்கப்படலாமோ அந்த நேரமும் முறையும்;

(க) 30 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி, விளம்பரம் செய்யும் முறை;

(ங) [1][* * * * *]

(ச) 34 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, திருத்தியமைப்பதற்கான விண்ணப்பம் ஒன்று செய்யப்படவேண்டிய படிவம்;

(ஞ) 60 ஆம் பிரிவின் (இ) கூறின் மறுஆய்வுக்கான விண்ணப்பம் ஒன்று செய்யும் முறை;

(ட) 61 ஆம் பிரிவின்படி, தம் உளத்தேர்வு அதிகாரத்தைச் செலுத்துவதற்காக எந்தக் காலத்துக்குள் பதிவாளருக்கு விண்ணப்பம் ஒன்று செய்யப்பட வேண்டுமோ அந்தக் காலஅளவு;

(ண) 64 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, விண்ணப்பம் ஒன்று செய்யும் முறையும் அதற்காக செலுத்தவேண்டிய கட்டணமும்;

(த) 76 ஆம் பிரிவின்படி, ஒரு புவியியல் குறியீடுகள் முகவராகச் செயலுறுவதற்கு நபர் எவருக்கும் அதிகாரமளிக்கும் முறையும் பதிவு செய்யும் முறையும்;

(ந) 80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, விண்ணப்பம் செய்வதற்கும் பதிவு செய்வதற்கும் பிற பொருட்பாடுகளுக்கும் செலுத்தவேண்டிய கட்டணமும் மேல் கட்டணமும்;

(ப) வகுத்துரைக்கப்பட வேண்டுறுத்தப்பட்டுள்ள அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

---

1. சட்ட எண் 33/2021 இன் 22 ஆம் பிரிவினால் (ங) கூறு, (04-04-2021 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

(3) Every rule made by the Central Government under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

**(3)** இந்தச் சட்டத்தின்படி மைய அரசால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது முப்பது நாட்களைக் கொண்ட ஒரு மொத்தக் காலஅளவிற்கு, ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில், அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி செய்யப்படுதலாகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும், அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.